மலர் : 51 இதழ் : 4

தமிழரசு

அக்டோபர் 2020
விலை ரூ. 20/–

50 தமிழரசு 1970-2020

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

அக்டோபர் 1 : தேசிய தன்னார்வ இரத்த தான நாள்

தன்னார்வ இரத்த தானம் செய்து, கொரோனாவுக்கு எதிரான போராட்டத்திற்கு பங்களிப்போம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்
தேசிய தன்னார்வ இரத்த தான நாள் செய்தி

விலைமதிப்பற்ற மனித உயிர்களை காப்பாற்றும் இரத்த தானத்தின் அவசியம் குறித்தும், இரத்த தானம் செய்வது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் முதல் நாள் தேசிய தன்னார்வ இரத்த தான நாளாக கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான தேசிய தன்னார்வ இரத்த தான நாளின் கருப்பொருள் “தன்னார்வ இரத்த தானம் செய்து, கொரோனாவுக்கு எதிரான போராட்டத்திற்கு பங்களிப்போம்” என்பதாகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, அரசு இரத்த வங்கிகளின் சேவைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், அரசு இரத்த வங்கி மற்றும் தன்னார்வ இரத்த கொடையாளர்களை இணைத்திடும் வகையில் சமூக ஊடக முகநூல் உருவாக்கியது, இரத்த தான முகாம்களில் சேகரிக்கப்படும் இரத்தத்தை பாதுகாப்பாக அரசு இரத்த வங்கிகளுக்கு எடுத்து செல்ல 10 அதிநவீன குளிர்சாதன வசதிகளுடன் கூடிய இரத்த தான ஊர்திகள் வழங்கியது, 5 அரசு இரத்த வங்கிகளுக்கு இரத்த பரிமாற்றம் மூலம் பரவும் நோய்களை பரிசோதனை செய்திட நவீன தானியங்கி பரிசோதனை இயந்திரங்கள் வழங்கியது, அரசு இரத்த வங்கிகளுக்கு 107 இரத்த வங்கி குளிர்சாதன பெட்டிகள் வழங்கியது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மேலும், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் மற்றும் தமிழ்நாடு மாநில குருதி பரிமாற்றுக் குழுமம் இணைந்து, தமிழ்நாட்டில் தன்னார்வ இரத்த தானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி வருகிறது. அத்துடன் ஆண்டுதோறும் சிறப்பாக பணியாற்றும் தன்னார்வ இரத்த தான முகாம் அமைப்பாளர்களுக்கும், அரசு இரத்த வங்கி ஊழியர்களுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பாராட்டு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கி கௌரவித்து வருகிறார்கள்.

கோவிட்–19 காலக்கட்டங்களில் தொடர் தன்னார்வ இரத்த கொடையாளர்கள், செஞ்சுருள் சங்கம், நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் கோவிட்–19 தன்னார்வலர்களிடமிருந்து 1,77,500 அலகுகள் இரத்தம் சேகரிக்கப்பட்டு, 1,74,000 அலகுகள் இரத்தம் தேவைப்படும் நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. தன்னார்வ இரத்த கொடையாளர்கள் மூலம் இரத்தத்தை சேகரிப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. நடப்பாண்டில் தன்னார்வ இரத்த தானத்தில் தமிழ்நாடு 100 விழுக்காடு இலக்கினை எய்திட மக்கள் அனைவரும் இரத்த தானம் செய்திட ஆர்வத்துடன் முன்வர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இரத்த தானம் செய்திடுவோம் !
மனித நேயத்தை காத்திடுவோம் !

K. பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம் : புரட்டாசி – ஐப்பசி
அக்டோபர் 2020
மலர் : 51 விலை ரூ.20 இதழ் : 4

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **பொ. சங்கர் இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
சீ. ராஜன்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
எஸ். சீதாலட்சுமி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. கமலா
தேச. கலையரசன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
ச. மஞ்சுளா
மு. மோகனவல்லி
மு. மணிமேகலை
அ. மதன்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாக செலுத்தலாம்.

அதிக புதிய முதலீடுகளை ஈர்த்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கியதில், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

இந்த இதழில்...

- **தமிழ்நாட்டில், 14 புதிய தொழில் நிறுவனங்கள் ரூ.10,055 கோடி மதிப்பீட்டில், தொழில் துவங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தம்**
  மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் முன்னிலையில் 12.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில்துறை சார்பில், கையெழுத்தானது........ 5
- **பொது விநியோகத் திட்டத்தின் "ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை" திட்டம்**
  மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 01.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், 3 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கி திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்........ 16
- **இராமநாதபுரம் மாவட்டத்தில், உணவு பூங்கா, வனக்குடி தொழிற் பூங்கா மற்றும் சக்கரக்கோட்டை தொழிற் பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது**
  மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 22.09.2020 அன்று, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை........ 34
- **பள்ளிக் கல்வித் துறை சார்பில் ரூ.39.90 கோடி மதிப்பீட்டில் "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கட்டடம்"**
  மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்........ 56
- **டுகோபார்ஸ் – அகிம்சையின் அதிசயம்**........ 61

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 21.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் நியாயவிலைக் கடைகள் மூலமாக வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே கொண்டு சென்று விநியோகிக்கும் வகையில் 3,501 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளின் சேவையினை துவக்கி வைக்கும் அடையாளமாக, 7 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளின் வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில், 14 புதிய தொழில் நிறுவனங்கள் ரூ.10,055 கோடி மதிப்பீட்டில், தொழில் துவங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் முன்னிலையில் 12.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில்துறை சார்பில், கையெழுத்தானது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் 12.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில்துறை சார்பில், சென்னை, காஞ்சிபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, இராமநாதபுரம், திருப்பூர், திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் 14 தொழில் நிறுவனங்கள் தங்கள் புதிய முதலீட்டுத் திட்டங்களை ரூ.10,055 கோடி முதலீட்டில் துவங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இத்திட்டங்களின் மூலம், சுமார் 7,000 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும்.

உலகத்தையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக, உலக பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டு, படிப்படியாக மீண்டெழுந்து வரும் இந்த இக்கட்டான சூழ்நிலையில், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை தொடர்ந்து மேம்படுத்திடவும், தொழில் துறையில் தொடர்ந்து முன்னணி மாநிலமாக திகழச் செய்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாடு அரசின் தொழில்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் பயனாக, இந்த நிதியாண்டின் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான முதல் ஆறு மாதங்களில் இந்திய அளவில் மிக அதிக முதலீடுகளை ஈர்த்த முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. 2020ஆம் ஆண்டு செப்டம்பர் வரை, 42 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ரூ.31,464 கோடி முதலீடுகளுக்கு கையெழுத்திடப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, 14 புதிய தொழில் திட்டங்களை, தமிழ்நாட்டில் துவங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டன.

தற்போது நிலவி வரும் சூழ்நிலையின் காரணமாக, இந்த 14 திட்டங்களில், 4 திட்டங்களுக்கு காணொலிக் காட்சி மூலமாகவும், 10 திட்டங்களுக்கு நேரடியாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

காணொலிக் காட்சிகள் மூலமாக கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விவரங்கள்

1) தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில், ரூ.6,300 கோடி முதலீட்டில், சுமார் 2,420 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், JSW Renewable Energy Limited நிறுவனத்தின், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (Renewable Energy) திட்டங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

2) ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த Mantra Data Centres நிறுவனம், சென்னைக்கு அருகில் ரூ.750 கோடி முதலீட்டில் சுமார் 550 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தகவல் தரவு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

3) Aosheng Hitech Limited நிறுவனம், ரூ.200 கோடி முதலீட்டில் சுமார் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கார்பன் ஃபைபர் தகடுகள் உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

4) சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த Vans Chemistry நிறுவனம், ரூ.50 கோடி முதலீட்டில் சுமார் 750 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மின் கழிவு மேலாண்மை வசதி, மறுசுழற்சி மற்றும் விலை மதிப்புமிக்க உலோகங்களை சுத்திகரித்தல் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

நேரடியாக கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விவரங்கள்

5) காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் ஒரகடம் தொழிற் பூங்காவில், Apollo Tyres நிறுவனம், ரூ.505 கோடி முதலீட்டில், சுமார் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், டயர்கள் உற்பத்தி விரிவாக்க திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

6) காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் Hiranandani குழுமத்தைச் சேர்ந்த Greenbase Industrial Parks நிறுவனம், ரூ.750 கோடி முதலீட்டில், சுமார் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Industrial Logistics Park அமைத்திடும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

7) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த TPI Composites நிறுவனம், ரூ.300 கோடி முதலீட்டில், சுமார் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Wind Blades உற்பத்தி விரிவாக்கத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். இந்நிறுவனம், 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது, உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது. இப்பொழுது இந்நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்திற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது.

8) Li-Energy நிறுவனம், ரூ.300 கோடி முதலீட்டில், சுமார் 325 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின்சார வாகனங்களுக்கான மின்கலன் பொதிகள் (EV battery packs) உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

9) திருவள்ளூர் மாவட்டத்தில், தென் கொரியநாட்டைச் சேர்ந்த LS Automotive Pvt. Ltd நிறுவனம், ரூ.250 கோடி முதலீட்டில், சுமார் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மோட்டார் வாகனங்களுக்கான Switches உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

10) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சிப்காட் கங்கைகொண்டான் தொழிற் பூங்காவில், Britannia நிறுவனம், ரூ.250 கோடி முதலீட்டில், சுமார் 150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Biscuits தயாரிக்கும் விரிவாக்கத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். இந்நிறுவனம், 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது, உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிட்டது. இப்பொழுது இந்நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்திற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது.

11) கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் Inox Air Products நிறுவனம், ரூ.150 கோடி முதலீட்டில், சுமார் 105 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Liquid Oxygen உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். இந்த நிறுவனம் கோவிட் சிகிச்சைக்கு தேவையான ஆக்சிஜனை தமிழ்நாட்டிலுள்ள மருத்துவமனைகளுக்கு வழங்குவதில் முக்கியப் பங்காற்றுகிறது.

“தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் பயனாக, இந்த நிதியாண்டின் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான முதல் ஆறு மாதங்களில் இந்திய அளவில் மிக அதிக முதலீடுகளை ஈர்த்த முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. 2020ஆம் ஆண்டு செப்டம்பர் வரை, 42 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ரூ.31,464 கோடி முதலீடுகளுக்கு கையெழுத்திடப்பட்டுள்ளன.”

12) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில், தென்கொரிய நாட்டைச் சேர்ந்த Hyundai Wia நிறுவனம், ரூ.109 கோடி முதலீட்டில், சுமார் 50 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மோட்டார் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

13) சென்னை, அம்பத்தூரில், Grinn Tech Motors & Services நிறுவனம், ரூ.90 கோடி முதலீட்டில் சுமார் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Battery and BMS உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

14) திருவள்ளூர் மாவட்டத்தில் Counter Measures Technologies நிறுவனம், ரூ.51 கோடி முதலீட்டில், சுமார் 150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சிறிய ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துப் பொருட்கள் உற்பத்தித் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். இந்த திட்டம் தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் பெருந்தடத்தில் அமையவுள்ளது.

என மொத்தம், 14 திட்டங்களின் மூலம், தமிழ்நாட்டிற்கு ரூ.10,055 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, சுமார் 7,000 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

3,501 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 21.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளின் வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 21.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் நியாயவிலைக் கடைகள் மூலமாக வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே கொண்டு சென்று விநியோகிக்கும் வகையில் ரூ.9.66 கோடி மதிப்பீட்டில் 3,501 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளின் சேவையினை துவக்கி வைக்கும் அடையாளமாக 7 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளின் வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 24.02.2014 அன்று சென்னையில் நகரும் நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள். மக்கள் எளிதில் அணுக இயலாத பகுதிகள் மற்றும் மலைப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு தற்போது 48 நகரும் நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் அவர்கள் வசிக்கும் இடங்களுக்கே சென்று வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் 277 கிராமங்கள் மற்றும் சென்னையில் 54 தெருக்களில் வசிக்கும் 27,420 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர். மேலும், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, நாமக்கல், சேலம், திருநெல்வேலி, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களைச் சேர்ந்த மலை கிராமங்கள் பயன் பெறுகின்றன.

இந்த திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.03.2020 அன்று சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், “பல்வேறு தரப்பிலிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளை கருத்தில் கொண்டு, மக்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கும் பொருட்டு 3,501 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகள் ரூ.9.66 கோடி மதிப்பீட்டில் துவக்கப்படும்” என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாட்டில் உள்ள 37 மாவட்டங்களைச் சேர்ந்த 5,37,315 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில், அவர்களது குடியிருப்புகளுக்கு அருகிலேயே சென்று அத்தியாவசியப் பொருட்கள் வழங்கிட ரூ.9.66 கோடி மதிப்பீட்டில், 3,501 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளின் சேவையினை துவக்கி வைக்கும் அடையாளமாக 7 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளின் வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இந்த நடமாடும் நியாயவிலைக் கடைகள் மூலம், மாதம் ஒருமுறை குடும்ப அட்டைதாரர்களுக்கு வசதியான, அரசால் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில், தாய் கடையின் விற்பனையாளர் நேரில் சென்று அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்வார்.

கரூர் மாவட்டம்

அம்மா நகரும் நியாய விலைக்கடை திட்டத்தால் எங்கள் வாழ்க்கை நிம்மதியாக நகரும்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 24.02.2014 அன்று சென்னையில் நகரும் நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள். தமிழகத்தில் மக்கள் எளிதில் அணுக இயலாத பகுதிகள் மற்றும் மலைப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு தற்போது 48 நகரும் நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் அவர்கள் வசிக்கும் இடங்களுக்கே சென்று வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் 277 கிராமங்கள் மற்றும் சென்னையில் 54 தெருக்களில் வசிக்கும் 27,420 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர். மேலும், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், தருமபுரி, ஈரோடு, நாமக்கல், சேலம், திருநெல்வேலி, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களைச் சேர்ந்த மலை கிராமங்கள் பயன் பெறுகின்றன.

இந்த திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் நியாயவிலைக் கடைகள் மூலமாக வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே கொண்டு சென்று விநியோகிக்கும் வகையில் 3,501 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளின் சேவையினை துவக்கி வைத்தார்கள். மேலும், பொது விநியோகத் திட்டத்தின் கீழ், முன்னோட்ட அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செறிவூட்டப்பட்ட ஊட்டச்சத்து நிறைந்த அரிசி வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். தமிழ்நாட்டில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில், அவர்களது குடியிருப்புகளுக்கு அருகிலேயே சென்று அத்தியாவசியப் பொருட்கள் வழங்கிடும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் நியாயவிலைக் கடைகள், மாதம் ஒருமுறை குடும்ப அட்டைதாரர்களுக்கு வசதியான, அரசால் நிருணயிக்கப்பட்ட இடங்களில், தாய் கடையின் விற்பனையாளர் நேரில் சென்று அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்வார்கள்.

மக்கள் மனமறிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதை அடுத்து, கரூர் மாவட்டத்தில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் நகரும் நியாயவிலைக் கடை வாகனத்தை கொடியசைத்துத் துவக்கி வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்களை வழங்கினார்.

கரூர் மாவட்டத்தில் உள்ள 384 முழுநேர நியாயவிலைக் கடைகள் மற்றும் 203 பகுதிநேர நியாயவிலைக் கடைகளில் 3,10,253 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இதில் பல பகுதிகளில் மக்கள் நீண்ட தூரம் சென்று அத்தியாவசியப் பொருட்கள் பெறவேண்டிய சூழ்நிலை உள்ளதை கருத்தில் கொண்டு, கரூர் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் 143 வாகனங்களிலும், கரூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை மூலம் 2 வாகனங்களிலும், கரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் 1 வாகனத்திலும் என மொத்தம் 146 “அம்மா நகரும் நியாயவிலைக் கடைகள்” செயல்படவுள்ளது. இந்த 146 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகள் மூலம் 17,341 குடும்ப அட்டைதாரர்கள் வசிப்பிடத்தின் அருகிலேயே அத்தியாவசியப் பொருட்களை பெற்று பயனடைந்துள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளில் அம்மாவின் அரசு அதிகளவில் நியாயவிலைக் கடைகளை திறந்து வைத்து பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வருகிறது. 500க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ள கடைகளில் 150 குடும்ப அட்டைகளை பிரித்து பகுதிநேர நியாயவிலைக் கடைகளாக செயல்படுத்தி வருகிறது.

கிராமப் பகுதிகளில் எங்கோ ஓர் மூலையில் வசிக்கும் வயது முதிர்ந்தவர்களும், மாற்றுத்திறனாளிகளும் நியாய விலைக் கடைகளுக்குச் சென்று பொருட்களை வாங்க இயலாமல் தவிக்கும் நிலையினை மாற்றும் வகையில், அவர்களின் அன்றாட வாழ்க்கையினை மகிழ்வோடு கடக்கும் வகையில் தமிழக அரசின் இந்த நகரும் நியாயவிலைக் கடை திட்டம் திகழ்கின்றது என்றால் அது மிகையல்ல.

திருமதி மாரியம்மாள்

அந்த வகையில் இந்த நகரும் நியாயவிலைக் கடையின் மூலம் பொருட்களைப் பெற்றுக்கொண்ட பஞ்சமாதேவி பகுதியைச் சேர்ந்த திருமதி மாரியம்மாள் (வயது 70) என்பவர் தெரிவிக்கையில்,

“நான் பஞ்சமாதேவி பகுதியில் வசிக்குறேன். எனக்கு 70 வயசாயிடுச்சிங்க. இந்த வயசுல தொலைவுக்கு போய் ரேசன் கடையில வரிசையில நின்னு பொருள் வாங்கிட்டு வர அளவுக்கு உடம்புல தெம்பு இல்ல. ஒவ்வொரு மாசமும் ரேசன் கடைக்குப் போய்ட்டு வரதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடும். இதுக்கு ஒரு விடிவே வராதானு மனசுல நெனச்சேன். ஆனா, இப்ப நம்ம முதலமைச்சர், வீட்டுக்கு பக்கத்துலேயே வண்டில வந்து சாமான்களை தரும் திட்டத்தை அறிவிச்சிருக்கறத கேட்டப்ப மனசு அப்படியே சந்தோஷமா போச்சுங்க. இந்த மாதம் இந்த நகரும் நியாய விலைக் கடையில் தான் பொருட்கள் வாங்கிக்கிட்டேன். என்னப்போல எத்தனையோ வயசானவங்க கால்கடுக்க நடந்து போயி பொருள வாங்கிட்டு அந்த கனத்தை தூக்கிட்டு வரது ரொம்ப கஷ்டமாக இருந்தது. இப்போ அந்த நிலைமை மாறி காலடிக்கே வந்து பொருள கொடுக்குறாங்க. இந்த நகரும் நியாயவிலைக் கடையால எங்க வாழ்க்கை இனி நிம்மதியா நகரும். மனசார சொல்றேங்க நம்ம முதலமைச்சர் நல்லாயிருக்கனும்” இவ்வாறு தெரிவித்தார்.

– K.பாவேந்தன்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கரூர் மாவட்டம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.09.2020 அன்று தீவுத்திடலில் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக நிறுவனத்தின் வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

நாட்டிலேயே முதன்முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியின் 7 மண்டலங்களில் செயல்திறன் அளவீட்டு முறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 30.09.2020 அன்று சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் 7 மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் நாட்டிலேயே முதன்முறையாக செயல்திறன் அளவீட்டு முறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக, M/s. Urbaser SA and Sumeet Facilities Limited நிறுவனத்தின் காம்பாக்டர்கள், மெக்கானிக்கல் ஸ்வீப்பர், இ–ரிக்ஷாக்கள் ஆகிய வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பெருநகர சென்னை மாநகராட்சியின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், சென்னை மாநகரில் சேகரமாகும் அனைத்து திடக்கழிவுகளையும் குப்பைக் கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு செல்வதைத் தவிர்த்து, நவீன தொழில்நுட்பம்

மற்றும் விஞ்ஞான முறைகளை பயன்படுத்தி மறுசுழற்சி செய்து பொதுமக்களுக்கு சுகாதார மற்றும் சுத்தமான சூழலை ஏற்படுத்துதல், நிலம் மற்றும் நீர் மாசுபடுதலை தவிர்த்து சுற்றுச்சூழலை பாதுகாக்க பல்வேறு திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் நாள்தோறும் சராசரியாக 5,000 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. திடக்கழிவு மேலாண்மை விதிகளை முழுமையாக செயல்படுத்தும் விதமாக 19,467 பணியாளர்கள் மூலம் வீடு, வீடாக சென்று குப்பைகள் பெறப்பட்டு, அவை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. இவ்வாறு தினந்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகளின் ஈரக் கழிவுகளிலிருந்து இயற்கை உரம் மற்றும் உயிரி எரிவாயு தயாரிக்கப்பட்டு வருகிறது. உலர்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு, மறுஉபயோகம் மற்றும் மறுசுழற்சி செய்யப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள குப்பைகள் தற்போது பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களில் சேகரமாகும் குப்பைகளின் அளவுகளை படிப்படியாக குறைக்கும் வகையிலும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையிலும், நிலம் மற்றும் நிலத்தடி நீரின் மாசுபாட்டை தவிர்க்கும் வகையிலும், குப்பைகளிலிருந்து இயற்கை உரம் மற்றும் உயிரி எரிவாயு தயார் செய்ய கட்டமைப்புகள், தாவர கழிவுகளிலிருந்து எரிபொருள் தயாரிக்கும் கட்டமைப்புகள், உலர்குப்பைகளை நவீன முறையில் எரியூட்டும் கலன்கள், பிளாஸ்டிக் கழிவுகளில் இருந்து திரவ எரிபொருள் தயார் செய்யும் ஆலைகள் மற்றும் குப்பை கொட்டும் வளாகங்களில் BIO-MINING முறையில் குப்பைகளை பிரித்தெடுத்து, மறுசுழற்சி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை மேலும் சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டும், மண்டலங்களில் உள்ள தெருக்களை பெருக்குதல், வீடுகள்தோறும் தரம்பிரித்து சேகரிக்கப்படும் கழிவுகளை, அதற்குரிய பதப்படுத்தப்படும் நிலையங்களுக்கு கொண்டு செல்லுதல், எஞ்சிய கழிவுகளை குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு சேர்த்தல் ஆகிய பணிகளை பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளும் வகையிலும், ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த M/s Urbaser SA and Sumeet Facilities Limited நிறுவனத்திற்கு 8 ஆண்டு காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து, ஓமன், பக்ரைன், பிரேசில், அர்ஜெட்டினா, சிலி, பெரு ஆகிய நாடுகளிலும், நம் நாட்டின் தலைநகரமான டில்லி மாநகரத்திலும் தூய்மைப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர், அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 7 மண்டலங்களுக்குட்பட்ட 92 வார்டுகளில் உள்ள 16,621 தெருக்களில் வசிக்கும் சுமார் 37 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள M/s Urbaser SA and Sumeet Facilities Limited நிறுவனத்திற்கு 24.12.2019 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர், அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 7 மண்டலங்களில் ஓராண்டு காலத்திற்குள் அனைத்து வீடுகளிலிருந்தும் 100 சதவிகிதம் தரம்பிரிக்கப்பட்ட குப்பைகள் முறைப்படி பெறப்படும். இதற்காக, பழைய மூன்று சக்கர மிதிவண்டிக்குப் பதிலாக, மின்கல வாகனங்கள் (Battery Operated Vehicle) பயன்படுத்தப்படும். இதன்மூலம்

மேற்குறிப்பிட்ட 7 மண்டலங்களில் மனித ஆற்றலை கொண்டு இயக்கப்பட்டு வந்த மூன்று சக்கர மிதிவண்டிகள் முற்றிலும் நீக்கப்பட்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்கல வாகனங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளை வீடுகள்தோறும் பெறுதல், குறைந்த உறுதி செய்யப்பட்ட கழிவுகளை பதனிடுதல், வளாகத்திற்கு கொண்டு சேர்த்தல், பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் புகார்களை 6 மணி நேரத்திற்குள் சரிசெய்தல் போன்ற 34 எண்ணிக்கையிலான செயல்திறன் குறியீடுகள் வாயிலாக பணிகளை கண்காணித்து, அதன் மதிப்பீட்டு அடிப்படையில் ஒப்பந்ததாரர்களுக்கு பணப்பட்டுவாடா செய்யப்படும்.

இப்பணிகளை மேற்பார்வையிட பிரத்தியேகமாக மூன்றாம் நிலை ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு, ஒப்பந்ததாரர்களின் செயல்திறன் கண்காணிக்கப்படும். தரம் பிரிக்கப்பட்ட குப்பைகள் நேரடியாக பரவலாக்கப்பட்ட குப்பை பதனிடு நிலையங்களான இயற்கை உரம் தயாரிக்கும் மையம், பொருட்கள் மீட்பு வசதி மையம், எரியூட்டும் நிலையம், உயிரி அழுத்த இயற்கை வாயு நிலையம், தோட்டக் கழிவு மற்றும் தேங்காய் மட்டை பதனிடும் மையம், வளமீட்பு மையம், உயிரி மீத்தேன் வாயு நிலையம் ஆகிய மையங்களில் சேர்க்கப்படும். மேலும், மேலாண்மை தகவல் அமைப்பு மூலம் குப்பை தொட்டிகளிலிருந்து குப்பைகள் அகற்றுதல் மற்றும் வாகனங்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 7 மண்டலங்களிலும் மேற்குறிப்பிட்ட தூய்மைப் பணிகளை மேற்கொள்ள 8 ஆண்டு காலத்திற்கு M/s. Urbaser SA and Sumeet Facilities Limited நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் 125 காம்பாக்டர்கள், 38 மெக்கானிக்கல் ஸ்வீப்பர், 3,000 இ–ரிக்ஷாக்கள், 11,000 காம்பாக்டர் குப்பைத் தொட்டிகள் போன்ற உபகரணங்களுடன், 10,844 எண்ணிக்கையிலான அனைத்து வகை பணியாளர்களும் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள உள்ளனர்.

❖ ❖ ❖

சித்த மருத்துவம் தோன்றிய தமிழ்நாட்டில் அகில இந்திய சித்த மருத்துவ நிறுவனத்தை அமைக்க வேண்டும்

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களுக்கு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் – 24.09.2020

தங்களது தலைமையிலான மத்திய அரசு, இந்திய மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி ஆகியவற்றுடன் ஓமியோபதி மருத்துவ முறைகளுக்கும் முக்கியத்துவம் அளிப்பது அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

மத்திய அரசு தற்போது அகில இந்திய சித்த மருத்துவ நிறுவனத்தை அமைக்க திட்டமிட்டுள்ளதாக அறிகிறேன். இதற்காக நன்றி தெரிவிப்பதுடன், இந்த மருத்துவ மையத்தை இந்த நிதி ஆண்டிலேயே தமிழகத்தில் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறேன்.

இந்த முன்னோடியான நிறுவனத்தை, சித்த மருத்துவத்தின் தோற்றப் பகுதியான தமிழ்நாட்டில் நிறுவுவதே பொருத்தமாக இருக்கும். சென்னை அருகில் ஏற்கெனவே, இதற்கு தேவையான சாலை, இரயில் போக்குவரத்து வசதிகள் நிறைந்த பகுதியில் நிலம் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, இதுதொடர்பாக மத்திய அரசு கோரும் அனைத்து விவரங்களையும் அளிக்கும்படி அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். மத்திய அரசு செயலருக்கு இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு சார்பில் கோரிக்கை விடுத்து பதிலுக்காக காத்திருக்கிறோம். தமிழகத்தில் அகில இந்திய சித்த மருத்துவ நிறுவனம் அமைப்பது குறித்த தங்களது சாதகமான பதிலுக்காக காத்திருக்கிறேன்.

கொரோனா தடுப்புப் பணிக்கான நிதி தொகுப்பினை ரூ.3 ஆயிரம் கோடியாக உயர்த்தி வழங்க வேண்டும்!

இந்தியாவில் கொரோனா நோய்த் தொற்று அதிகமுள்ள மாநிலங்களின் முதல்வர்களுடன் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள், 23.09.2020 அன்று காணொலிக் காட்சி மூலம் ஆலோசனை நடத்தினார்கள். அக்கலந்தாய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை.

கொரோனா தொற்று நோயை எதிர்கொள்வதற்கு தாங்கள் தொடர்ச்சியாக வழங்கி வரும் வழிகாட்டுதல்கள் மற்றும் ஆதரவுக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயத்துறையில் நீண்ட காலத்துக்கு ஸ்திரத் தன்மையை கொண்டு வரும் 3 வேளாண் சட்டங்களை இயற்றியதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நான் 26 மாவட்டங்களில் நேரில் சென்று ஆய்வு நடத்தினேன். இதில் சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை நாட்டிலேயே அதிக அளவில் ஆர்டி–பிசிஆர் பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதும் 176 பரிசோதனை மையங்கள் உள்ளன. இவற்றில் 66 அரசு பரிசோதனைக் கூடங்கள், 110 தனியார் ஆய்வுக் கூடங்கள் மூலம் சராசரியாக நாள் ஒன்றுக்கு 85,000 பரிசோதனைகள் நடந்து வருகின்றன. இதுவரை மொத்தமாக 66,40,058 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, 5,52,674 நபர்களுக்கு பாதிப்பு கண்டறியப்பட்டது. தற்போது, 46,350 நபர்கள் மட்டும் சிகிச்சையில் உள்ளனர்.

கொரோனா பரிசோதனைக்கு நாள் ஒன்றுக்கு ரூ.6 கோடியே 80 இலட்சம் செலவாகும் நிலையில், இதில் 50 சதவீதத்தை பிஎம்–கேர் நிதியிலிருந்து வழங்க வேண்டும். தமிழ்நாட்டில் மிக குறைவாக 1.62 சதவீதம் என்ற அளவில் மட்டுமே இறப்பு பதிவாகி வருகிறது. நாட்டிலேயே அதிகபட்சமாக தமிழ்நாட்டில் 90 சதவீதம், அதாவது 4,97,377 நபர்கள் குணமடைந்துள்ளனர். அரசின் நடவடிக்கைகளால் பாதிப்பு விகிதம் 10.47 சதவீதத்தில் இருந்து 6.2 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இன்றைய நிலையில், எந்த மாவட்டத்திலும் 10 சதவீதத்துக்கு அதிகமாக பாதிப்பு இல்லை. சென்னையில் ஜுன் மாதம் 2,300 ஆக இருந்த தினசரி பாதிப்பு, தற்போது ஆயிரத்திற்கு கீழ் குறைக்கப்பட்டுள்ளது. ஆரம்பம் முதலே இந்திய மருத்துவ முறை சிகிச்சைகளை நாங்கள் பயன்படுத்தி வருகிறோம்.

தொடக்கத்தில் இருந்தே சிகிச்சை முறைகளில் தமிழகம் இந்திய மருத்துவ முறைக்கு முக்கியத்துவம் கொடுத்து

வருகிறது. மாநில பேரிடர் மீட்பு நிதி மற்றும் மாநில பட்ஜெட்டில் இருந்து போதுமான நிதி நுகர்பொருட்கள் கொள்முதல் செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது. 5.25 கோடி மூன்றடுக்கு முகக்கவசம், 48.05 இலட்சம் என்–95 ரக முகக்கவசம், 44.61 இலட்சம் முழு உடல் கவசம், 63.25 இலட்சம் பி.சி.ஆர்.பரிசோதனை கருவிகள் வாங்குவதற்கான பணி ஆணையை மாநில அரசு கொடுத்திருக்கிறது.

மேலும், மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து போதிய மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்டவை வாங்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் நடத்தப்பட்ட காய்ச்சல் முகாம்களால் புதிதாக பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை குறைந்துள்ளது. கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை மக்களுக்கான மருத்துவ சேவையை மேம்படுத்த 2,000 'மினி கிளினிக்' அமைக்கப்படும் என அறிவித்துள்ளேன். பெருந்தொற்று காலத்தில் கள அளவிலான மருத்துவம் மற்றும் ஆலோசனை சேவைகளை மேம்படுத்த இவை உதவும்.

இ–சஞ்சீவினி ஒபிடி திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி, நாட்டிலேயே முதல் இடத்தை தமிழகம் பிடித்துள்ளது. இன்றுவரை, 1,26,525 பேருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா பாதிப்பு தொடர்பாக தமிழகத்தின் பொருளாதாரத்தை மீட்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் சி.ரங்கராஜன் தலைமையிலான உயர்மட்டக்குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுக்கும். தங்களின் பரிசீலனைக்காக சில கோரிக்கைகளை உங்கள் முன் வைக்கிறேன்.

தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட அவசர கால நடவடிக்கை மற்றும் சுகாதார தயார் நிலைக்கான தொகுப்பு நிதியான ரூ.712.64 கோடியில் ரூ.511.64 கோடி தொகையை நாங்கள் பெற்றுள்ளோம். நான் ஏற்கெனவே தங்களிடம் கேட்டுக் கொண்டபடி இந்த நிதித்தொகுப்பை ரூ. 3 ஆயிரம் கோடியாக உயர்த்தித் தர வேண்டும்.

எங்கள் மாநிலத்தின் சுகாதார உள்கட்டமைப்பை மேலும் பலப்படுத்த இந்த நிதி மிகவும் உபயோகமாக இருக்கும். எங்கள் மாநிலத்தில் மாநில பேரிடர் நடவடிக்கை மற்றும் தணிப்பு நிதி முற்றிலும் செலவழிந்து விட்டது. எனவே தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ.1,000 கோடியை தற்காலிக மானியமாக தமிழ்நாட்டிற்கு ஒதுக்கித் தர வேண்டும்.

தற்போது நிலுவையில் உள்ள நெல் அரவை மானியத்தொகை ரூ.1,321 கோடியை வழங்கினால், அது நெல் கொள்முதல் செய்வதற்கு மிகுந்த உதவிகரமாக இருக்கும். உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையிலான ஆணையத்தின் பரிந்துரைப்படி மாநில அரசுப் பள்ளியில் படித்து, நீட் தேர்வு மூலம் தகுதி பெறும் மாணவர்களுக்கு இந்த கல்வி ஆண்டு முதல் மருத்துவ இளநிலைப் பட்டப்படிப்பில் 7.5 சதவீதம் உள்ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று தமிழக சட்டப்பேரவையில் ஏகமனதாக சட்ட மசோதாவை நிறைவேற்றி இருக்கிறோம். தற்போது, இந்த மசோதா, தமிழக ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு சமூக நீதியையும், சமநிலையையும் இது வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



கை இராட்டை பிறந்த விதம்

காந்தியடிகள் சிறைவாசத்தின் போது நூல்களைப் படிப்பது வழக்கம். ஒரு முறை சிறையில் இருந்த போது கதேயின் ஃபாஸ்ட் என்னும் நூலை அவர் படிக்க நேர்ந்தது.

அந்நூலில் வரும் கதாநாயகி, கணவனை இழந்து சோகத்தின் உருவமாகக் காட்சி தருகிறாள். அவர்களது மனம் அமைதியை இழந்து விடுகிறது. ஏராளமான நூல்கள் அவளிடம் இருக்கின்றன; அவற்றில் ஒன்றைக்கூட அவள் படிக்க விரும்பவில்லை. வாசிப்பதற்கு அநேக இசைக் கருவிகள் தன்னிடமிருந்தும் இசைத் திறமை பெற்ற அவள், அவற்றை வாசித்து மன அமைதி பெற முயலவில்லை. ஆனால், சர்க்காவில் நூற்பதன் மூலம் மன அமைதி பெறுகிறாள், உளச் சாந்தி அடைகிறாள்.

அவள் பயன்படுத்திய இராட்டையை ஏழைகளின் வாழ்வு மேம்படுவதற்காகப் பயன்படுத்தினார் காந்திஜி.

பொது விநியோகத் திட்டத்தின் “ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை” திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 01.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில், பொது விநியோகத் திட்டத்தின் ஒருங்கிணைந்த மேலாண்மைக்கான “ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை” திட்டத்தினை தமிழ்நாட்டில் துவக்கி வைத்து, 3 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் பொது விநியோகத் திட்டம் ரூ.330 கோடி செலவில் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக புழக்கத்திலிருந்த குடும்ப அட்டைகளுக்கு பதிலாக ஆதார் எண் விவரங்களின் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 01.04.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டு, தற்போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மின்னணு குடும்ப அட்டைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 01.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், 3 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கி திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்கள் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை, தங்களின் விருப்பத்திற்கேற்ப தமிழ்நாடு முழுவதும் எந்த ஒரு நியாயவிலைக் கடையிலும் பெறத்தக்க வகையில் குடும்ப அட்டைகளின் மின்னணு முறை மாநில அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தின் ஒருங்கிணைந்த மேலாண்மைக்கான மத்திய அரசின் திட்டத்தின் கீழ், (Integrated Management of Public Distribution System) குடும்ப அட்டைதாரர்கள் சொந்த மாநிலத்திலிருந்து இடம்பெயரும்போது, தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தின்படி உரிம அளவிலான உணவு தானியங்களை தேசிய அளவில் எங்கு வேண்டுமானாலும் பெறத்தக்க வகையில் "ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை" திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கூறிய திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக தற்போது நியாயவிலைக் கடைகளில் பயன்பாட்டிலுள்ள விற்பனை இயந்திரங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, தேசிய அளவில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் தங்களது சொந்த மாநிலத்தைவிட்டு இடம்பெயரும் போது, தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தின்படி உரிம அளவிலான உணவு தானியங்களை தமிழ்நாட்டில் எங்கு வேண்டுமானாலும் பெறத்தக்க வகையிலும், புலம்பெயர் குடும்பங்கள் தாங்கள் ஏற்கெனவே வைத்துள்ள குடும்ப அட்டை விவரங்களின் அடிப்படையில் உணவு தானியங்கள் பெறத்தக்க வகையிலும், "ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை" திட்டத்தினை தமிழ்நாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இத்திட்டம் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் உள்ளிட்ட 32 மாவட்டங்களில் 01.10.2020 முதல் செயல்படுத்தப்படும். மேலும், தூத்துக்குடி, தஞ்சாவூர், விருதுநகர், இராமநாதபுரம், மதுரை மற்றும் திருவண்ணாமலை ஆகிய 6 மாவட்டங்களில் 16.10.2020 முதல் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு புலம்பெயரும் முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்கள் (PHH and PHH-AAY) தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின்படி தங்களுக்குண்டான உணவு பொருட்களை உடற்கூறு முறையிலான தகவல் உறுதிப்படுத்துதல் (Bio-metric authentication) மூலம் இடம்பெயரும் மாநிலத்தில் பெற்றுக்கொள்ளலாம். பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு இடம்பெயரும் குடும்ப அட்டைதாரர்கள், தாங்கள் ஏற்கெனவே வைத்துள்ள குடும்ப அட்டையினைக் கொண்டு, தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தின்படி உரிம அளவிலான உணவு பொருட்களை மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விநியோக விலையில் (Central Issue Price) தங்களின் வசிப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள நியாயவிலைக் கடைகளில் உடற்கூறு முறையிலான தகவல் உறுதிப்படுத்துதல் (Bio-metric authentication) மூலம் பெறலாம். இதனால் புலம்பெயர் தொழிலாளர்கள் எந்தவித இடையூறுமின்றி உணவு தானியங்களை பெற்றுப் பயனடையலாம்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்கள் தொழில்நுட்ப காரணங்களினால் உடற்கூறு முறையிலான தகவல் உறுதிப்படுத்துதலை மேற்கொள்ள இயலாத நிலையில், தற்போதுள்ள மின்னணு குடும்ப அட்டை மற்றும் ஆதார் தொடர்புடைய கைப்பேசிக்கு வரும் ஒருமுறை கடவுச் சொல் (OTP), ஆதார் கார்டு மற்றும் தற்போதுள்ள நடைமுறையான குடும்ப அட்டை ஸ்கேனிங் முறையை பின்பற்றியும் அத்தியாவசியப் பொருள்களை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், வயது முதிர்ந்தோர் மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக நேரில் வர இயலாத பயனாளிகள் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மூலம் அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.

தொல்லியல் பட்டய படிப்பில் சேர கல்வித் தகுதி பட்டியலில் தமிழ் முதுகலை படிப்பை சேர்த்ததற்கு நன்றி!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ***எடப்பாடி K. பழனிசாமி*** *அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.* ***நரேந்திர மோடி*** *அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் – 09.10.2020.*

தீன்தயாள் கல்வி நிறுவனத்தின் தொல்லியல் முதுநிலை பட்டய படிப்பில் சேர்வதற்கு, தமிழில் முதுகலை பட்டம் பெற்றவர்களை குறைந்தபட்ச தகுதியுள்ளவர்களாக சேர்க்க வேண்டும் என்ற எனது கோரிக்கையையடுத்து உடனடியாக செயல்பட்டதற்கு எனது இதயப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுதொடர்பான எனது கோரிக்கைக்கு உடனடியாக பதில் அளித்த தங்களுக்கு பாராட்டையும், மீண்டும் ஒருமுறை நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய தொல்லியல் முதுநிலை பட்டய படிப்பில் சேருவதற்கு, கல்வித் தகுதிப் பட்டியலில் தமிழ் முதுகலை பட்டப்படிப்பையும் சேர்க்க வேண்டும் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ***எடப்பாடி K. பழனிசாமி*** *அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.* ***நரேந்திர மோடி*** *அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் – 08.10.2020.*

மத்திய கலாசாரத் துறையின் கீழ் செயல்படும் இந்திய தொல்லியல் துறை, தீன்தயாள் உபாத்யாயா தொல்லியல் நிறுவனத்தில் 2020–2022ஆம் ஆண்டுக்கான 2 ஆண்டு தொல்லியல் முதுநிலை பட்டயப்படிப்பில் சேர்வதற்கான கல்வித் தகுதியை நிருணயித்து சமீபத்தில் விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது. இந்த விளம்பரத்தை மத்திய கலாசாரத் துறையின் கீழ் வரும் இந்திய தொல்லியல் ஆய்வு நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. நமது புகழ்பெற்ற கடந்த காலத்தை வெளிக்கொண்டு வருவதற்கான திறமையாளர்களை உருவாக்குவதற்கு பொருத்தமான பாராட்டத்தக்க முயற்சியாகும். அதே நேரம், இந்த படிப்பில் சேர்வதற்கான சில நெறிமுறைகள் தமிழகம் உள்ளிட்ட நாடு முழுவதும் உள்ள ஆர்வலர்களுக்கு தடையாக உள்ளது.

இது இந்தியாவில் உள்ள பழமையும், பெருமையும் வாய்ந்த நாகரிகத்தை வெளியே கொண்டு வருவதற்கான சிறந்த கல்வியை அளிக்கக்கூடிய நிறுவனமாக உள்ளது.

அந்த கல்வி சேர்க்கைக்கான கல்வித்தகுதியாக சில மொழிகளில் முதுகலை பட்டம் பெற்று இருக்க வேண்டும் என்று அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது. அதன்படி, இந்திய செம்மொழியான சமஸ்கிருதம் மற்றும் பாலி, பிரக்ரித், அரபிக், பெர்ஷியா ஆகிய மொழிகளில் முதுகலை பட்டத்தை படித்து இருக்க வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் 2005ஆம் ஆண்டு செம்மொழியாக அறிவிக்கப்பட்ட சமஸ்கிருதம் அந்த பட்டியலில் இடம் பிடித்துள்ளது. ஆனால் 2004ஆம் ஆண்டு செம்மொழியாக அறிவிக்கப்பட்ட தமிழ் அந்த பட்டியலில் இடம்பெறாமல் துரதிஷ்டவசமாக முற்றிலும் நிராகரிகப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அனைத்து மொழிகளிலும் உள்ள 48 ஆயிரம் கல்வெட்டுகள் இதுவரை இந்திய தொல்லியல் துறை மற்றும் இதர நிறுவனங்களால் வெளியிடப்பட்டுள்ளன. இதில், 50 சதவீதத்துக்கும் அதிகமாக அதாவது 28 ஆயிரம் கல்வெட்டுகள் தமிழ்மொழியில் உள்ளவை.

இவற்றை கருத்தில் கொண்டு, தொல்லியல் முதுநிலை பட்டயப் படிப்புக்கான மாணவர் சேர்க்கையில், முதுகலை தமிழ் பட்டப் படிப்பையும் குறைந்தபட்ச தகுதியில் ஒன்றாக சேர்க்கும் வகையில், விதிகளில் உரிய திருத்தம் மேற்கொள்ளுமாறும் புதிய அறிவிப்பு வெளியிடுமாறும் இந்திய தொல்லியல் துறைக்கு அறிவுறுத்தும்படி வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன். இந்த விஷயத்தில் தாங்கள் உடனடியாக தலையிடுவது பாராட்டத்தக்கதாகும்.

அக்டோபர் 1971 "தமிழரசு" இதழிலிருந்து...



காந்தி இல்லத்தில்

இடைவிடாத நூற்பும், வழிபாடும்

அண்ணலைப் பற்றி அண்ணா

உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாள், நாடெங்கும் நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது, அவரவர் தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தியடிகளுக்குத் தமது அன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர்.

அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலைகளிட்டும்—அவர் புகழ் பற்றிய பாடல்களை இசைத்தும்—பஜனை நடாத்தியும், நூற்புத் தொண்டாற்றியும், சேரிகளைத் திருத்தும் பணிபுரிந்தும் இந்நாளைக் கொண்டாடுகின்றனர்

அவர் ஓர் தூயவர். நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான்—என்பாரும்,

அவர் ஓர் விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர் என்பாரும்;

அவர் ஓர் சமதர்மவாதி, ஏழைபங்காளர், ஏழைகள் புது வாழ்வு பெற வழிவகுத்தவர் என்பாரும்;

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர், என்பாரும், இதுபோல, அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவோர் பல்வேறு வகையினர் உளர். இவர்களில் எவருடைய பார்வையில் முழு காந்தி அடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகும். காரணம், ஒரு மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர்; அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம், ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்.

அவர் எல்லாத்துறைகளிலும் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர்; எல்லாத் துறையினரும், எமக்காகவே காந்தி அடிகள் வாழ்ந்தார், எமக்காகவே பணிபுரிந்தார் என்று சொந்தம் கொள்ளத்தக்க முறையிலே அவருடைய வாழ்க்கையும், தொண்டும் அமைந்திருந்தன.

இன்று, அவருடைய பிறந்தநாள், எல்லாத் துறைகளிலே உள்ளவர்களாலும் கொண்டாடப்படுவதற்கான காரணம் இதுவே. அவர் ஒரு நாட்டின் காலம்! ஒரே ஒரு துறைக்கு அல்ல! எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று. எல்லாத் துறைகளிலும் வெற்றி காணவேண்டும். அவைகளின் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்ற கணக்குப் பார்க்கவேண்டும்.

ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு அடிக்கடி கிடைக்காது; ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு இந் நாட்டுக்குக் காந்தியடிகளின் வடிவத்திலே கிடைத்தது. எனவேதான் காந்தியடிகளின் பிறந்த நாள் ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாகமட்டுமின்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த நற்காலம், என்ற முறையிலே சிறப்புப் பெறுகிறது.

அந்த—அரை ஆடை மனிதர் கோடானுகோடி மக்களுக்குமானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்ததைவிட "அற்புதம்" வேறுஎன்ன இருக்க முடியும்?

இன்று நடத்திடும் திருநாளின் மாண்பு, நாளையும் மறுநாளும், பிற நாட்களிலும் நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிடவேண்டும். அதற்கே இந்நாள்! அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல—அவர் வழி நடந்திட, அவர் காண விரும்பியதைக் கண்டிட, அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிருள்ளவை யாக்கிட ! மாலையின் மாண்பு மணத்தில்! விளக்கின் பயன் ஒளியில்! விழாக்களின் பலன் நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது!

சென்னையில் காந்தியடிகள் 103வது பிறந்த நாள் விழா

உயர்கல்வித் துறை சார்பில், ரூ.85.85 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 05.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலம் முடிவுற்ற கட்டடங்களை திறந்து வைத்து திருவள்ளுவர் பல்கலைக்கழக வளாகத்தில், முதுகலை மற்றும் ஆராய்ச்சி பட்டப் படிப்புகளுக்கான கட்டடங்களுக்கு அடிக்கல்லும் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 05.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழக வளாகத்தில் 25 கோடியே 25 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கணினி அறிவியல், இயற்பியல் மற்றும் வணிகவியல் ஆகிய புதிய துறைகளுக்கான முதுகலை மற்றும் ஆராய்ச்சி பட்டப் படிப்புகளுக்கான கட்டடங்கள், மாணவர்கள் மற்றும் மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்கள், துணைவேந்தருக்கான குடியிருப்பு ஆகிய கட்டடங்களுக்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், திருநெல்வேலி, திருவண்ணாமலை, வேலூர் மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள், பல்கலைக்கழக கல்லூரிகள் மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் 58 கோடியே 20 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாட்டை அறிவுசார் மற்றும் தொழில்நுட்ப கல்வியில் சிறந்த மாநிலமாக உயர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்கிலும், கிராமப்புற மாணவ, மாணவிகள் உயர்கல்வி கற்று, வாழ்வில் சிறப்பான நிலையை அடைந்திடும் வகையிலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, கிராமப்புற மாணாக்கர்கள் உயர்கல்வி கற்பதற்காக நகரங்களை நாடி செல்ல சிரமப்படாமல், அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே உயர்கல்வி கற்பதற்கு ஏதுவாக கடந்த 9 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 66 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்/ பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மாணவர்கள் விடுதிக் கட்டடம்

பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி கூடுதல் கட்டடம்

அறிவியல் கல்லூரிகள், 4 அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 19 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை துவக்கியுள்ளது. இதன்மூலம், மொத்த உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு 49 விகிதத்தைப் பெற்று இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக விளங்கி வருகிறது.

அந்த வகையில், வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழக வளாகத்தில் 25 கோடியே 25 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கணினி அறிவியல், இயற்பியல் மற்றும் வணிகவியல் ஆகிய புதிய துறைகளுக்கான முதுகலை மற்றும் ஆராய்ச்சி பட்டப் படிப்புகளுக்கான கட்டடங்கள், மாணவர்கள் மற்றும் மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்கள், துணைவேந்தருக்கான குடியிருப்பு ஆகிய கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், கோயம்புத்தூர் – அரசு பொறியியல் கல்லூரியில் 6 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம்;

சேலம் மாவட்டம், எடப்பாடி– பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2 கோடியே 97 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள், 3 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் கழிவறைகள்; சேலம், அரசு பொறியியல் கல்லூரியில் 5 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உலோகவியல் துறையில் முதுநிலைப் பாடப் பிரிவுக்கான வெல்டிங் தொகுதிக் கட்டடம், கூடுதல் வகுப்பறைகள், பணியாளர் அறைகள், தேர்வு அறை, கருத்தரங்கு கூடம் மற்றும் கழிவறைகள்; சேலம், அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் ரூ.3.36 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 13 கூடுதல் வகுப்பறைகள், 3 ஆய்வகக் கட்டடங்கள், கருத்தரங்கு கூடம் மற்றும் கழிவறைகள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி – அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 3 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 கூடுதல் வகுப்பறைகள், கருத்தரங்கு கூடம், கூட்டரங்கம் மற்றும் கழிவறைகள்;

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை – தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 கூடுதல் வகுப்பறைகள்;

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில்– மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக

திருவள்ளுவர் பல்கலைக்கழக மாணவர் விடுதிக் கட்டடம்

கோயம்புத்தூர் பொறியியல் கல்லூரி மாணவர் விடுதி கூடுதல் கட்டடம்

கல்லூரியில் 3 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 16 கூடுதல் வகுப்பறைகள், பணியாளர் அறை, கழிவறைகள் மற்றும் இதரக் கட்டடங்கள்; திருநெல்வேலி – மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் 5 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம்; திசையன்விளை – மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் 3 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 16 கூடுதல் வகுப்பறைகள் பணியாளர் அறை, கழிவறைகள் மற்றும் இதரக் கட்டடங்கள்; பனகுடி – மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியில் 3 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 16 கூடுதல் வகுப்பறைகள் பணியாளர் அறை, கழிவறைகள் மற்றும் இதரக் கட்டடங்கள்;

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு – அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 600 நபர்கள் அமரும் வகையில் கட்டப்பட்டுள்ள கலையரங்கம்;

வேலூர் மாவட்டம், மாதனூர் – புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 7 கோடியே 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கல்விசார் மற்றும் நிருவாகக் கட்டடங்கள்; குடியாத்தம் – அரசு திருமகள் ஆலைக் கல்லூரியில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 கூடுதல் வகுப்பறைகள்;

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை வட்டம், அக்ரஹாரம், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 10 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிருவாகக் கட்டடம், மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம், சுற்றுச்சுவர் மற்றும் இதர கட்டடங்கள்;

என மொத்தம் 58 கோடியே 20 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

படமும்/ செய்தியும்

"தமிழர் தந்தை" சி.பா. ஆதித்தனார் அவர்களின் 116ஆவது பிறந்தநாள் விழா

27.09.2020 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் "தமிழர் தந்தை" சி. பா. ஆதித்தனார் அவர்களின் 116ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை எழும்பூரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், மாலை முரசு நாளிதழ் மற்றும் தொலைக்காட்சி நிருவாக இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

● பூம்புகார் மெய்நிகர் தோற்ற விற்பனை நிலையம்
Poompuhar Virtual Reality Show room
● பூம்புகார் மெய்தோற்ற கைப்பேசி செயலி
Poompuhar Augmented Reality Mobile App

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 05.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 05.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு புதுமை நிதி திட்டத்தின் கீழ் (TANII) தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பூம்புகார் மெய்நிகர் தோற்ற விற்பனை நிலையம் (Poompuhar Virtual Reality Showroom) மற்றும் மெய்தோற்ற கைப்பேசி செயலியை (Augmented Reality Mobile App) துவக்கி வைத்தார்கள்.

“பூம்புகார்” என அனைவராலும் அறியப்படும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், பொதுத் துறை நிறுவனமாக தொடங்கப்பட்டு, 1973ஆம் ஆண்டு முதல் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழக கைவினைஞர்களின் கடுமையான உழைப்பினால் பித்தளை, பஞ்சலோகம், மரம், கல் போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட தனித்தன்மை வாய்ந்த கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்துவதோடு, கைவினைஞர்களின் திறமையை மேம்படுத்த பயிற்சி அளித்தல், கைவினைஞர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரத்தை உயர்த்துதல், வடிவமைப்புகளில் புதுமையை ஊக்குவித்தல், கைவினைஞர்களுக்கு சமூக பொருளாதார பாதுகாப்பு அளித்தல் போன்றவற்றை முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட பூம்புகார் மெய்நிகர் தோற்ற விற்பனை நிலையம் மூலம் தமிழக கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் பொருட்களை வாடிக்கையாளர்கள் எந்த இடத்திலிருந்தும் முப்பரிமாண முறையில்

பார்க்க முடியும். இந்த மெய்நிகர் தோற்ற தொழில் நுட்பத்தை விமானநிலையம், வணிக வளாகங்கள் போன்ற பொதுமக்கள் அதிகமாக கூடுகின்ற இடங்களில் அமைத்து கைவினைப் பொருட்களை எளிதாக சந்தைப்படுத்த இயலும். குறிப்பாக வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் நடத்தப்படும் கண்காட்சிகளில் மெய்நிகர் தோற்ற தொழில்நுட்பம் மூலம் அக்கைவினைப் பொருட்களை அந்த இடங்களுக்கு எடுத்துச் செல்லாமலே, அவற்றை முப்பரிமான வடிவமைப்பில் வாடிக்கையாளர்கள் பார்த்து இணையதள வழியாக வாங்கக்கூடிய வசதி இதில் செய்யப்பட்டுள்ளது. இத்தொழில்நுட்பம் தமிழ்நாட்டு கைவினைப் பொருட்களை உலகளவில் சந்தைப்படுத்த உறுதுணையாக இருக்கும்.

மேலும், தமிழ்நாட்டு கைவினைப் பொருட்களை தேசிய மற்றும் சர்வதேச அளவில் சந்தைப்படுத்தும் வகையில், புதிய முயற்சியாக தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் மெய்தோற்ற கைப்பேசி செயலி (Augmented Reality Mobile App) மூலம், கைவினைப் பொருட்களை முப்பரிமாணத்தில் காட்சிப்படுத்தி, அலுவலகம், வீடு மற்றும் தேவைப்பட்ட இடங்களில் அலங்கரித்து காட்டி கைவினைப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வாடிக்கையாளர்களிடமிருந்து கைப்பேசி வாயிலாகவே விற்பனை ஆணைகளை பெறமுடியும்.

இந்திய பி.பி.ஓ. மேம்பாட்டு திட்டத்தின் கீழ், தமிழகத்திற்கு 10 ஆயிரம் இடங்களை ஒதுக்க வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
மாண்புமிகு மத்திய எலக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில்நுட்பம், சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர்
திரு. **ரவிசங்கர் பிரசாத்** அவர்களுக்கு 18.09.2020 அன்று எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்.

இந்திய பி.பி.ஓ. (பிசினஸ் பிராசஸ் அவுட்சோர்சிங்) மேம்பாட்டு திட்டத்தை தொடங்கி வைத்திருக்கும் உங்களை பாராட்டுகிறேன். இதன் மூலம் பி.பி.ஓ. மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவை தொழில்களை நாடு முழுவதும் 2ஆம் மற்றும் 3ஆம் அடுக்கு நகரங்களில் தொடங்கவும், அதன் மூலம் வேலைவாய்ப்புகள் உயரவும் இந்த திட்டம் ஊக்கமளிக்கும்.

இந்த திட்டத்தின் மூலம் இந்தியா முழுவதும் ரூ.493 கோடி மொத்த செலவில் 48,300 இடங்களை அமைத்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டம் தமிழகத்தில் சென்னை பகுதியில் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. சென்னை பகுதியில் பி.பி.ஓ. தொழிலுக்கு இந்திய மென்பொருள் தொழில்நுட்ப பூங்காவில் (எஸ்.டி.பி.ஐ.) 7,705 இடங்களும் (100 இடங்கள் புதுச்சேரிக்கு) கிடைத்துள்ளது.

இதன்மூலம் 8,387 பேருக்கு நேரடியாகவும், 16,774 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் வெற்றி விகிதம் 93 சதவீதத்தைவிட அதிகமாகும். இதனால், தமிழ்நாட்டில் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

மேலும், இத்திட்டம் மூலம் தமிழ்நாட்டில், 2, 3ஆம் நிலையில் உள்ள 13 நகரங்களில் 51 ஐபிபிஓ, ஐபிபிஎஸ் நிறுவனங்கள் அமைக்கப்படும். கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கும் தமிழக அரசின் தொலைநோக்குப் பார்வையுடன் ஒத்திசைவாக இத்திட்டம் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டம் மகத்தான வெற்றி பெற்றுள்ள நிலையில் இந்தியா பிபிஓ ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு 10,000 இடங்கள் ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில்
ரூ.52.97 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் 05.10.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் மதுரை மாவட்டம், மதுரை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ. 5 கோடியே 60 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இயந்திரங்களுடன் கூடிய சேமிப்புக் கிடங்கினை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

கிராமப்புற மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்திடவும், வேளாண் உற்பத்தித் திறனில் உள்ள இடைவெளியை உரிய பண்ணை அணுகுமுறை மூலம் குறைத்து

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 05.10.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.*

உணவுப் பயிர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வேளாண் விளைபொருட்களின் அறுவடைக்குப்பிந்தைய பதப்படுத்தும் கட்டமைப்புகளை மேம்படுத்திடவும், சந்தையிணைப்பை வேறுபடுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கச் செய்து அவர்களின் வருமானத்தைப் பலமடங்காக உயர்த்திடவும், தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திடவும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு

மதுரை மாவட்டம், மதுரை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் இயந்திரங்களுடன் கூடிய 2000 மெ.டன் கிடங்கு

தரம் பிரிப்பு மற்றும் மதிப்பீட்டு கூடம்

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதிய கட்டமைப்பு பணி.

பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் மின்னணு வர்த்தக சந்தை திட்டத்தின் கீழ், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நடைபெறும் வர்த்தகத்தினை மேம்படுத்திட மதுரை மாவட்டம், மதுரை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.5 கோடியே 60 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இயந்திரங்களுடன் கூடிய சேமிப்புக் கிடங்கினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், விழுப்புரம் மாவட்டம் – விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.4 கோடியே 60 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இயந்திரங்களுடன் கூடிய சேமிப்புக் கிடங்கு;

நாமக்கல் மாவட்டம் – பரமத்தி வேலூர், விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம் மற்றும் விக்கிரவாண்டி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – கள்ளக்குறிச்சி, கோயம்புத்தூர் மாவட்டம் – ஆனைமலை, திருப்பூர் மாவட்டம் – வெள்ளக்கோயில் ஆகிய இடங்களிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.16 கோடியே 74 இலட்சத்து 45 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இயந்திரங்களுடன் கூடிய தரம்பிரிப்பு, மதிப்பீட்டு கூடங்கள், மின்னணு ஏலக்கூடங்கள் மற்றும் எடைமேடைகள்;

மின்னணு தேசிய வேளாண்மை சந்தை திட்டத்தின் கீழ், விவசாயிகளின் சந்தை திறனை ஊக்குவிக்கும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.3 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தலா 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 சேமிப்புக் கிடங்குகள், ஏலக்கூடம் மற்றும் விவசாயிகள் ஓய்வு அறை; திருப்பூர் மாவட்டம் – உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.3 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு, ஏலக்கூடம் மற்றும் உலர்களம்; திண்டுக்கல் மாவட்டம் – திண்டுக்கல் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.2 கோடியே 85 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு, ஏலக்கூடம் மற்றும் உலர்களம்; வேலூர் மாவட்டம் – அம்மூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.1 கோடியே 73 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இயந்திரங்களுடன் கூடிய ஏலக்கூடம் மற்றும் கலவை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தரம்பிரிப்பு மற்றும் மதிப்பீட்டு கூடம், மின்னணு ஏலக்கூடம்; தேனி மாவட்டம் – கம்பம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.51 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மின்னணு ஏலக்கூடம் மற்றும் விவசாயிகள் ஓய்வு அறை;

திருப்பூர் மாவட்டம் – திருப்பூர் மற்றும் பெதப்பம்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டம் – அன்னூர் ஆகிய இடங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.1 கோடியே 92 இலட்சத்து 90 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மின்னணு ஏலக்கூடங்கள்;

திருப்பூர் மாவட்டம் – திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.1 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தலைமை அலுவலகக் கட்டடம்; திருநெல்வேலி மாவட்டம் – திசையன்விளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.3 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள்; விருதுநகர் மாவட்டம் – விருதுநகர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அக்மார்க் ஆய்வகக் கட்டடம்;

புதுக்கோட்டை மாவட்டம் – அறந்தாங்கி, தருமபுரி மாவட்டம் – காரிமங்கலம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் – ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மூன்று ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள்;

இந்திய – இஸ்ரேல் கூட்டு முயற்சிகள் மூலம் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ், திண்டுக்கல் மாவட்டம் – ரெட்டியார்சத்திரத்தில் கட்டப்பட்டுள்ள காய்கறி மகத்துவ மையத்தில் ஈராண்டு பட்டயப்படிப்பு பயிலும் மாணவிகளின் நலனுக்காக, சுமார் 50 மாணவிகள் தங்கிடும் வகையில், நவீன வசதிகளுடன் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதிக் கட்டடம்;

என மொத்தம் ரூ.52 கோடியே 96 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வேளாண்மைத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

வேளாண்மை பொறியியல் துறை சார்பில் ரூ.4.99 கோடி மதிப்பீட்டில் விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு நவீன வேளாண் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் கடந்த 16.07.2019 அன்று சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், "அதிக விலையுள்ள வேளாண் இயந்திரங்களை வாங்க இயலாத விவசாயிகளுக்கு உதவும் வகையில், இவ்வியந்திரங்கள் வேளாண் பொறியியல் துறை மூலம் குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகிறது. விவசாயிகள் பயன்படுத்துவதற்காக இத்தகைய இயந்திரங்களை வேளாண் பொறியியல் துறை மூலம் விலைக்கு வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்படும்" என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, அதிக விலையுள்ள வேளாண் இயந்திரங்களை வாங்க இயலாத விவசாயிகளுக்கு உதவும் வகையில், நவீன மற்றும் புதிய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக விலைக்கு வாங்கி விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 05.10.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், விவசாயிகளின் பயன்பாட்டிற்காக, வாகனங்களின் சாவிகளை ஓட்டுநர்களிடம் வழங்கினார்கள்.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலமாக உருவாக்கப்பட்ட நீர்சேகரிப்பு கட்டுமானங்களை ஆழப்படுத்தி பராமரித்திடவும், நீர்வரத்து கால்வாய்களை சீரமைத்திடவும், நீர்வடிப்பகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.87 கோடியே 93 இலட்சம் செலவில் 50 டிராக்டர்கள், 4 மண் தள்ளும் புல்டோசர் இயந்திரங்கள், டிராக்டர்களுக்கான பண்ணைக் கருவிகள், 10 நெல் அறுவடை இயந்திரங்கள், 2 நெல் உலர்த்தும் இயந்திரங்கள், ஒரு கரும்பு அறுவடை இயந்திரம், 30 சோளம் அறுவடை இயந்திரங்கள், 32 பல்வகை தானியங்களை கதிரடிக்கும்

இயந்திரங்கள், 20 டிரக்குடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரங்கள், 17 மண் அள்ளும் இயந்திரங்கள் (Back hoe with front end loader), 10 பொக்லைன் போன்ற மண் அள்ளும் இயந்திரங்கள் உள்ளிட்ட 870 புதிய நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கிடுவதற்காக, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஆணை வழங்கப்பட்டு, இவ்வியந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், வேளாண்மைப் பொறியியல் துறையினால் ரூ.4 கோடியே 98 இலட்சத்து 73 ஆயிரம் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 23 டிராக்டர்கள் மற்றும் 17 மண் அள்ளும் (Back hoe with front end loader) இயந்திர வாகனங்களை விவசாயிகளின் பயன்பாட்டிற்காக குறைந்த வாடகையில் வழங்கிடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அவ்வாகனங்களின் சாவிகளை 5 ஓட்டுநர்களிடம் வழங்கினார்கள்.

மீனாட்சி கோயிலில் மகாத்மா

1946ஆம் ஆண்டு காந்திஜி தமிழகத்தில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். மதுரைக்குச் சென்றிருந்தார். அங்கே புகழ்பெற்றுத் திகழும் மீனாட்சியம்மன் ஆலயத்திற்குச் சென்றார். பூஜை முறைகளைக் கவனமாகப் பார்த்தபடி வந்த காந்திஜி, இடையிடையே தமக்கு எழுந்த சந்தேகங்களையும் கேட்டுத் தெளிவு செய்து கொண்டார், கோயிலில் உள்ள வாகனாதிகளை பார்வையிட்டார்; கோயிலை விட்டுப் புறப்படும்போது, கோயில் தர்மகர்த்தா, பார்வையாளர் பதிவுப் புத்தகத்தை காந்திஜியிடம் நீட்டினார். அதனை வாங்கிய மகாத்மா, “எனது வாழ்க்கையில் நான் முக்கியமாகக் கருதிய ஒரு காரியம் இன்றுதான் கைகூடியது” என்று எழுதிக் கையொப்பமும் இட்டார்.

உள்துறை சார்பில் ரூ.1.86 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய அலுவலகக் கட்டடம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 05.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், உள் (போக்குவரத்து) துறை சார்பில் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்திற்கு 1 கோடியே 86 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஓட்டுநர் தேர்வுத்தளத்துடன் கூடிய அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

2018–2019ஆம் ஆண்டிற்கான உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் இயக்கூர்திகள் சட்டங்கள் மற்றும் நிருவாக மானியக் கோரிக்கையின்போது, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்திற்கு பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு வசதிகளுடன் கூடிய ஓட்டுநர் தேர்வுத்தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, திண்டுக்கல் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் வேடசந்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்திற்கு 1 கோடியே 86 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஓட்டுநர் தேர்வுத்தளத்துடன் கூடிய அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 05.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் - வேடசந்தூர்

ஓட்டுநர் தேர்வுத்தளம்



கொரோனா தொற்றுநோய் (Covid-19) தடுப்பு விழிப்புணர்வு களப்பணியில் தமிழரசு

கடந்த 50 வருடங்களாக தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசிற்கும் பாலமாக விளங்கிவரும் “தமிழரசு” தற்போது உலகையே ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் தொற்று நோய் (Covid-19) தடுப்பு, விழிப்புணர்வு பணியிலும் இன்றியமையாத பங்கினை வழங்கி வருகிறது.

கொரோனா வைரஸ் விழிப்புணர்வு பணி

இக்கட்டான இத்தருணத்தில் பொதுமக்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று நோய் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் கொரோனா வைரஸ் தொற்று நோயின் அறிகுறிகள், நோயின் தன்மைகள், நோய் சிகிச்சை முறைகள், பரவுவதை தடுக்கும் வழிமுறைகள், அரசு மற்றும் தனியார் பரிசோதனை கூடங்களின் விவரங்கள், சிகிச்சையளிக்கும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனை விவரங்கள், நோய் பாதிப்புக்குள்ளானவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், வீட்டு கண்காணிப்பில் உள்ளவர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், முதியவர்கள் மற்றும் நீண்ட நாள்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு உட்கொள்ள வேண்டிய மருந்து மற்றும் உணவு முறைகள், நோய்க்கு பயன்படுத்தப்படும் மருத்துவ உபகரணங்களின் விவரங்கள் போன்ற விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள், மடிப்பேடுகள், சுவரொட்டிகள் ஆகியவை தயாரிக்கும் பணி, செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்களால், கொரோனா பேரிடர் காலத்திலும் மேற்கொள்ளப்பட்டு, “தமிழரசு” அச்சகத்தில் தொடர்ந்து அச்சிடப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி அலுவலகங்கள், அனைத்துத் துறை அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இப்பொது முடக்கம் காலத்திலும் “தமிழரசு” அச்சகம் மற்றும் அலுவலக பணியாளர்கள் இரவு, பகல் பாராமல் தொடர்ந்து இப்பணியினை பொதுமக்களின் நலனுக்காக மேற்கொண்டு வந்தனர்.





தொல்லியல் துறை சார்பில் புனரமைக்கப்பட்ட கட்டபொம்மன் கோட்டை, மனோரா நினைவு சின்னம், டச்சுக் கல்லறை ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 05.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொல்லியல் துறை சார்பில் ரூ.3 கோடியே 51 இலட்சத்து 64 ஆயிரம் மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், பாஞ்சாலங்குறிச்சி கிராமத்தில் உள்ள கட்டபொம்மன் கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்தில் உள்ள மனோரா நினைவு சின்னம் மற்றும் நாகப்பட்டினத்தில் உள்ள டச்சுக் கல்லறை ஆகிய மூன்று நினைவு சின்னங்களை திறந்து வைத்தார்கள்.

ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி திட்டத்தின்படி, சுற்றுலாத் துறையின் மூலம் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 12 நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள தெரிவு செய்யப்பட்டு, இப்பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.24 கோடியே 81 இலட்சத்து 38 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, முதற்கட்டமாக தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், பாஞ்சாலங்குறிச்சி கிராமத்தில் உள்ள கட்டபொம்மன் கோட்டையின் எஞ்சிய பகுதியை புனரமைத்து பாதுகாக்கும் வகையில், ரூ.92 இலட்சத்து 43 ஆயிரம் செலவில், கோட்டையின் எஞ்சிய பகுதிகளை சுண்ணாம்பு கலவை கொண்டு சீர் செய்யப்பட்டு, சுற்றிலும் இரும்பிலான பாதுகாப்பு கிரில் அமைக்கப்பட்டு, பார்வையாளர்களுக்கான குடிநீர் வசதி, கழிவறை வசதி, பாதுகாவலர் அறை, புல்வெளித்தளம், மின்விளக்குகள், வழிக்காட்டு பலகைகள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சரபேந்திர இராஜபட்டினம் கிராமத்தில், எட்டு அடுக்குகளைக் கொண்ட 75 அடி உயரமுள்ள அறுகோண அமைப்புடைய மனோரா நினைவு சின்னத்தை புனரமைத்து பாதுகாத்திடும் வகையில், ரூ.2 கோடியே 33 இலட்சத்து 27 ஆயிரம் செலவில், கோட்டையைச் சுற்றிலும் கற்கட்டுமானம் அமைக்கப்பட்டு, அதன்மேல் இரும்பிலான பாதுகாப்பு கிரில் அமைத்து, குடிநீர் வசதி, பாதுகாவலர் அறை, புல்வெளித்தளம், மின்விளக்குகள், வழிக்காட்டு பலகைகள், கண்காணிப்பு கேமிராக்கள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டத்தில் உள்ள டச்சுக் கல்லறையை புனரமைத்து பாதுகாத்திடும் வகையில், ரூ.25 இலட்சத்து 94 ஆயிரம் செலவில், கல்லறையை சீரமைத்து சுற்றிலும் கற்கட்டுமானத்துடன் கூடிய இரும்பிலான பாதுகாப்பு கிரில் அமைக்கப்பட்டு, புல்வெளித்தளம், வழிகாட்டிப் பலகைகள், மின் விளக்குகள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

புனரமைப்பதற்கு முன்பு

புனரமைப்பதற்கு பின்பு

பொதுப்பணித் துறையின் கீழ் செயல்படும் நீர்வள ஆதாரத் துறை சார்பில் ரூ.24.93 கோடி மதிப்பீட்டில் 3 திட்டப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையின் கீழ், செயல்படும் நீர்வள ஆதாரத் துறை சார்பில் மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம், மாடக்குளம் கண்மாய்க்கு நீர் வழங்கி மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பொன்மேனி, எல்லீஸ்நகர், பழங்காநத்தம், எஸ்.எஸ்.காலனி, மாடக்குளம் மற்றும் டி.வி.எஸ் நகர் ஆகிய பகுதிகளில் நிலத்தடி நீரை செறிவூட்ட வைகை ஆற்றின் குறுக்கே ரூ.17.40 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணிக்கு காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், ரூ.7.53 கோடி மதிப்பீட்டில் திருமங்கலம் பிரதான கால்வாயின் 1ஆவது கிளைக் கால்வாயினை புனரமைக்கும் பணி மற்றும் தென்காசி மாவட்டம், சீவலப்பேரி குளத்தின் நடைபாதை அமைக்கும் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப்பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், புதிய நீராதாரங்களை உருவாக்கிடவும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, நீர்வள ஆதாரத் துறை மூலமாக பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 07.03.2018 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டின்போது, "வைகை ஆற்றின் குறுக்கே மாடக்குளத்தில் படுகை அணை கட்டப்படும்" என்று அறிவித்தார்கள்.

அதன்படி, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம், மாடக்குளம் கண்மாய்க்கு நீர் வழங்கி மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பொன்மேனி, எல்லீஸ்நகர், பழங்காநத்தம், எஸ்.எஸ்.காலனி, மாடக்குளம் மற்றும் டி.வி.எஸ் நகர் ஆகிய பகுதிகளில் நிலத்தடி நீரை செறிவூட்ட வைகை ஆற்றின் குறுக்கே ரூ.17.40 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இத்தடுப்பணை கட்டப்படுவதால் மாடக்குளம் கண்மாய், கீழமாத்தூர் கண்மாய் மற்றும் துவரிமான் கண்மாய் ஆகிய கண்மாய்களில், அதன் மொத்த கொள்ளளவான 215.89 மில்லியன் கன அடி தண்ணீர் சேமிப்பது உறுதி செய்யப்படுவதோடு, 3,360.13 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இத்திட்டத்தினால் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பொன்மேனி, எல்லீஸ்நகர், பழங்காநத்தம், எஸ்.எஸ். காலனி, மாடக்குளம் மற்றும் டி.வி.எஸ் நகர் ஆகிய பகுதி மக்களின் குடிநீர் தேவை பூர்த்தி அடைவதுடன் அப்பகுதியின் நிலத்தடி நீர்மட்டமும் உயரும்.

மேலும், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், திருமங்கலம் பிரதான கால்வாயின் 1ஆவது கிளைக் கால்வாயை ரூ.6.83 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி மற்றும் தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், சீவலப்பேரி குளத்தைச் சுற்றி ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் நடைபாதை அமைக்கும் பணி;

என மொத்தம் ரூ.24.93 கோடி மதிப்பீட்டிலான 3 நீர்வள ஆதாரத் துறையின் திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

பணி நியமன ஆணை

பொதுப்பணித் துறையில் 2018–2019 மற்றும் 2019–2020ஆம் ஆண்டுகளுக்கான 148 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

படமும்/ செய்தியும்

தேசிய நாட்டு நலப்பணித் திட்ட விருதுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களை 05.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், 2018–2019ஆம் ஆண்டிற்கான தேசிய நாட்டு நலப்பணித்திட்ட விருதுகளை பெற்ற காரைக்குடி, அழகப்பா செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் திரு.K.T.லோகநாதன் மற்றும் திருச்சிராப்பள்ளி, பிஷாப் ஹீபர் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர் திரு.M.தர்ம சாஸ்தா ஆகியோர் சந்தித்து, விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், உணவு பூங்கா, வனக்குடி தொழிற் பூங்கா மற்றும் சக்கரக்கோட்டை தொழிற் பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 22.09.2020 அன்று, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.48.50 கோடி மதிப்பீட்டில் விவசாய பங்களிப்போடு 94 குடிமராமத்துப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. 2020–2021ஆம் ஆண்டு ரூ.31 கோடி மதிப்பீட்டில் 44 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 70 சதவிகிதப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. தடுப்பணைகள் கட்டி, மழை காலத்தில் பொழிகின்ற நீரை சேமித்து நிலத்தடி நீர் உயர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நபார்டு நிதியுதவியுடன் மண்டபம் ஒன்றியம், சாந்தப்பகோன் வலசை கிராமம், மன்னார் வளைகுடா கடலோரப் பகுதியில் ரூ.11.15 கோடி மதிப்பீட்டில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆர்.எஸ்.மங்கலம் வட்டம், ஆர்.எஸ்.மங்கலம் பெரிய கண்மாயை ரூ.18.82 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணி துவங்கப்படவுள்ளது. இராமநாதபுரம், பெரிய கண்மாய்க்கு நீர்வரத்து பெறுவதற்கு வைகை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள தலைமதகில் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் கூடுதல் நீர்போக்கி அமைக்கும் திட்டம்

அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. பரமக்குடி, செவ்வூர் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. பரமக்குடி வட்டம், சூடியூர் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. இது போன்ற பல திட்டங்கள் அம்மா அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. இத்திட்டங்கள் நிறைவேறும்போது மழைக்காலங்களில் பொழிகின்ற நீர் வீணாகாமல் ஆங்காங்கே தடுப்பணைகள் மூலமாக சேமித்து வைக்கப்பட்டு நிலத்தடி நீர் செறிவூட்டப்படும்.

மாண்புமிகு அம்மாவின் அரசால், இந்த மாவட்ட மக்களின் நலன் கருதி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ரூ.345 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு வருகிறது. இது வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டம். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியோடு, தமிழகம் முழுவதும் 11 அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளை அமைக்கும் பணிகள், மத்திய அரசின் அனுமதி பெற்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எந்த மாநிலத்திலும் ஒரே நேரத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளைப் பெற்ற வரலாறு கிடையாது. அந்த வரலாற்றையும் மாண்புமிகு அம்மாவின் அரசு படைத்துள்ளது. இந்த மருத்துவக் கல்லூரிப் பகுதியில் நவீன மருத்துவமனை உருவாக்கப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஏழை, எளிய மக்களுக்கு தரமான சிகிச்சை அளித்து நன்மை பயக்கும் ஒரு அற்புதமான திட்டத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு துவக்கியுள்ளது.

கீழக்கரை, குதக்கோட்டை கிராமத்தில் புதிய சட்டக் கல்லூரிக்கு கட்டடம் கட்டும் பணி ரூ.76.61 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. அதுமட்டுமல்லாமல் 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை இந்த மாவட்டத்திற்கு கொடுத்துள்ளோம். மேலும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தி, ஏழை, எளிய மக்கள் உயர்கல்வி பயில வழிவகை செய்த அரசு அம்மாவின் அரசு என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

இராமேஸ்வரத்தில் யாத்ரீகர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி சுமார் ரூ.30.96 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. இப்பணி விரைந்து முடிக்கப்பட்டு பக்தர்கள் தங்குவதற்குண்டான வசதி உருவாக்கித் தரப்படும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, மீனவர்களின் நலனுக்காக, மீனவர்களின் நீண்டகாலக் கோரிக்கைகளான, ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளை கையாள்வதற்கு இராமநாதபுரம், மூக்கையூர் கிராமத்தில் ரூ.128.70 கோடி மதிப்பீட்டில் மீன்பிடி துறைமுகம் கட்டி முடிக்கப்பட்டு 04.03.2019 அன்றும், குந்துக்கலில் ரூ.70 கோடி மதிப்பீட்டில் மீன்பிடி இறங்குதளம் கட்டி முடிக்கப்பட்டு 19.09.2020 அன்றும் பயன்பாட்டிற்கு நான் துவக்கி வைத்தேன். மத்திய, மாநில அரசுகள் இணைந்து மானிய விலையில் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் வழங்க வேண்டுமென்ற மீனவர்களின் கோரிக்கை அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்காக, ஒரு படகின் விலையான ரூ.80 இலட்சத்தில், மத்திய அரசு 50 சதவிகிதம், மாநில அரசு 20 சதவிகிதம் என ரூ.56 இலட்சம் மானியமாக தரப்படுகிறது. எஞ்சிய தொகையை மீனவர்கள் தங்கள் சொந்த நிதி மற்றும் வங்கியின் மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம். இராமநாதபுரம் மாவட்டத்தில் 22 ஆழ்கடல் மீன்பிடி படகுகள் ரூ.17.6 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்காக 70 சதவிகித மானியமாக ரூ.12.35 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், 232 பயனாளிகளுக்கு படகு கட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அதிக நிவாரணம் முதன்முதலில் வழங்கிய அரசு அம்மாவின் அரசுதான். இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த 4 ஆண்டுகளில் 3,50,220 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.1,316.63 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2016–2017ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,40,636 விவசாயிகளுக்கு இடுபொருள் நிவாரண உதவித்தொகையாக ரூ.146 கோடி வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம், இராஜசிங்கமங்கலம் மற்றும் எட்டிவயல் ஆகிய இடங்களில் சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.22 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. 847 வேளாண் இயந்திரங்கள் 13 கோடியே 15 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்காக, விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ், பரமக்குடி, முதுகுளத்தூர் மற்றும் கமுதியில் 10 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கூட்டுப்பண்ணையத் திட்டத்தின் கீழ், கடந்த மூன்றாண்டுகளில், 205 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு மூலதன நிதியாக 10 கோடியே 25 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு, அதன் மூலம் 990 பண்ணை இயந்திரங்கள் வாங்கப்பட்டு, 20 ஆயிரத்து 500 சிறு, குறு விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். 2020–2021 ஆம் ஆண்டிலும் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு 50 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. நுண்ணீர் பாசனத் திட்டத்தில், கடந்த 4 ஆண்டுகளில் 7 கோடியே 59 இலட்சம் ரூபாய் மானியத்தில் நுண்ணீர் பாசன அமைப்புகள் 7 ஆயிரத்து 175 ஏக்கரில் நிறுவப்பட்டுள்ளது. 2020–2021ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக 7 கோடியே 94 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் சேமிப்பு கிடங்குகள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. தரமான இடுபொருட்களை இருப்பு வைத்து, விநியோகிக்கும் வகையில், 4 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களும், 3 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் 6 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. மேலும், 4 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் ரூ.8 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. அதேபோல், விவசாயிகளுக்கு சூரிய சக்தி பம்புகள் மானிய விலையில் கொடுக்கப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உணவுப் பூங்கா அமைப்பதற்கும், வனக்குடி தொழிற்பூங்கா, சக்கரக்கோட்டை தொழிற்பூங்கா அமைப்பதற்கும் மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் போன்ற பின்தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை உருவாக்க வேண்டுமென்று அம்மாவின் அரசு நீண்டகால திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இப்படி தென்மாவட்டங்களில், குறிப்பாக பின்தங்கிய மாவட்டங்களில் புதிய தொழில்கள் துவங்குபவர்களுக்கு பல்வேறு சலுகைகளை அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. தொழிற்சாலைக்கான நிலத்தில் 50 சதவீதம் மானியமாக கொடுக்கிறது. அதுமட்டுமல்லாமல், தொழிற்சாலைகளுக்கு அனைத்து அனுமதிகளும் உடனடியாக வழங்கப்படுகிறது. தென் மாவட்டங்களில் குறிப்பாக பின்தங்கிய மாவட்டங்களில் புதிய தொழில் துவங்குவதற்கு எல்லா வகையிலும் முன்னுரிமை கொடுக்கும் அரசு அம்மாவின் அரசு. இதனால், தென் மாவட்டங்களில் இருக்கும் மக்கள், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் புதிய தொழில்கள் வரும்பொழுது, இங்குள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமான காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் துவங்கப்பட்டு விட்டன. இதன் மூலம், இராமநாதபுரம் மாவட்டத்தில் 1 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதியைப் பெறும். காவேரி ஆற்றில் மேட்டூர் அணையிலிருந்து உபரிநீராக வெளியேறி கடலில் கலக்கின்ற நீரை வறட்சியான பகுதிகளுக்கு கால்வாய் வெட்டி திருப்பி விடுவதன் மூலம் வறட்சியான பகுதிகளிலுள்ள ஏரிகள், குளங்கள், குட்டைகள் நிரப்பப்பட்டு, நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, கோடை காலங்களில் வேளாண் பெருமக்களுக்கும், குடிப்பதற்கும் நீர் கிடைக்கும். மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டத்தை பல்லாயிரக்கணக்கான செலவில் அம்மாவின் அரசு செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

காவேரி முதல் குண்டாறு வரை 259 கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாய் வெட்டப்பட வேண்டும். பகுதி–1இல் காவேரி முதல் தெற்கு வெள்ளாறு (118 கிலோ மீட்டர்) வரை. பகுதி–2இல் தெற்கு வெள்ளாறு முதல் வைகை (108 கிலோ மீட்டர்) வரை. பகுதி–3இல், வைகை முதல் குண்டாறு (33 கிலோ மீட்டர்) வரை. பகுதி–1க்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கரூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் நில எடுப்பு செய்வதற்கு அரசாணை வழங்கப்பட்டு, வருவாய்த் துறையில் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, நில எடுப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்த நிதியாண்டில், காவேரி – வைகை – குண்டாறு இணைப்பு திட்டத்திற்கு ரூ.700 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டம் பகுதி–2 செயல்படுத்தும்பொழுது, இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் பயன்பெறும்.

காவேரி–வைகை–குண்டாறு இணைப்புக் கால்வாயானது மானாமதுரை வட்டம், இடைக்காடு கிராமத்தில் வைகை நதியை கடந்து செல்கிறது. இவ்விடத்தில் 1,500 கனஅடி நீரை வைகை நதியில் திருப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்திலிருக்கின்ற கண்மாய்கள், ஏரிகள், குளங்கள், ஊரணிகள், குட்டைகள் அனைத்தும் நிரப்பப்படும். இத்திட்டத்தின் மூலம் நான் ஏற்கெனவே கூறியதைப் போல 1 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி பெறும். இத்திட்டத்திற்கு தோராயமாக ரூ.14,000 கோடி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை, இவ்வளவு அதிக

செலவில் தமிழகத்தில் எந்தத் திட்டமும் நடைபெறவில்லை. இவ்வளவு செலவு செய்து, வேளாண் பெருமக்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றுகின்ற ஒரே அரசு அம்மாவின் அரசுதான்.

பலர், விவசாயிகளுக்கு என்ன செய்தார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே தெளிவுபடுத்தியிருக்கிறேன், நான் ஒரு விவசாயி. விவசாயி குடும்பத்தில் பிறந்து, விவசாயியாக இருக்கின்ற காரணத்தால்தான் விவசாயிகள் படுகின்ற கஷ்டங்கள், துன்பங்கள் நன்றாக உணர்ந்து, அந்த விவசாயிகளுடைய துன்பங்களை களைய வேண்டுமென்பதற்காகத்தான் எவ்வளவு செலவானாலும் அதை நிறைவேற்ற வேண்டுமென்றுதான் காவேரி – வைகை – குண்டாறு இணைப்பு திட்டத்தை அறிவித்து, செயல்படுத்த இருக்கின்றோம் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களுடைய அரசு, வேளாண் பெருமக்களுடைய அரசு, ஒட்டுமொத்த தமிழ் மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற அரசு, அனைத்துத்தர மக்களுக்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஆரம்பத்தில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு அரசு அறிவித்த ஆலோசனைகளை ஏற்று சிறப்பாக செயல்பட்டதன் காரணத்தால், இந்நோய்ப் பரவல் படிப்படியாக குறையத் தொடங்கியிருக்கிறது. ஆரம்பத்தில், இந்த நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு நாம் கடுமையாக பல நடவடிக்கைகளை எடுத்தோம். ஊரடங்கு உத்தரவை பிறப்பித்தோம். இதன்மூலம் நோய்த் தொற்றுப் பரவல் தடுக்கப்பட்டது. அதனால்தான் இன்றைக்கு கொரோனா தொற்றுப் பரவல் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் குறைவாக இருக்கிறது. இதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கவில்லை. இந்த நோய்த் தொற்று எவ்வாறு பரவுகிறது என்று யாருக்கும் தெரியவில்லை. அப்படிப்பட்ட ஒரு கொடிய நோய் இது. இந்நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு, அரசு கடுமையான முயற்சிகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. மருத்துவ நிபுணர்கள் கூறுகின்ற ஆலோசனைகளின்படி அந்த மாவட்ட நிருவாகத்திற்கு ஆலோசனைகளை வழங்கியதன் மூலமாக அந்தந்த மாவட்ட நிருவாகம் அதற்கேற்றவாறு செயல்பட்டதன் விளைவாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்நோய்ப் பரவல் படிப்படியாக குறையத் தொடங்கியிருக்கிறது. இன்னும் குறுகிய காலத்தில், இந்த எண்ணிக்கைகளை குறைத்து, இந்நோய் தொற்றுப் பரவல் தடுக்கப்பட்டு இயல்பு நிலைக்கு வருவதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதோடு, தமிழ்நாடு முழுவதும் இந்த நோய்ப் பரவல் படிப்படியாக குறையத் தொடங்கியிருக்கிறது.

இந்திய அளவில், மற்ற மாநிலங்களில் இந்நோய்ப் பரவல் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தான் இந்நோய்ப் பரவல் குறைந்து கொண்டிருக்கிறது. RTPCR Test மூலம்தான் இந்த நோயை துல்லியமாக கண்டுபிடிக்க முடியும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறிய ஆலோசனையின்படி, RTPCR Test செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில்தான் அதிகமான எண்ணிக்கையில், அதாவது நாள் ஒன்றுக்கு 85,000 பரிசோதனைகள் எடுக்கிறோம். தமிழ்நாட்டில் அதிகமான பரிசோதனைகள் மேற்கொண்டதன் விளைவாக இந்நோய்த் தொற்று படிப்படியாக குறையத் தொடங்கியுள்ளது. குணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது, தமிழ்நாட்டில்தான் இறப்பு சதவிகிதம் குறைவாக உள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாக கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் தடுக்கப்பட்டு, குறையத் தொடங்கியுள்ளது. குறுகிய காலத்தில் இயல்பு நிலைக்குத் திரும்புவோம் என்று நம்புகிறோம். வேளாண் பெருமக்களுக்கும், சிறு, குறு, நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்களுக்கும் 100 சதவிகித தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே, தொழில் புரிபவர்களுக்கு எந்தவித சிரமமும் இல்லாமல் 100 சதவிகித தொழிலாளர்களை வைத்துப் பணிபுரிய மாண்புமிகு அம்மாவின் அரசு உத்தரவு வழங்கியுள்ளது.

அதேபோல, எந்த ஆண்டும் இல்லாத அளவில் அதிகமான நெல் விளைச்சல் இந்த ஆண்டு கிடைத்துள்ளது. இதற்கு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகள் தான் காரணம். வேளாண் துறை அதிகாரிகள் குறிப்பிட்ட நேரத்தில் அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்த காரணத்தால் அதிக விளைச்சல் பெறப்பட்டுள்ளது. இதற்கு வேளாண் துறை அதிகாரிகளை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, பொதுப்பணித் துறை போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் சிறப்பான நடவடிக்கைகள் எடுத்த காரணத்தால் அனைத்துத் துறைகளிலும், மற்ற மாநிலங்களைக் காட்டிலும், அதிக வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

இராமநாதபுரம் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 22.09.2020 அன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வேளாண்மைத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நிதித்துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.24.25 கோடி மதிப்பீட்டிலான 844 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, பொதுப்பணித் துறை (நீர்வள ஆதாரத் துறை), வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வேளாண்மை பொறியியல் துறை, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, பள்ளிக் கல்வித் துறை, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.70.55 கோடி மதிப்பீட்டில் 220 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 22.09.2020 அன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன், சட்டமன்ற உறுப்பினர்கள், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

ஊராட்சி அமைப்புகளின் சிறந்த முயற்சிகள் மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசின் விருதுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களிடம் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், ஊராட்சி நிருவாகத்தில் தகவல் மற்றும் தொழில்நுட்ப முறைகளை (Information and Communication Technology Tools) திறம்பட செயல்படுத்தியமைக்காக தேசிய அளவில் தமிழ்நாடு இரண்டாவதாக தெரிவு செய்யப்பட்டு, மத்திய ஊராட்சி அமைச்சகத்தால் தமிழ்நாடு அரசிற்கு வழங்கப்பட்ட 2018–2019ஆம் ஆண்டிற்கான மின் ஆளுமை விருது (e-Panchayat Puraskar) மற்றும் பாராட்டுச் சான்றிதழை மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களை தலைமைச் செயலகத்தில் 19.09.2020 அன்று விருது பெற்றவர்கள் விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

மேலும், ஊராட்சி அமைப்புகளின் சிறந்த முயற்சிகள் மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் 2018–2019ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகத்தால் வழங்கப்பட்ட தீன் தயாள் உபாத்யாய ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது பெற்ற தருமபுரி மாவட்ட ஊராட்சி, திருமங்கலம் மற்றும் கொங்கணாபுரம் வட்டார ஊராட்சிகள், ஆண்டாங்கோவில் கிழக்கு, குருமந்தூர், அம்புகோவில், நெடுங்கல், இக்கரை பொழுவாம்பட்டி மற்றும் மேவளூர்குப்பம் கிராம ஊராட்சிகள், நானாஜி தேஷ்முக் இராஷ்டிரிய கௌரவ கிராம சபை தேசிய விருது பெற்ற களவனூர் கிராம ஊராட்சி, கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்ட தேசிய விருது பெற்ற டி.சி. கண்டிகை கிராம ஊராட்சி, குழந்தை நேய கிராம ஊராட்சிக்கான தேசிய விருது

பெற்ற அனுமந்தபுரம் கிராம ஊராட்சி ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் தனி அலுவலர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

ஊராட்சி அமைப்புகளின் சிறந்த முயற்சிகள் மற்றும் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் ஆண்டுதோறும் பல்வேறு இனங்களின் கீழ், மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சி ஆகிய மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு ஊக்கத் தொகையுடன் கூடிய விருதுகளை வழங்கி கௌரவப்படுத்தி வருகிறது.

அந்த வகையில் 2018–2019ஆம் ஆண்டிற்கான தீன் தயாள் உபாத்யாய ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருதுகளின் கீழ், (Deen Dayal Upadhyay Panchayat Sashaktikaran Puraskar) சிறந்த மாவட்ட ஊராட்சி விருது – தருமபுரி மாவட்டத்திற்கும், சிறந்த வட்டார ஊராட்சி விருதுகள் – சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மதுரை மாவட்டம், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கும், சிறந்த கிராம ஊராட்சி விருதுகள் – கரூர் மாவட்டம், ஆண்டாங்கோவில் (கிழக்கு) கிராம ஊராட்சி, ஈரோடு மாவட்டம், குருமந்தூர் கிராம ஊராட்சி, புதுக்கோட்டை மாவட்டம், அம்புகோவில் கிராம ஊராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம், நெடுங்கல் கிராம ஊராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம், இக்கரை பொழுவாம்பட்டி கிராம ஊராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம், மேவளூர்குப்பம் கிராம ஊராட்சி ஆகிய ஆறு கிராம ஊராட்சிகளுக்கும் வழங்கப்பட்டது.

ஊரகப் பகுதி மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களை வலுவான கிராம சபையின் பங்களிப்புடன் செயல்படுத்தியமைக்கான நானாஜி தேஷ்முக் இராஷ்டிரிய கௌரவ கிராம சபை விருது (Nanaji Deshmuk Rashtriya Gaurav Gram Sabha Puraskar) கள்ளக்குறிச்சி மாவட்டம், திருநாவலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த களவனூர் கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்டது.

கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டத்தினை திறம்பட தயாரித்ததில் சிறப்பாக செயலாற்றியமைக்கான கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்ட தேசிய விருது திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த டி.சி. கண்டிகை கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்டது.

கிராமப்புற குழந்தைகளின் நலனைப் பேணும் வகையிலான வளர்ச்சித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியமைக்கான, குழந்தை நேய கிராம ஊராட்சிக்கான தேசிய விருது விழுப்புரம் மாவட்டம், காணை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அனுமந்தபுரம் கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்டது.

மேற்கண்ட விருதுகளை பெற்ற தருமபுரி மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி எம். யசோதா, திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திருமதி ஜெ. லதா, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் கரட்டூர் திரு. கே.கே. மணி, ஆண்டாங்கோவில் கிழக்கு கிராம ஊராட்சித் தலைவர் திருமதி எஸ். சாந்தி, குருமந்தூர் கிராம ஊராட்சித் தலைவர் திருமதி என்.சி. தேவி, அம்புகோவில் கிராம ஊராட்சித் தலைவர் திரு. கா.சுமன் காளிதாஸ், நெடுங்கல் கிராம ஊராட்சித் தலைவர் திரு.பி.மகேஸ்வரன், இக்கரை பொழுவாம்பட்டி கிராம ஊராட்சித் தலைவர் திரு. ஏ. சதானந்தம், மேவளூர்குப்பம் கிராம ஊராட்சித் தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி பி. பிச்சையம்மாள், களவனூர் கிராம ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. எம்.செந்தில் முருகன், அனுமந்தபுரம் கிராம ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பி. மணிவாசகம் ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து, விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

ஆட்டோகிராபால் விளைந்த அற்புதம்

ஒரு முறை காந்திஜி சிறையிலிருந்தபோது ஓர் ஆங்கிலோ–இந்திய அதிகாரி அவரிடம் வந்து ‘ஆட்டோகிராப்’ கேட்டார்.

காந்திஜி ஆட்டோகிராப்பில் வெறும் கையெழுத்திடாமல் கருத்துரையையும் எழுதினார். அந்தக் கருத்துரை இதுதான்.

அன்பாயிருக்கக் காசு, பணம் செலவில்லை. (It does not cost to be kind)

இந்த வாக்கியத்தைப் படித்ததிலிருந்து, அந்த ஆங்கிலோ–இந்திய அதிகாரியின் முரட்டுச் சுபாவம் மாறிவிட்டது.

மின்சாரம் மற்றும் சூரியசக்தி மூலம் இயங்கும் புதிய ஆட்டோக்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமைச் செயலகத்தில், 21.09.2020 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 21.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், M Auto Electric Mobility நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட மின்சாரம் மற்றும் சூரிய சக்தி மூலம் இயங்கும் 13 வடிவங்களிலான புதிய ஆட்டோக்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் நவீன தொழில்நுட்பங்கள் நிறைந்த முதலீடுகளை ஈர்த்திட, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் துபாய் ஆகிய நாடுகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு ரூ.8,835 கோடி மதிப்பீட்டிலான முதலீடுகளை ஈர்த்து, சுமார் 35,520க்கும் மேற்பட்ட நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 41 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டார்கள்.

இப்பயணத்தின் போது, துபாயில் நடைபெற்ற முதலீட்டாளர் சந்திப்பில், பெட்ரோல் ஆட்டோக்களை சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சார ஆட்டோக்களாக மாற்றி இயக்கும் திட்டத்திற்காக ரூ.100 கோடி முதலீட்டில், சுமார் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், துபாயின் M Auto Electric Mobility நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, தற்போது, M Auto Electric Mobility நிறுவனம், ரூ.140 கோடி முதலீட்டில், சுமார் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின்சாரம் மற்றும் சூரிய சக்தி மூலம் இயங்கும் 13 வடிவங்களில் புதிய ஆட்டோக்களை உருவாக்கி அறிமுகப்படுத்தியுள்ளது. இப்புதிய ஆட்டோக்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்த ஆட்டோக்களில், சிசிடிவி கேமரா, GPS வசதி, ஆபத்து பொத்தான் (Panic Button), TAB போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. M-Electric Auto-க்களின் ஓட்டுநர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ABSTRACT

Revenue Administration - Jurisdiction - Bifurcation of Nagapattinam District - Creation of Mayiladuthurai new District - Orders - Issued.

Revenue and Disaster Management Department, Revenue Administration Wing, [RA1(1)] Section

G.O.(Ms) No. 183 **Dated: 07.04.2020**

விகாரி, பங்குனி 25,
திருவள்ளுவர் ஆண்டு 2051

Read:

Principal Secretary and Commissioner of Revenue Administration Letter No.Ser 3(4)/15000/2020, dated 4.4.2020.

*****

ORDER:

The Hon'ble Chief Minister has made the following announcement on the floor of the Assembly on 24.03.2020 under Tamil Nadu Legislative Assembly Rule No. 110:

"நிர்வாக வசதிக்காகவும், மக்களுக்கு அரசின் திட்டங்கள் விரைந்து சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்திலும், நாகப்பட்டினம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தமிழ்நாட்டின் 38வது மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கப்படும்."

2. Based on the above announcement of Hon'ble Chief Minister and after carefully examining the proposals received from the Principal Secretary/ Commissioner of Revenue Administration in this regard, formal order is hereby issued for formation of the Mayiladuthurai District with the District Headquarters at Mayiladuthurai by bifurcating the existing Nagapattinam District.

3. The Principal Secretary / Commissioner of Revenue Administration is hereby authorized to take necessary follow up action soon after the completion of **lock-down period and other restrictions pertaining to prevention of Covid -19**.

(By order of the Governor)

K. Shanmugam
Chief Secretary to Government

அரசு பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது உயர்த்தி அரசாணை

ABSTRACT

Public services – Age of superannuation of Government servants, Teachers, etc. – Increased to 59 years – Orders – Issued.

PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (S) DEPARTMENT

G.O.(Ms)No.51

Dated:07.05.2020
சார்வரி – சித்திரை 24
திருவள்ளுவர் ஆண்டு – 2051

Read:

G.O.(Ms)No.532, Personnel and Administrative Reforms (Personnel-M) Department, dated 25.04.1979.

******

ORDER:

The Government have decided to increase the age of superannuation of Government servants from 58 years to 59 years and orders accordingly. This will apply to all those who are in regular service as on date and due to retire on superannuation from 31.05.2020.

2. This order shall also be applicable to all teaching and non-teaching staff working in aided educational institutions and employees of all Constitutional / Statutory Bodies, Public Sector Undertakings including all State Corporations, Local Bodies, Boards, Commissions, Societies, etc.

3. The relevant provisions under rule 56 of Tamil Nadu Fundamental Rules will be modified to the above extent. Necessary amendment to the above rules will be issued accordingly.

(BY ORDER OF THE GOVERNOR)

K. SHANMUGAM,
CHIEF SECRETARY TO GOVERNMENT.

எரிசக்தித் துறையின் சார்பில் ரூ.353.12 கோடி மதிப்பீட்டில் 25 துணை மின் நிலையங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறையின் சார்பில் ஈரோடு, சென்னை, கோயம்புத்தூர், கடலூர், கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், சேலம், தஞ்சாவூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், திருச்சி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் ரூ.353 கோடியே 11 இலட்சத்து 84 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 25 துணை மின் நிலையங்களை திறந்து வைத்தார்கள்.

மின்பாதையில் ஏற்படுகின்ற மின் இழப்பையும், மின்பராமரிப்பு செலவினங்களையும் குறைத்து, ஒவ்வொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற உச்சகட்ட மின் தேவையை நிறைவு செய்யும் வகையில் சரியான மின்னழுத்தத்துடன் சீரான மின்சாரம் மக்களுக்கு வழங்கிட கூடுதல் துணை மின் நிலையங்கள் அமைப்பது அவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்களை மாண்புமிகு

ந.மேட்டுப்பாளையம் 110/11 கி.வோ துணை மின் நிலையம்
ஈரோடு மாவட்டம். திட்ட மதிப்பீடு ரூ.10.61 கோடி

சங்கராபுரம் 230/110 கி.வோ துணை மின் நிலையம்
கள்ளக்குறிச்சி மாவட்டம். திட்ட மதிப்பீடு ரூ.177.93 கோடி

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு அமைத்து வருகிறது.

அந்த வகையில், ஈரோடு மாவட்டம் – நம்பியூர் வட்டம், ந.மேட்டுப்பாளையத்தில் ரூ.10 கோடியே 61 இலட்சத்து 18 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 110/11 கி.வோ. துணை மின் நிலையம்;

கள்ளக்குறிச்சி மாவட்டம் – சங்கராபுரத்தில் ரூ.177 கோடியே 93 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒரு 230/110 கி.வோ. துணை மின் நிலையம்;

கள்ளக்குறிச்சி மாவட்டம் – ஆசனூர் சிட்கோ மற்றும் வேலூர் மாவட்டம்– ஒடுகத்தூர் (தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையம்) ஆகிய இடங்களில் ரூ.31 கோடியே 61 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டிலான இரண்டு 110/33 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

சேலம் மாவட்டம் – மின்னாம்பள்ளி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – மூங்கில்பாடி மற்றும் ஈரோடு மாவட்டம் – கணபதிபாளையம் (புஞ்சை காளமங்கலம்) ஆகிய இடங்களில் ரூ.34 கோடியே 75 இலட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டிலான மூன்று 110/22 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – செங்கத்துறை மற்றும் மகாத்மா காந்தி சாலை ஆகிய இடங்களில் ரூ.27 கோடியே 7 இலட்சத்து 46 ஆயிரம் மதிப்பீட்டிலான இரண்டு 110/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – பூவாளூர், திருவள்ளூர் மாவட்டம் – திருநின்றவூர், கடலூர் மாவட்டம் – வளையமாதேவி (முகந்தரியாங்குப்பம் மற்றும் திருவாரூர் மாவட்டம் – கோவில்வெண்ணி ஆகிய இடங்களில் ரூ.12 கோடியே 94 இலட்சத்து ஒரு ஆயிரம் மதிப்பீட்டிலான நான்கு 110/33 கி.வோ. துணை மின் நிலையங்கள் (விகிதாசார அறிமுகம்);

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – கல்லக்குடியில் ரூ.2 கோடியே 19 இலட்சத்து 54 ஆயிரம் மதிப்பீட்டிலான ஒரு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் (விகிதாசார அறிமுகம்);

சென்னை மாவட்டம் – நேர்மை நகர், கோயம்புத்தூர் மாவட்டம் – கிட்டாம்பாளையத்தில் அண்ணா தொழிற் பூங்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் – திம்ஜேப்பள்ளி, நாகப்பட்டினம் மாவட்டம் – குத்தாலம் மற்றும் திட்டச்சேரி, தஞ்சாவூர் மாவட்டம் – திருவத்தேவன் மற்றும்

கள்ளப்பெரம்பூர், திருவண்ணாமலை மாவட்டம் – மேல்செங்கம், வெள்ளேரி, மேக்களூர் மற்றும் தச்சாம்பாடி ஆகிய இடங்களில் ரூ.55 கோடியே 99 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டிலான பதினொன்று 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

என மொத்தம் ரூ.353 கோடியே 11 இலட்சத்து 84 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 25 துணை மின் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

காற்றாலை மின்சாரத்தின் உற்பத்தி அளவை நெறிபடுத்தும் சோதனை ரீதியான திட்டம்

கடந்த ஆண்டு, 2019இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலண்டன் பயணத்தின் போது, அங்கு இயக்கத்திலுள்ள ஸ்மார்ட் கிரிட் (Smart Grid) தொழில்நுட்பத்தினை பார்வையிட்டார்கள். அதன் அடிப்படையில் தமிழ்நாட்டிலும் அத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கில், செயற்கை நுண்ணறிவு சார்ந்த புதிய தொழில்நுட்பத்தின் மூலமாக செயல்பட்டு, மின் கட்டமைப்பு அலகுகளுக்கு ஏற்ப, காற்றாலை மின்சாரத்தின் உற்பத்தி அளவை நெறிபடுத்தும், சோதனை ரீதியான திட்டத்தை (Artificial intelligence based Active grid Network Management system) இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில் செயல்படுத்துவதற்கான திட்ட ஒப்பந்த ஆணையை பெங்களுருவில் உள்ள Enzen Global Solutions Private Limited என்ற நிறுவனத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். இந்த புதிய தொழில்நுட்பமானது அதிக காற்றாலை மின் உற்பத்தியை மின் கட்டமைப்பில் ஒருங்கிணைப்பதோடு மின் கட்டமைப்பின் அலகு வேறுபாடுகளையும் நெறிபடுத்த உதவும். இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சார்பில் https://www.tnskill.tn.gov.in என்ற இணையதளம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேம்படுத்தப்பட்ட
இணையதளத்தை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ரூ.2 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட https://www.tnskill.tn.gov.in என்ற இணையதளத்தை துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மாநிலத்தின் திறன் பயிற்சிகளுக்கான ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுவதுடன் தொழில் நிறுவனங்கள், தொழில் நிறுவன கூட்டமைப்புகள், பயிற்சி நிறுவனங்கள், துறை திறன் குழுமங்கள், மதிப்பீடு செய்யும் நிறுவனங்கள் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் அமைப்புகள் ஆகிய திறன் தொடர்புடைய அனைவரையும் ஒருங்கிணைக்கிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்திடும் நோக்கில் தற்போது பயன்பாட்டில் உள்ள கழகத்தின் இணையதளம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பன்மொழி திறனாய்வு மற்றும் மின்–ஆளுமை தளமாக (Multilingual Integrated Skill Analytics and E-governance System) மேம்படுத்தப்பட்டுள்ளது.

அம்மேம்படுத்தப்பட்ட தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் https://www.tnskill.tn.gov.in இணையதளத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இதன்மூலம், பயனாளர்களின் பதிவுகள், பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் அங்கீகாரங்கள், மதிப்பீட்டு முகமைகளின் பதிவுகள், பயிற்சி தொடர்பான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகள், இணையவழி சான்றிதழ்கள், ஆதார் எண் இணையப்பெற்ற வருகை பதிவேடு பராமரித்தல், பயிற்சி பெற்றவர்களது பணி அமர்த்தல் கண்காணிப்பு, இணையவழி பணப்பயன் ஒப்பளிப்பு போன்ற பணிகளை இவ்விணையத்தின் வாயிலாக மேற்கொள்ள இயலும். அத்துடன், ஒருங்கிணைந்த ஒற்றைத் திறன் பதிவு தொகுதியை (Unified Single Skill Registry) உருவாக்கும் நோக்கில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கும் பிற துறைகளின் விவரங்களை உள்ளடக்கியதாக இவ்விணையதளம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை சார்பில் ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் சிறுமியர்களுக்கான அரசினர் கூர்நோக்கு இல்லக் கட்டடம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை சார்பில் சென்னை, கெல்லீஸில் உள்ள அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தங்கும் அறைகள், தொழிற்பயிற்சி கூடம், பணியாளர் அறை, சமையலறையுடன் கூடிய உணவருந்தும் கூடம் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள சிறுமியர்களுக்கான அரசினர் கூர்நோக்கு இல்லக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் சென்னை, கெல்லீஸில் இயங்கி வரும் அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் இளைஞர் நீதி குழும ஆணையின் பேரில் தங்க வைக்கப்படும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் சிறார்களுக்கு, தேவையான உணவு, உடை மற்றும் இதர அடிப்படை வசதிகள் வழங்கப்படுவதுடன், உளவியலாளர் மூலம் ஆற்றுப்படுத்துதல் போன்ற சேவைகளும் வழங்கப்படுகின்றது. மேலும், இச்சிறார்களுக்கு முறைசாரா கல்வி மற்றும் தொழிற்கல்வி சார்ந்த பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் 2017–2018ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது, சென்னை, கெல்லீஸில், சிறுமியருக்கான கூர்நோக்கு இல்லத்திற்கு தங்கும் அறைகள், சமையலறையுடன் கூடிய உணவருந்தும் கூடம், தொழிற்பயிற்சி கூடம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும் என்று தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

சமூகப் பாதுகாப்புத் துறை
சிறுமியர்களுக்கான அரசினர் கூர்நோக்கு இல்லம், சென்னை–10

அதன்படி, சென்னை, கெல்லீஸில் செயல்பட்டு வரும் அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருந்த பழைய கட்டடம் இடிக்கப்பட்டு, அவ்விடத்தில் சுமார் 1,554 சதுர மீட்டர் பரப்பளவில் 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறுமியர்களுக்கான அரசினர் கூர்நோக்கு இல்லக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த கூர்நோக்கு இல்லம், சிறுமிகளை வயது வாரியாக பிரித்து, சிறு அலகாக ஒவ்வொரு அறையிலும் 5 சிறுமிகள் வீதம் தங்க வைக்கும் வகையில் குளியலறை மற்றும் கழிவறை வசதிகளுடன் கூடிய 12 தங்கும் அறைகள், சமையல் அறையுடன் கூடிய உணவருந்தும் கூடம், தொழிற்பயிற்சி / பல்நோக்கு கூடம், பணியாளர் அறை, அலுவலக அறை, மருத்துவர் அறை, குடிநீர் சுத்திகரிப்பான் (RO Plant), கண்காணிப்பு கேமராக்கள் (CCTV), கழிவு நீர் சுத்திகரிக்கும் அமைப்பு உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

பணிநியமன ஆணை

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையில் 2019–2020ஆம் ஆண்டுக்கான 92 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதியின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

ஆமதாபாத்தில் உள்ள தமிழ் வழிக்கல்வி வழங்கும் பள்ளி தொடர்ந்து நடத்த அனைத்து செலவுகளையும் தமிழ்நாடு அரசு ஏற்க தயாராக உள்ளது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்,

மாண்புமிகு குஜராத் முதலமைச்சர் திரு. **விஜய் ருபானி** அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் – 24.09.2020



குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் உள்ள புலம் பெயர்ந்து சென்ற தொழிலாளிகளுக்கான தமிழ் வழிக்கல்வி வழங்கும் பள்ளியை திடீரென்று மூடியது என்னை மிகுந்த வேதனைக்கு ஆளாக்கியுள்ளது. குறைந்த மாணவர் வருகையை காரணம் காட்டி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ் வழிக்கல்வியில் படிக்கும் அந்த குழந்தைகள் கல்வியை தொடர்வதற்கு வேறு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

பெருமை வாய்ந்த வரலாறும் கலாச்சாரமும் கொண்ட மிகப்பழமை வாய்ந்த மொழி தமிழ். குஜராத்தின் மேம்பாட்டுக்காக தமிழர்கள் பங்களித்துள்ளனர், பங்களித்துக் கொண்டிருக்கிறார்கள். குஜராத்தில் சிறுபான்மை மொழியாக உள்ள தமிழ்மொழியின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டும்.

எனவே, இந்த விவகாரத்தில் நீங்கள் தலையிட்டு தமிழ் வழிக்கல்வி வழங்கும் பள்ளி தொடர்ந்து நடைபெற தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும். ஆமதாபாத்தில் உள்ள அந்த பள்ளி தொடர்ந்து நடைபெறுவதற்கான அனைத்து செலவையும் ஏற்க தமிழ்நாடு அரசு தயாராக உள்ளது.

அங்குள்ள தமிழ் மொழி சிறுபான்மையினரின் கல்வி பெறும் உரிமையை குஜராத் அரசு பாதுகாக்கும் என்று நம்புகிறேன். இதில் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு மக்கள் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு செயல்படுகிறது

"அறிவுக்கு வேலை கொடு பகுத்தறிவுக்கு வேலை கொடு
காலம் மாறுது கருத்தும் மாறுது நாமும் மாற வேண்டும்
நம்மால் நாடும் மாற வேண்டும்."

என்பதற்கேற்ப,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அம்மா அரசு பால் உற்பத்தியில் தமிழ்நாட்டில் சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக வாடிக்கையாளர்களின் சேவையில் ஆவின் நிறுவனம் தன்னை அர்பணித்துக் கொண்டுள்ளது. புதிய, தூய, தரமான மற்றும் பாதுகாப்பான பாலினை நியாயமான விலையில் மக்களுக்கு தொடர்ந்து வழங்குவதையே ஆவின் நிறுவனம் தன் அடிப்படையான குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.

செய்பவனுடைய தன்மையை ஆராய்ந்து ஏற்ற காலத்துடன் பொருந்துமாறு உணர்ந்து செய்விக்க வேண்டும் என்ற வள்ளுவனின் குறளுக்கேற்ப, மக்கள் நலம் கருதி, கால மாற்றத்திற்கு ஏற்ற வகையில் ஆவின் நிறுவனம் 07.07.2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு 5 வகையான பால் பொருட்கள் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டு மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்று விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தற்போது கொரோனா எனும் கொடிய வைரசின் பெருந்தொற்று தாக்கத்தில் உலகமே நிலை குலைந்து நிற்கும் வேளையில், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையில் நம் முன்னோர்கள் கடைபிடித்த இயற்கை வைத்திய முறைப்படியும் இஞ்சி, மஞ்சள், துளசி, சீரகம், பெருங்காயம், எலுமிச்சை, இந்துப்பு போன்ற மூலிகைப் பொருள்களை சேர்த்து மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த, தமிழக அரசின் யோகா மற்றும் இயற்கை மருத்துவத் துறையின் மருத்துவர்கள் பரிந்துரையின் அடிப்படையில் புதிய வகை மோரை அறிமுகப்படுத்தி நம்முடைய நலன் மட்டுமல்ல, நம் எதிர்கால சந்ததியினரின் நலனையும் பாதுகாப்பதில் அம்மாவின் அரசு முனைப்போடு செயல்பட்டு வருகின்றது.

"வளர்த்தவரே உன்னை மறந்துவிட்டாலும் அடுத்தவரிடத்தில் கொடுத்துவிட்டாலும், வளர்ந்த இடத்தை நீ மறக்காத செல்வம் வாய்மட்டும் இருந்தால் மொழி பேசும் தெய்வம்" எனும் பாடல் வரிகளுக்கேற்ப, விவசாயிகளின் ஜீவாதாரங்களில் ஒன்றாக விளங்கும், பசு நமக்களிக்கும் பாலினை ஏழை, எளிய, நடுத்தர மற்றும் அனைத்து மக்களும் **"இப்பதானே பாலை காய்ச்சி இரண்டு மணி நேரம் கூட ஆகல, அதுக்குள்ள திரிஞ்சு**

போயிடுச்சா” என கலங்காத வகையிலும், பணம் நஷ்டம் அடைவதை தவிர்க்கும் வகையிலும் 90 நாட்கள் வரை கெட்டுப் போகாமல் இருக்க அதிக வெப்பநிலையில் பதப்படுத்தப்பட்ட பால் (4.5% கொழுப்பு சத்து மற்றும் 8.5% புரத சத்தும் கொண்டது) குளிர் சாதனப் பெட்டியை தவிர்த்து, அறை வெப்ப நிலையில் இருக்கும் வகையில் சாதகமான பேக்குகளில் ஆவின் நிறுவனம் அறிமுகப்படுத்துவது **இதுவே முதல் முறையாகும்.**

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்

எதையும் எண்ணிப்பார்த்து தக்க இடமறிந்து ஒரு செயலைச் செய்தால் அதற்கு **அஞ்சாமை தவிர** வேறு துணை தேவையில்லை எனும், வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப ‘ஆவின் நிறுவனம் இதுவரை அதிகபட்சமாக 6% கொழுப்பு சத்து மற்றும் 9% இதரசத்தும் உள்ள பாலை மட்டும் விற்பனை செய்த நிலையில் 6.5% மற்றும் 9% புரதசத்து கொண்ட **“டீமேட்” என்ற புதிய வகைப்பாலை** வர்த்தகரீதியில் டீக்கடைகள், ஓட்டல்கள், சமையல் வல்லுநர்கள் பயன்பெறும் வகையில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டு விற்பனையாகி வருகிறது’.

நவீன காலத்தில் இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் விரும்பி சுவைத்து சாப்பிடும் வகையில் மாம்பழம் மற்றும் சாக்லெட் சுவை கூடிய லஸ்ஸியை விற்பனைக்கு வழங்கியுள்ளது ஆவின் நிறுவனம்.

எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்

கிடைப்பதற்கரிய காலம் கிடைக்கும் போது அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செயற்கறிய செயல்களை செய்ய வேண்டும்.

தமிழகத்தில் நாளொன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் 230 இலட்சம் லிட்டர் பாலில் ஆவின் நிறுவனம் 40 இலட்சம் லிட்டர் அதாவது 17 சதவீதம் மட்டுமே கொள்முதல் செய்து மீதமுள்ள 83 சதவீதம் பாலில் உள்ளூர் தேவைக்காக 17% போக 16% தனியார் பால் நிறுவனங்கள் மூலமாகவும் 50% அமைப்புசாரா விற்பனையாளர்கள் மூலமாகவும் கொள்முதல் செய்யப்படுகிறது.

தன்னையே தருவதில் வாழைக்கு ஈடு, சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு என்பதற்கேற்ப, கிராமப்புற பால் உற்பத்தியாளர் நலன் கருதி அரசு நிர்ணயித்த பால் கொள்முதல் விலைப்பட்டியல் அடிப்படையில் தரத்திற்கேற்ற விலையில் பால் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

கொரோனா தொற்று நோய் மற்றும் ஊரடங்கு காலத்தில் சில பால் நிறுவனங்கள் பால் கொள்முதலை குறைத்த நிலையிலும், மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல் மற்றும் மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல் படியும், தமிழகம் முழுவதும் கிராமப்புற பால் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில், ஆவின் நிறுவனம் தொடர்ந்து கொள்முதல் செய்து வருகின்றது.

தனியார் பால் நிறுவனங்கள், கொரோனா காலத்தில், பால் கொள்முதலை, குறைத்து கொண்ட போதும் பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி **ஆவின் நிறுவனம் இலாப நோக்கு இல்லாமல்,** அவர்களை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக இணைத்து தரமான பாலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.32 என்ற அடிப்படையில் கொள்முதல் செய்துவருகிறது. மேலும் 155 பால் கூட்டுறவு சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டும் 139 செயலிழந்த சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டும் தற்போது

9,266 பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதனால் முன்பு நாளொன்றுக்கு 29 இலட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் தற்போது

நாளொன்றுக்கு 40.28 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. அதே போல பால் விற்பனையும் கடந்த ஆண்டு நாளொன்றுக்கு 22.89 இலட்சம் லிட்டரிலிருந்து தற்போது 9.21 சதவீதம் உயர்ந்து நாளொன்றுக்கு 25 இலட்சம் லிட்டராக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

எத்தனையோ மேடு பள்ளம் வழியிலே உன்னை
இடற வைத்து தள்ளப்பார்க்கும் குழியிலே,
அத்தனையும் தாண்டி காலை முன்வையடா
நீ அஞ்சாமல் கடமையிலே கண் வையடா

என்பதற்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசில் ஆவின் நிறுவனத்தின் தொடர்முயற்சியால் 495 விற்பனை முகவர்களை நியமித்து '**சோமாட்டோ**', '**ஸ்விகி**' மற்றும் '**டன்சோ**' நிறுவனங்கள் மூலம் வீடுகளுக்கே சென்று பால் பொருட்களை விற்பனை மேற்கொள்ளுதல் மூலம் கொரோனா காலத்திற்கு முன்னர் மாதம் ஒன்றுக்கு ரூ.34.78 கோடி என்ற மதிப்பு தற்போது ரூ. 41.15 கோடிக்கு உயர்ந்துள்ளது.

ஊரடங்கால் அனைத்து மாநில கூட்டுறவு நிறுவனங்களிலும் விற்பனை குறைந்த நேரத்தில் தமிழகத்தில் ஆவின் நிறுவனம் இந்த குறுகிய மூன்று மாத காலத்தில் என்றும் இல்லாத வகையில் விற்பனையில் சாதனை செய்ததை, மே மாதத்தில் நடைபெற்ற **மத்திய அரசின் பால்வளத்துறை காணொலிக் காட்சி கூட்டத்தில் ஆவின் நிறுவனத்தை பாராட்டியது குறிப்பிடத்தக்கது** பால் கொள்முதல் உயர்ந்ததால் விற்பனை போக மீதமுள்ள **உபரிப்பால்** பால்பவுடராகவும், வெண்ணையாகவும் உருமாற்றம் செய்யப்படுகிறது. தற்போது மாநில அளவில் மொத்தம் 8,400 மெ.டன் அளவு பால் பவுடர் இருப்பில் உள்ளது. இந்த பால் பவுடரை ஒரு வருடம் வரை இருப்பு வைத்துக் கொள்ள இயலும். சந்தையில் தேவை அதிகரிக்கும் போது இருப்பு வைத்துள்ள பால் பவுடரை விற்க இயலும் இதனால் **ஆவினில் நஷ்டம் ஏற்படுவது தவிர்க்கப்பட வாய்ப்புள்ளது.**

ஆவின் நிறுவனம் வாடிக்கையாளர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளதை உறுதிப்படுத்தும் வகையில், தரவு நுண்ணறிவு நிறுவனமான காந்தரின் உலக பேனல் பிரிவு (World panel division of data insights company Kantar) நடத்திய ஆய்வறிக்கையில் இந்திய அளவில் பலகோடி மக்கள் தேர்வு செய்யப்படும் நுகர்வோர் பொருட்கள் வரிசையில் **ஆவின் ஏழாவது இடத்தை** (TOP CHOSEN BRANDS) பிடித்துள்ளது. இது மட்டுமல்லாமல் இந்திய அளவில் உள்ள பால் உற்பத்தி நிறுவனங்களில் அமுல் நிறுவனத்திற்கு அடுத்தபடியாக **இரண்டாவது இடத்தைப்** பிடித்துள்ளது. இம்மாதிரியான ஆய்வறிக்கைகள் உறுதி செய்வதன் மூலம் நுகர்வோருக்கு மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்துவதாக உள்ளது.

ஆவினின் வரலாற்று சாதனையான பால்கொள்முதல் (சுமார் 40 இலட்சம்), பால் மற்றும் பால்பொருட்கள் விற்பனை இந்த கொரோனா காலகட்டத்திலும் சாதனையாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு நிருவாகம் எடுக்கும் சிறப்பான நடவடிக்கைகள், வணிகரீதியான செயல்பாடுகள் மூலம் ஆவின் நிறுவனம் இலாபநோக்குடன் வளர்ச்சிப்பாதைக்கு சென்று கொண்டிருக்கின்றது.

எனவே,

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு

தொழில் செய்பவனின் மனம் கோணாதிருக்கும் வரையில் உலகம் கெடாது. எனவே, அரசன் நாள்தோறும் அவனுடைய நிலைமையை ஆராய வேண்டும், என்பதற்கேற்ப விவசாயிகளின் தேவை அறிந்து அவர்களது வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்கிடும் வகையில் நல்ல திட்டங்களை செயல்படுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு மக்கள் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகிறது.

முனைவர் ***மா. வள்ளலார்***, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்.

அனைத்து மாவட்டங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியில் நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் வடகிழக்கு பருவமழை குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கண்காணிக்க வேண்டும்

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், தற்போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 12.10.2020 அன்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

வடகிழக்கு பருவமழை அக்டோபர் மூன்றாம் வாரத்தில் துவங்கும் என்று எதிர்பார்க்கும் நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் தலைமையில் தொடர்புடைய துறைகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 12.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

ஏற்கெனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தலைமை செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப., தலைமையில் 18.09.2020 அன்று வடகிழக்கு பருவமழை தொடர்பான ஆயத்த நிலை குறித்து சம்மந்தப்பட்ட துறைகளின் உயர் அலுவலர்களுடன் விரிவான ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு மாவட்டங்களில் ஆயத்த பணிகளை நேரடியாக ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது. மேலும், மேற்கொள்ளப்பட வேண்டிய

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன.

வடகிழக்கு பருவமழையினால் உடனடியாக பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய 4,133 பகுதிகள் கண்டறியப்பட்டு, பல்வேறு துறைகளை உள்ளடக்கிய மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 14,232 பெண்கள் உள்ளிட்ட 43,409 எண்ணிக்கையிலான முதல்நிலை மீட்பாளர்கள் (First Responders), தயார் நிலையில் உள்ளனர். கால்நடைகளை பாதுகாக்க 8,871 முதல் நிலை மீட்பாளர்களும், பேரிடர் அல்லாத காலங்களில் மரங்களை நடுவதற்கும், பேரிடர் காலங்களில் சாலைகளில் விழும் மரங்களை வெட்டி அகற்றுவதற்கும் 9,909 முதல் நிலை மீட்பாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையினரிடம் பயிற்சி பெற்ற 5,505 காவலர்கள் மற்றும் 691 ஊர்காவல் படையினர் அனைத்து மாவட்டங்களிலும் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் கீழ், 4,699 தீயணைப்பு வீரர்களும் 9,859 பாதுகாக்கும் தன்னார்வலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 3,094 கல்வி நிறுவனங்கள், 2,561 தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளது.

பேரிடர் பாதிப்புகளை தவிர்க்கவும், குறைக்கவும் நிரந்தர வெள்ள தடுப்பு பணிகளாக 6,016 தடுப்பணைகள் கட்டப்பட்டு 11,482 கசிவுநீர் குட்டைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 7,299 ஆழ்துளை மற்றும் திறந்த வெளி கிணறுகள் நீர் செறிவூட்டும் கிணறுகளாக மாற்றப்பட்டுள்ளன. 4,154 கிலோ மீட்டர் நீளம் ஆறுகள் மற்றும் பாசன கால்வாய்கள் தூர்வாரப்பட்டுள்ளன. மற்றும் 9,616 ஏரிகள் மற்றும் நீர்வரத்து கால்வாய்கள் தூர்வாரப்பட்டுள்ளன. 7,989 ஆக்கிரமிப்புகள் நீர் நிலைகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளன. 7.53 கோடி கன மீட்டர் வண்டல் மண் அகற்றப்பட்டு, 6,70,864 விவசாயிகள் இதனால் பயன்பெற்றனர். இதனால் 2.55 TMC கூடுதல் நீரினை சேமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 11,387 பாலங்கள் மற்றும் 1,09,808 சிறுபாலங்களில் உள்ள அடைப்புகள் நீக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் உள்ள தாழ்வான மற்றும் பாதிப்பு உள்ளாகும் இடங்களில் வசிக்கும் மக்களை பாதுகாக்கும் பொருட்டு 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் உள்ளன. மேலும், பள்ளிகள், கல்லூரிகள், திருமண மண்டபங்கள் மற்றும் சமுதாய கூடங்கள் தயார் நிலையில் உள்ளன.

மேலும், மாவட்டங்களில் 3,915 மரம் அறுக்கும் இயந்திரங்கள், 2,897 JCB இயந்திரங்கள், 2,115 ஜெனரேட்டர்கள் மற்றும் 483 அதிக திறன் கொண்ட பம்புகள், தேடல் மற்றும் மீட்பு உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளன. இயற்கை பேரிடர்களின் காரணமாக எழும் சிக்கல்களை தீர்க்கவும், குறிப்பாக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மாவட்ட நிருவாகத்துடன் ஒருங்கிணைந்து செயல்படவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், கூடுதல் மின் கம்பங்களை இருப்பு வைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநில அவசர கால கட்டுப்பாட்டு மையம் (1070) மற்றும் மாவட்ட அவசர கால கட்டுப்பாட்டு மையம் (1077), TNSMART செயலி மற்றும் சமூக வலைதளம், மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் பொதுமக்களுக்கு பேரிடர் குறித்த தகவல்கள் தெரிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பருவமழை காலத்தில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்:

- பேரிடர் காலங்களில் மீட்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகளில் ஈடுபடும் பல்வேறு துறை அலுவலர்களின் செயல் திறன்களை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- பேரிடர் காலங்களில் நடத்தப்படும் மாதிரி பயிற்சிகள் (Mock Drill), கொரோனா பரவலை தடுக்க சமூக இடைவெளியை பின்பற்றி, 50 பேருக்கு மிகாமல் பயிற்சி அளிக்க வேண்டும்.
- பேரிடர் காலங்களில் கொரோனா பரவலை தடுக்க, பொதுமக்கள் அனைவரும் வெளியில் செல்லும் போதும், பொது இடத்தில் தங்க வைக்கும் போதும், முகக்கவசம் கட்டாயமாக அணிந்து கொள்ள வேண்டும்.
- தனிமனித இடைவெளி கடைபிடிக்க வேண்டும். கூட்டம் கூடுதலை தவிர்க்க வேண்டும்.
- பொதுமக்களுக்கு பேரிடர் காலத்தில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு கையேடுகள், குறும்படங்கள் மற்றும் ஒலி, ஒளி பதிவுகள் மூலம் விழிப்புணர்வுகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ஏற்கெனவே, கண்டறியப்பட்டுள்ள நிவாரண முகாம்கள், சமூக இடைவெளியுடன் தங்க வைக்க போதுமானதாக உள்ளதா என ஆய்வு செய்து, தேவைப்படின் நிவாரண முகாம்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

- மழை காலங்களில் கீழே விழும் மரங்களை உடனே அகற்ற தேவையான ஆட்கள் மற்றும் மரம் அறுக்கும் இயந்திரங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.
- மழை நீர் தேங்கும் இடங்களில் நீரை வெளியேற்ற மின் மோட்டார்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.
- மீட்புக் குழுக்கள் குறுகிய கால அளவில் பாதிக்கப்பட்ட பகுதிகளை சென்றடைய ஏதுவாக தேவையான உபகரணங்களுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும்.
- வடகிழக்கு பருவ மழையின் காரணமாக வயிற்றுப் போக்கு மற்றும் தொற்று நோய் ஏதும் பரவாமல் இருக்க முன் எச்சரிக்கை நடவடிக்கையாக போதுமான அளவில் Bleaching powder, மருந்துகள் இருப்பில் வைக்க வேண்டும்.
- தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகள், போதுமான அளவு மருந்துகள் இருப்புடன், தயார் நிலையில் இருக்க வேண்டும். மேலும், மருத்துவமனையிலுள்ள தாழ்வான பகுதிகளில் உள்ள ஜெனரேட்டர்களை உயரமான இடத்தில் மாற்றி அமைக்க வேண்டும்.
- பேரிடர் காலங்களில் இரண்டு மாத காலத்திற்கு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்கள், நியாய விலைக்கடைகளில் போதுமான அளவில் இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- அனைத்து மாவட்டங்களிலும், பெருநகர சென்னை மாநகராட்சியிலும் நியமனம் செய்யப்பட்டுள்ள இந்திய ஆட்சிப் பணி நிலையிலான கண்காணிப்பு அலுவலர்கள் அந்தந்த மாவட்டங்களில் / பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.
- வடகிழக்கு பருவ மழைக் காலத்தில் உயிர் சேதம் மற்றும் பொருட் சேதம் ஏற்படாமல் இருக்க, அனைத்து துறையினைச் சார்ந்த செயலர்களும், துறைத் தலைவர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவ மழை தொடர்பாக எடுக்கப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆற்றிய உரை.

பருவ மழை காலங்களில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கு வருவாய்த் துறை, உள்ளாட்சித் துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை, காவல் துறை, மின்சாரத் துறை, சுகாதாரத் துறை போன்ற அத்தியாவசியத் துறைகளின் மூலமாக, வடகிழக்கு பருவமழை பெய்கின்ற காலங்களில், மக்கள் எவ்வித பாதிப்பிற்கும் உள்ளாகாமல் இருக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அரசு தயார் நிலையில் உள்ளது. பாதிக்கப்பட்டவர்களை தங்கவைப்பதற்கும், புயல் வீசுகின்றபொழுது சாலை ஓரங்களிலுள்ள மரங்கள் சாய்ந்தால் அதை உடனடியாக அப்புறப்படுத்துவதற்குத் தேவையான உபகரணங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. பருவமழையினால் ஏற்படுகின்ற பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்பதற்கு படகுகள், அதேபோல, தேசிய பேரிடர் மீட்புக்குழு, மாநிலப் பேரிடர் மீட்புக்குழு போன்றவை தயார் நிலையில் வைப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அதேபோல, அக்காலக்கட்டத்தில், அத்தியாவசியப் பொருட்களை இருப்பில் வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதேபோல, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிப்பதற்கு சுகாதாரத் துறை மூலமாக தேவையான மருந்துகள், மருத்துவ வசதிகள் போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, வடகிழக்குப் பருவமழையின்போது பெய்கின்ற மழைநீர் உபரியாக வெளியே செல்கின்ற கால்வாய்கள் சீர் செய்யப்பட்டிருக்கின்றன, வெள்ளத்தடுப்பு கால்வாய்கள் அமைக்கப்பட்டு சீர் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் பெய்கின்ற மழைநீர் தேங்காமல், மக்கள் பாதிப்புக்கு உள்ளாகாமல் மழைநீர் வெளியேறுகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல், மீனவர்கள் கடலுக்குள் செல்கின்றபொழுது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தகவல் தொலைதொடர்பு கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு புயல் காலங்களில் முன்னெச்சரிக்கையாக தகவல் கொடுக்கப்பட்டு, அவர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. வடகிழக்குப் பருவமழையின்போது புயல் வீசினாலும், கனமழை பெய்தாலும் அதிலிருந்து மக்களை மீட்பதற்கு அரசு அனைத்து வகைகளிலும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இங்கே கலந்து கொண்டுள்ள உயர் அதிகாரிகள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார்கள். அரசு அனைத்து கருத்துக்களையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு, வடகிழக்கு பருவமழையால் எவ்விதத்திலும் மக்கள் பாதிக்காத அளவிற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு ஸ்கோச் தங்க விருது மற்றும் தேசிய நீர் புதுமை விருது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களை 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் சந்தித்து, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு, Dial for Water 2.0 என்ற திட்டத்திற்காக வழங்கப்பட்ட ஸ்கோச் தங்க விருது மற்றும் கல்குவாரிகளை சேமிப்பு நீர்த்தேக்கங்களாக மாற்றிய திட்டத்திற்காக வழங்கப்பட்ட தேசிய நீர் புதுமை விருது (National Water Innovation Award 2020) ஆகிய விருதுகளை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

ஸ்கோச் நிறுவனத்தால் கடந்த 30.07.2020 அன்று அரசு மூலம் பொதுமக்களுக்கு சேவை வழங்கல் பிரிவின் கீழ் Dial for Water 2.0 என்ற திட்டத்திற்காக சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு ஸ்கோச் தங்க விருது வழங்கப்பட்டது.

Elets Technomedia Pvt. Ltd., என்ற நிறுவனம் இந்திய அரசின் நீர்வள அமைச்சகத்துடன் இணைந்து 28.08.2020 அன்று நடத்திய தேசிய நீர் புதுமை உச்சி மாநாடு 2020இல் (Elets National Water Innovation Summit 2020) மழைநீர் சேகரிப்பில் புதுமை என்ற பிரிவின் கீழ் கல்குவாரிகளை சேமிப்பு நீர்த்தேக்கங்களாக மாற்றிய திட்டத்திற்காக சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு தேசிய நீர் புதுமை விருது வழங்கப்பட்டது.

பள்ளிக் கல்வித் துறை சார்பில் ரூ.39.90 கோடி மதிப்பீட்டில் “புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கட்டடம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னை, நுங்கம்பாக்கம், பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில் ரூ.39 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புரட்சித் தலைவர்

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாக் கட்டடம்

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில், 9 கோடியே 70 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.06.2017 அன்று சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ், வெளியிட்ட அறிவிப்பில், பள்ளிக் கல்வி இயக்ககம் 100 ஆண்டுகளுக்கும் மேலாக டி.பி.ஐ. வளாகத்தில் செயல்பட்டு வருகின்றது. இக்கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாகும். அரசால்

செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பாக பல்வேறு மாவட்டங்களிலிருந்து அலுவலர்களும், பணியாளர்களும் அதிக அளவு இங்கு வந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும், இந்த இயக்ககத்தில் இயங்கும் பல்வேறு பிரிவுகளுக்காக கூடுதல் இடவசதி தேவைப்படுகிறது. இதற்காக, ஒரு இலட்சம் சதுர அடியில் பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும். இந்த கட்டடம் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் **“புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கட்டடம்”** என்ற பெயரில் அழைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னை, நுங்கம்பாக்கம், பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில், சுமார் 1,22,767 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் 39 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இப்புதிய கட்டடத்தின் தரைதளத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம், முதல் தளத்தில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்கக அலுவலகம், இணை இயக்குநர் அறைகள், பொது கூட்டரங்கு, இரண்டாம் தளத்தில் பள்ளிக் கல்வி ஆணையர் அலுவலகம், இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்கள் அறைகள், மூன்றாம் தளத்தில் ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அறைகள், நான்காம் தளத்தில் ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலகம், இணை உறுப்பினர் அறைகள், துணை இயக்குநர் அறை, உறுப்பினர்கள் அறைகள், ஐந்தாம் தளத்தில் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன அலுவலகங்கள், கூட்டரங்கு, ஆறாம் தளத்தில் கல்வி தொலைக்காட்சி அலுவலகம், SIEMAT கூட்டரங்கு மற்றும் அலுவலக அறைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. மேலும், வரவேற்பு அறை, மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பிடம், மின் தூக்கிகள், கழிப்பறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், நபார்டு கடனுதவி திட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் மாவட்டம் – கோமங்கலம்புதூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் – பெரியசெவலை, தேனி மாவட்டம் – பெரியகுளம், திருவண்ணாமலை மாவட்டம் – இரும்பேடு மற்றும் விழுப்புரம் மாவட்டம் – பனமலைப்பேட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ள 5 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9 கோடியே 70 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிவறைகள் மற்றும் சுற்றுச்சுவர்;

என மொத்தம் 49 கோடியே 60 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பணி நியமன ஆணை

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக பள்ளிக் கல்வி இயக்ககத்தின் அமைச்சுப் பணிக்கு 635 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

அறிவியல் ஆய்வுக் கூடம்,
இரும்பேடு, திருவண்ணாமலை மாவட்டம்

இந்தியக் கலாச்சாரம் பற்றிய ஆய்வுக் குழுவில் தமிழக அறிஞர்களையும் சேர்க்க வேண்டும்

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களுக்கு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் – 23.09.2020.

மத்திய கலாச்சார அமைச்சகம் தற்போதிலிருந்து 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரை உள்ள இந்தியக் கலாச்சாரத்தின் தோற்றம் மற்றும் அதன் பரிணாம வளர்ச்சி குறித்தும், உலகின் பிற நாட்டின் கலாச்சாரங்களோடு இடைமுகமாக இணைந்திருக்கிறதா ? என்பது பற்றியும் முழுமையாக ஆய்வு செய்வதற்காக நிபுணர் குழுவை அமைத்துள்ளது.

இது நம்முடைய நாட்டின் வளமான மற்றும் மாறுபட்ட கலாச்சாரங்களின் வேர்களை பற்றிய நமது புரிதலை ஆழமாக்குவதும், வரவேற்கத்தக்க நடவடிக்கையாக இருந்தாலும், அந்த குழுவின் அமைப்பு கவலை அளிக்கும் விதமாக இருக்கிறது.

அந்தக் குழுவில் தமிழ்நாடு உள்பட தென்மாநிலங்களை சேர்ந்த பிரதிநிதிகள் யாரும் இடம் பெறவில்லை. தமிழ்நாடு புகழ்பெற்ற கடந்த காலத்தை கொண்டுள்ளது. மேலும், அது திராவிட நாகரிகம் உள்பட பழமையான நாகரிகங்களை இருப்பிடமாக கொண்டிருக்கிறது. தென்னிந்தியாவில் வாழும் வளரும் கலாச்சாரமாக உள்ளது.

கீழடி மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளில் சமீபத்தில் நடந்த தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள், உலக புகழ் பெற்ற சங்ககாலம் 6ஆம் நூற்றாண்டில் இருந்தே இருந்திருப்பதை காணலாம். இது தமிழ் கலாச்சாரத்தையும், மொழியையும் உலகின் மிகவும் பழமையான பாரம்பரியங்களில் ஒன்றாக கொண்டுள்ளது.

கடந்த ஆண்டு தாங்கள் மகாபலிபுரத்தைப் பார்வையிட்டீர்கள். அங்கு பிரமிக்க வைக்கும் நினைவுச் சின்னங்கள், தமிழ் பாரம்பரியத்தின் புகழ் பெற்ற மரபு ஆகியவற்றை நீங்கள் முழுமையாகக் கவனித்தீர்கள் ஆகையால், இந்திய வரலாறு மற்றும் கலாச்சாரத்தின் தொகுப்பு, தமிழ் கலாச்சாரம் மற்றும் மொழிக்கு சரியான இடத்தை வழங்காமல் முழுமையடையாது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தப் பின்னணியை கருத்தில் கொண்டு இதனடிப்படையில், கலாச்சாரத்துறை அமைச்சகம், அந்த குழுவை அமைக்கும்போது, தமிழ்நாட்டை சேர்ந்த நிபுணர்களை தேர்ந்தெடுக்க தவறியது ஆச்சரியமாக இருக்கிறது.

எனவே, நீங்கள் தனிப்பட்ட முறையில் நேரடியாக தலையிட்டு தமிழகத்திலிருந்து புகழ்பெற்ற அறிஞர்களை சேர்ப்பதன் மூலம் நிபுணர் குழுவை மறுசீரமைக்க, கலாச்சார அமைச்சகத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று தங்களை தமிழக மக்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டச் செய்திகள்

மதுரை

மதுரை மாவட்டம், உலக தமிழ் சங்க வளாகத்தில் மாற்றுத்திறனாளி நலத்துறையின் சார்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட வாகனங்களை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

கடலூர்

கடலூர் மாவட்ட கூட்டுறவுத் துறையின் சார்பில் களையூர்– இரண்டாயிர விளாகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க வளாகத்தில் நடைபெற்ற விழாவில், அம்மா நகரும் நியாயவிலைக் கடைகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம். சி. சம்பத் அவர்களும் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பனங்குடியில் கூட்டுறவுத்துறையின் சார்பில் அம்மா நகரும் நியாயவிலைக் கடையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, நகர கூட்டுறவு வங்கியில் அம்மா நகரும் நியாயவிலைக் கடையை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள் மற்றும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ். வளர்மதி அவர்களும் தொடங்கி வைத்தார்கள்.

திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம், பூனிமாங்காடு ஊராட்சி, கோதண்டராமபுரம் காலனியில் கூட்டுறவுத்துறை சார்பாக, அம்மா நகரும் நியாய விலைக் கடையினை மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, கலை பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பென்ஜமின் அவர்களும் துவக்கி வைத்தார்கள்.

கரூர்

கரூர் மாவட்டம், பஞ்சமாதேவி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்கள், குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்கள் வசிக்கும் இருப்பிடத்திலேயே பொருட்கள் வழங்குவதற்கான அம்மா நகரும் நியாயவிலைக் கடையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

சிவகங்கை

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை நகர், நியாய விலைக்கடையில், கூட்டுறவுத் துறையின் மூலம் அம்மா நகரும் நியாய விலைக்கடை வாகனத்தை மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் திரு.ஜி. பாஸ்கரன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி எம்.ஜி.ஆர். சிலை அருகில் கூட்டுறவு துறை சார்பாக வாகனங்கள் மூலம் நேரடியாக அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யும் அம்மா நகரும் நியாய விலைக் கடையினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

டுகோபார்ஸ் - அகிம்சையின் அதிசயம்

யார் அந்த டுகோபார்ஸ் ? 17ஆவது நூற்றாண்டில் இரஷ்யாவின் தெற்குப் பகுதிகளில் வாழ்ந்து வந்த இடையர்களும், விவசாயிகளும் உருவாக்கிய ஒரு மதப்பிரிவே, டுகோபார்ஸ். மனிதனின் மனதே ஆலயம். மனதை தூய்மையாகவும், ஆத்மாவை பலமாகவும், எளிமையாகவும் வைத்திருக்க வேண்டும். பரஸ்பர அன்பும் கருணையும் நிரம்பியதாகவும் கொண்டிருக்க வேண்டும். ஆத்ம போராளிகள் என்று அழைத்து கொண்ட இவர்கள் சிறு, சிறு கிராமங்களாக வாழ்ந்தனர். தங்களது சுயதேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் முக்கிய கோட்பாடு. இவர்கள் கடுமையான உழைப்பாளிகள் விவசாயத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள், தாங்கள் அணியும் உடைகளை தாங்களே நெய்து கொள்வது, உபகரணங்கள், மரச்சாமான்கள், மண்ணால் வீடு கட்டுதல், பொது சமுதாயக்கூடம் அமைப்பது என்று அவர்களின் உலகம் சுய தேவைகளுக்காக எவரிடமும் கையேந்தி நிற்காதது.

தங்களை யாராவது தாக்க வந்தால் திருப்பி அடிப்பதற்குப் பதிலாக அந்த அடியை ஏற்றுக்கொள்ள வேண்டும். எவ்வளவு வன்முறை பிரயோகப்படுத்தப்பட்டாலும், டுகோபார்ஸ் திருப்பி அடிக்கமாட்டார்கள்.

புகையிலை, மதுப்பழக்கம் கிடையாது,

உணவு உறைவிடம் தருவதற்கு ஒருபோதும் பணம் வாங்குவது இல்லை,

ரொட்டியை விற்பது கொடியப் பாவம்,

ஜாம் செய்வதிலும், தானியங்கள் பாதுகாப்பிலும் தனித்தன்மை கொண்டவர்கள்,

கிராம வீதிகள் பெரியதாக இருக்க வேண்டும்,

எங்கு சென்றாலும் நடந்து செல்வதையே வழக்கமாக கொள்வது,

மண்ணில் தான் வீடு கட்ட வேண்டும்,

இயந்திரங்களை பயன்படுத்தாமல் கையால் வேலை செய்வது,

அடிப்படை வசதிகளுக்கு மேலே உடையோ, உடைமைகளோ வைத்துக் கொள்ளக் கூடாது,

பணத்தை ஒருபோதும் பெரிதாக நினைக்கக் கூடாது,



விலங்குகள், விவசாய உடைமைகள் பொதுவாக கருதப்பட்டன.

வயதானவர்களை ஊரே பராமரிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் உதவிகள் இல்லாமல் அடிப்படை வசதிகளை அமைத்துக் கொண்டார்கள்.

திருமணம் கடவுளின் விருப்பம். அதை அரசாங்கத்தில் பதிவு செய்வதை இவர்கள் ஏற்கவில்லை.

தொலைபேசி அறிமுகமானவுடன், தங்கள் கிராமங்களுக்கு தொலைபேசி வசதியை தாங்களே உருவாக்கிக் கொண்டார்கள்.

மனிதனை கொள்ளும் இராணுவ பணியை அறவே வெறுத்து ஒதுக்குவது.

மறுபக்கம் அரசு தங்களை கண்டுகொள்ளவே இல்லை என்பதால் அரசிற்கு செலுத்த வேண்டிய வரி மற்றும் நில அளவை, மக்கள் தொகை கணக்கெடுப்பு எதையும் அவர்கள் செயல்படுத்த அனுமதிக்கவில்லை. தங்களை ஒரு தனி இராஜ்ஜியம் போலவே பாவித்து அமைதியாக வாழ்ந்தார்கள். இதனால் அரசு கசாக்கியப்படையை அனுப்பி அவர்களை இராணுவத்தில் சேர்க்க கட்டாயப்படுத்தினார்கள். மறுத்தவர்களைக் கைது செய்து சைபீரிய சிறைகளுக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனாலும் அவர்களின் ஆத்ம பலம் குறையவில்லை.



ஒரு நாள் முழுவதும் 300 கசை அடி வாங்கிய ஒரு மனிதன் மறுநாள் தன்னை அடிக்கின்ற கசாக்கிய வீரனிடம், “உனக்கு சரியான ஓய்வு இல்லை. தேவையான உணவும், பழங்களும் என் சேமிப்பில் இருக்கின்றன. அதை சாப்பிட்டு வந்து என்னை அடிக்கலாமே” என்று சொல்லி இருக்கிறான். அது தான் டுகோபார்ஸின் இயல்பு.

அப்போது தான் உலகப் புகழ்பெற்ற நாவல் ஆசிரியர் டால்ஸ்டாய் டுகோபார்ஸ் பிரிவினரைப் பற்றி கேள்விப்படத் துவங்கினார். அவர்களுக்காக அரசிடம் டால்ஸ்டாய் முறையிட்டார், அரசாங்கத்தின் கண்களில் இருந்து தப்பியோடி வரும் டுகோபார்ஸ் இயக்கத்தவர்களுக்கு தனது வீட்டைப் புகலிடமாக்கினார். அவர்களது நியாயத்திற்காக வாதாடினார். இரஷ்ய அரசாங்கம் 40 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட டுகோபார்ஸ் பிரிவினர் மொத்தமாக நாட்டை விட்டு வெளியேறிப் போவது என்றால் ஒத்துக்கொள்வதாகச் சொன்னது. இனி ஒருபோதும் இரஷ்யாவிற்கு திரும்பி வரகூடாது என்று நிபந்தனை விதித்தது. முதல் கட்டமாக கனடா அரசு 7,500 பேர்களை ஏற்று கொள்வதாக அறிவித்தது. அவர்களின் பயணத்துக்கான பணத்தேவையை பூர்த்தி செய்யவே “புத்துயிர்ப்பு” நாவலை எழுதினார் டால்ஸ்டாய். அப்போது அவருக்கு வயது 78. ஒரு நாளைக்கு 10 மணி நேரம் எழுதினார். பாதி உறக்கத்தில் எழுந்து மெழுகுவர்த்தி உதவியால் எழுதியதும், உறக்கத்தில் நாவலை பற்றியே புலம்பியும், ஒரு வேளை இந்த நாவலை முடிக்காமல் இறந்து போய்விடுவோமோ என்ற பயமும் உருவானது. இந்த நாவலை வெளியிட்டவர்கள், வெயிட உதவியவர்கள் அனைவரும் நாடுகடத்தப்பட்டனர். தனது புத்தக விற்பனை, இராயல்டி, சொந்த வருமானம் என தான் திரட்டிய 17 ஆயிரம் ரூபிள்களை கொண்டு, இடம் பெயர்ந்து போகின்ற டுகோபார்ஸ்களுக்கு உதவி செய்து கொண்டே இருந்தார். “தான் நேசித்த மக்களை காப்பாற்ற வேண்டி ஒரு எழுத்தாளன் எழுதிய ஒரே நாவல் இதுவே”.

இன்றும் அகிம்சை, சமாதானம், சைவ உணவு பழக்கம், சுய பூர்த்தி, எளிமை, நல்ல செயல் சிந்தனை என்று டுகோபார்ஸ் வம்சாவழிகள் வாழ்கிறார்கள். அதுதான் அவர்கள் காட்டும் அமைதி வழி.

– “எனதருமை டால்ஸ்டாய்” எனும் நூலிலிருந்து...

மீன்வளத் துறை சார்பில் ரூ.97.42 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்கு தளம் மற்றும் கட்டடங்கள்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் ரூ.5.21 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மீன்வளத்துறையின் சார்பில் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், குந்துகால் கிராமத்தில் ரூ.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்கு தளத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், மீன்வளத் துறை சார்பில் ரூ.27.42 கோடி மதிப்பீட்டிலான கட்டடங்களையும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் ரூ.5.21 கோடி மதிப்பீட்டிலான கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் மீனவர்கள் பயனுறும் வகையில், பாக் நீரிணை பகுதியில் மீன்பிடி படகுகளின் நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், கடல் மீனவர்கள் தங்களது மீன்பிடி கலன்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், படகு அணையும் தளம், T–ஜெட்டிகள் மற்றும் கடற்கரைச் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய மீன் இறங்குதளம் இராமநாதபுரம் மாவட்டம், குந்துகால் மீனவ கிராமத்தில் அமைக்கப்படும் என்று 2017–2018ஆம் ஆண்டு மீன்வளத் துறை மானியக் கோரிக்கையில் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் வட்டம், குந்துகால் கிராமத்தில் ரூ.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்கு தளத்தை காணொலிக்காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த மீன்பிடி இறங்கு தளத்தில் 528 மீட்டர் நீளத்திற்கு படகு

அணையும் தளங்கள், கடலின் மைய பகுதியில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கட்டடம் கட்டப்பட்டு, 400 ஆழ்கடல் சூரைமீன் படகுகள், 100 கண்ணாடி நாரிழை படகுகள் பாதுகாப்பாக நிறுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 6,050 மீனவர்கள் பயன்பெறுவார்கள்.

சென்னை மாவட்டம், காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிறிய மீன்பிடி படகு அணையும் தளம் மற்றும் மீன்விற்பனை கூடம்; திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், அண்ணாமலைச்சேரி கிராமத்தில் ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்கு தளம்; ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகரில் ரூ.3.07 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தப்பட்ட தேசிய மீன் பண்ணை மற்றும் பவானிசாகரில் உள்ள புங்கார்மீன் பண்ணையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தூய மரபின சினை மீன்கள் உற்பத்தி மற்றும் பராமரிப்பு மையம்; சேலம் மாவட்டம், மேட்டூரில் உள்ள மீன் பண்ணையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தூய மரபின சினை மீன்கள் உற்பத்தி மற்றும் பராமரிப்பு மையம்; கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம் – லால்பேட்டை மற்றும் குறிஞ்சிப்பாடி வட்டம் – அகரம் கிராமத்தில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்ட அரசு மீன் பண்ணை; நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சுவர்;

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இனவழிக் கால்நடை மூலிகை பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் மற்றும் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பெரிய பிராணிகளுக்கான உள்ளிருப்புப் பிரிவுக் கட்டடம் மற்றும் கால்நடைப் பராமரிப்பாளர் அறை; திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பெரிய பிராணிகளுக்கான உள்ளிருப்புப் பிரிவுக் கட்டடம் மற்றும் கால்நடைப் பராமரிப்பாளர் அறை; கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி வளாகத்தில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியருக்கான கூடுதல் விடுதிக் கட்டடம்;

என மொத்தம் ரூ.102.63 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்வளத் துறை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கான கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மகாத்மாவுக்கு தமிழ் கற்க ஆசை

சென்னையில் நடந்த பாரதீய சாகித்திய சம்மேளனத்துக்குக் காந்திஜி தலைமை வகித்தார். மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் தாம் வரவேற்புக் குழுத் தலைவர், ஐயரவர்கள், தமிழில் எழுதிய வரவேற்புரையை இந்தியில் மொழிபெயர்த்துக் காந்திஜியிடம் அளித்ததுடன் மகாநாட்டிலும் விநியோகித்தார்கள். மகாநாடு துவங்குவதற்கு முன்பு உ.வே.சா அவர்கள் காந்திஜியைச் சந்திக்கச் சென்றார். இராஜாஜி, அவர்களைப் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தார். காந்திஜி புன்சிரிப்புடன், ‘உட்காருங்கள் ஐயா’ என்று அழுத்திக் கூறி வரவேற்றார். உ.வே.சா அவர்களின் அடக்கமும் பேச்சும் காந்திஜியைப் பெரிதும் வசீகரித்து விட்டன.

வரவேற்புரையில் உ.வே.சா அவர்கள், “காந்திஜியின் சமகாலத்தவர்களாக வாழ்வது பாக்கியம் என்று கருதுகிறேன். அவருக்கு அடுத்தபடியாக இருந்து ஒரு விழாவை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்வது மிகவும் பெரிய பாக்கியம் என்று மகிழ்ச்சியுறுகிறேன்” என்று குறிப்பிட்டார்கள்.

காந்திஜியோ, “அர்த்த புஷ்டியும் இலக்கியச் சுவையும் நிரம்பிய உ.வே.சா அவர்களின் வரவேற்புரை என்னைப் பெரிதும் வயப்படுத்திவிட்டது. தமிழர்களுடன் பல வருடகாலம் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். இப்போது உ.வே.சா அவர்களின் அறிமுகம் ஏற்பட்ட பிறகு, அவருடைய அருகில் அமர்ந்து, அவரிடமே தமிழ்ப்பாடம் கற்கவேண்டும் என்ற ஆசை தோன்றுகிறது. இந்த ஆசைக்கு இடையூறாக வயதும், வேலையும் இல்லை; ஆனால் எங்கள் இருவருக்குமே போதுமான அவகாசம் இல்லையே என்றுதான் வருந்துகிறேன்” என்று தம்முடைய தலைமை உரையில் குறிப்பிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் ரூ.28.90 கோடி மதிப்பீட்டிலான கட்டடங்களை திறந்து வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 05.10.2020 அன்று தலைமைச் செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் சென்னை மாவட்டம், கீழ்ப்பாக்கம், லுத்ரல் கார்டனில் ரூ.13 கோடியே 51 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 100 காவலர் குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 15 கோடியே 39 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 43 காவலர் குடியிருப்புகள், 4 காவல் நிலையங்கள், 2 காவல்துறை கட்டடங்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினருக்கான 1 குடியிருப்பு, 2 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள், காவல்துறை தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாநில செயல்பாட்டு மையம் மற்றும் மேம்படுத்தப்பட்ட சமூக ஊடக மையம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

சேலம் மாவட்டம் – வாழப்பாடி

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஜீயபுரம்

அந்த வகையில், சென்னை மாவட்டம், கீழ்ப்பாக்கம், லுத்ரல் கார்டனில் ரூ.13 கோடியே 51 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 100 காவலர் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இக்குடியிருப்பானது தரை மற்றும் 13 தளங்களுடன், மின்தூக்கிகள், தீயணைப்பு உபகரணங்கள், ஆழ்துளை கிணறு, குடிநீர் வசதி, மழைநீர் சேகரிப்பு வசதி, இடிதாங்கி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், திருவள்ளூர் மாவட்டம் – பெரும்பாக்கம், சேலம் மாவட்டம் – மகுடஞ்சாவடி மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் – பாச்சல் ஆகிய இடங்களில் 7 கோடியே 10 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 43 காவலர் குடியிருப்புகள்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் – வாலிநோக்கம் ஆகிய இடங்களில் காவல் நிலையங்கள், சேலம் மாவட்டம் – வாழப்பாடி அனைத்து மகளிர் காவல் நிலையம், தென்காசி மாவட்டம் – தென்காசி போக்குவரத்து காவல் நிலையம், என 3 கோடியே 12 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 காவல் நிலையக் கட்டடங்கள்;

சேலம் மாவட்டம் – ஆத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஜீயபுரம் ஆகிய இடங்களில் காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, என 1 கோடியே 22 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 காவல்துறை கட்டடங்கள்;

நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினத்தில் ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினருக்கான 1 குடியிருப்பு;

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – உப்பிலியாபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் ரூ.2 கோடியே 7 இலட்சத்து 56 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள்;

சென்னை மாவட்டம், மயிலாப்பூர், காவல்துறை தலைமை அலுவலகத்தில், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 1 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாநில செயல்பாட்டு மையம் (State Operations Centre) மற்றும் மேம்படுத்தப்பட்ட சமூக ஊடக மையம் (Social Media Centre);

என மொத்தம், 28 கோடியே 90 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாநில செயல்பாட்டு மையம் மற்றும் சமூக ஊடக மையம் நிறுவுதல்

புதியதாக உருவாக்கப்பட்ட திருப்பத்தூர் மாவட்டத்திற்கு ரூ.109.71 கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 30.09.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் ரூ.109.71 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திற்கு காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 15.08.2019 அன்று சுதந்திர தினவிழா உரையில், பெரிய மாவட்டமாக உள்ள வேலூர் மாவட்டத்தை பிரிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து வந்த கோரிக்கைகளை பரிசீலித்து, நிருவாக வசதிக்காக, வேலூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டமும், திருப்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டமும், இராணிப்பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டமும் தோற்றுவிக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மாநிலத்தின் 36ஆவது மாவட்டமாக திருப்பத்தூர் மாவட்டம் உருவாக்கப்பட்டது. புதியதாக உருவாக்கப்பட்ட திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் 27,376 சதுர மீட்டர் பரப்பளவில், ரூ.109.71 கோடி மதிப்பீட்டில், தரை மற்றும் 7 தளங்களுடன் கட்டப்படவுள்ள திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இப்புதிய வளாகத்தில், வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, கருவூலம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை போன்ற துறைகளின் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.

மாதிரி வடிவமைப்பு

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கோவிட் சிகிச்சை குறித்த நிலையான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 29.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக ஆய்வினை தொடங்கி வைத்து ஆற்றிய உரை.

கோவிட் வைரஸ் நோய்த் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகின்றது. அதனால் தான், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ்நாட்டை பார்த்து பிற மாநிலங்கள் செயல்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். இந்த பாராட்டினை தமிழ்நாட்டிற்கு பெற்றுத் தர அயராது களப்பணியாற்றும் அனைத்து மாண்புமிகு அமைச்சர்

பெருமக்களுக்கும், அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நற்பெயரை தக்க வைத்துக் கொள்ளவும், தமிழ்நாட்டில் இருந்து கொரோனாவை முழுமையாக தடுக்கவும், நாம் அனைவரும் தொடர்ந்து பாடுபட வேண்டும். அதற்கென நமது நடவடிக்கைகளை மேலும் முனைப்புடன் செயல்படுத்த வேண்டும்.

- எனது தலைமையில் 14 முறை மாநில பேரிடர் மேலாண்மை குழுக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதுவரை, எனது தலைமையில் 10 அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டங்கள் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றுள்ளன.
- தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில், 12 முறை காணொலிக் காட்சி மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் அவர் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியுள்ளார்.
- தமிழ்நாட்டில் நோய்த் தொற்றின் நிலைமையை தொடர்ந்து கண்காணித்து, தேவையான தளர்வுகளுடன் தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி பொது முடக்கத்தை மிகவும் கவனமாகவும், பாதுகாப்பாகவும் அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.
- இதுவரை தமிழ்நாடு, கோவிட் நோய்த் தொற்று கட்டுப்பாடு, சிகிச்சை மற்றும் நிவாரணப் பணிகளுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு சுமார் ரூ.7,323 கோடிக்கு செலவினங்கள் மேற்கொண்டுள்ளது. இதில் மருத்துவம் சார்ந்த செலவினம் ரூ.1,983 கோடி, நிவாரணம் சார்ந்த செலவினம் ரூ.5,340 கோடி.
- அனைத்து மாவட்டங்களிலும் காய்ச்சல் முகாம்கள் நடத்தியும், வீடு வீடாகச் சென்று காய்ச்சல் மற்றும் வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் உள்ளவர்களை கண்டறிந்தும், RT-PCR சோதனை, தனிமைப்படுத்துதல், சிகிச்சை அளித்தல் போன்றவற்றை சிறப்பாக மேற்கொண்டும் வருகிறோம்.
- தற்போது மாநில அளவில் கோவிட் மருத்துவமனைகளிலும், கோவிட் சிறப்பு மையங்களிலும் 1,40,091 படுக்கைகளும், இதில் ஆக்சிஜன் வசதிகளுடன் கூடிய 27,057 படுக்கைகளும் ICU வசதி கொண்ட 6,106 படுக்கைகளும், 6,492 வென்டிலேட்டர்களும் தயார் நிலையில் உள்ளன.
- நமது மாநிலத்தில் தான் மிக அதிகமாக 184 ஆய்வகங்கள், அதாவது அரசின் சார்பாக 66 ஆய்வகங்களும், தனியார் சார்பாக 118 ஆய்வகங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் இதுவரை 71,81,125 நபர்களுக்கு RT-PCR பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே கோவிட்–19 ஆய்வக பரிசோதனை செய்வதில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது. தற்போது நாளொன்றுக்கு சுமார் 85,000 RT-PCR மாதிரிகள் பரிசோதிக்கப்படுகின்றன.
- கோவிட் நோய்க்கான சிறப்பு சிகிச்சை அளிக்க, கூடுதலாக 15,000 மருத்துவ பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சுமார் 2,751 மருத்துவர்கள், 6,893 செவிலியர்கள் மற்றும் இதர மருத்துவ பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- மிகவும் இன்றியமையாத மற்றும் உயிர்காக்கும் மருந்துகளான டொஸிலிசுமாப் (Tocilizumab) 400 எம்ஜி, ரெம்டெஸ்விர் (Remdesvir) 100 எம்ஜி, இனாக்சபெரின் (Enoxaparin) 40 எம்ஜி போன்றவை கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. மருந்துகள், பரிசோதனை கருவிகள், N95 முகக்கவசங்கள், பாதுகாப்பு உடைகள் (PPE Kits), மும்முடி முகக்கவசங்கள், CT ஸ்கேன், X-ray இயந்திரங்கள் ஆகியவற்றை தேவையான அளவில் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து கொள்முதல் செய்து வருகின்றது.
- களப்பணியில் உள்ள அனைத்து பணியாளர்களுக்கும், கட்டுப்பாட்டு பகுதியில் வாழும் மக்களுக்கும், ஜிங்க் (zinc) மற்றும் வைட்டமின் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.
- தமிழ்நாட்டில் இந்திய முறை மருத்துவ சிகிச்சையும் நோயாளிகளுக்கு சிறப்பாக அளிக்கப்படுகின்றது. நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிப்பதற்காக சித்த மருந்தான கபசுர குடிநீர் பெரும்பான்மையான மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.
- இந்நடவடிக்கைகளின் காரணமாக, நாட்டிலேயே சிகிச்சை முடிந்து குணமானவர்கள் 90.50% மேல் உள்ள மாநிலமாகவும், மிக குறைவான, அதாவது 1.60% இறப்பு உள்ள மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது என்பதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.
- முதலமைச்சர் காப்பீட்டு திட்ட பயனாளிகள் மற்றும் அரசு காப்பீட்டு திட்ட பணியாளர்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசு, தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, பொது இடங்களில் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி மற்றும் கைகளை முறையாக கழுவுதல் ஆகியவற்றை உறுதிபடுத்தியுள்ளது.

- பொதுமக்களிடம் காய்ச்சல், சளி, வறட்டு இருமல், மூச்சுத் திணறல், உடல் சோர்வு, தலைவலி, நாக்கில் சுவை இழப்பு, மூக்கில் நுகர்வுத் தன்மை இழப்பு போன்ற அறிகுறிகள் தென்பட்டவுடன் 24 மணி நேரத்திற்குள் மருத்துவமனை செல்ல வேண்டும் என்ற விழிப்புணர்வை மாவட்ட ஆட்சியர்கள் ஏற்படுத்த வேண்டும். கோவிட் RT-PCR பரிசோதனையின் போது மூத்த குடிமக்கள் மற்றும் இணை நோய் உள்ளோரின் மாதிரிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பரிசோதனைக்கு எடுத்துக் கொண்டு, விரைந்து முடிவுகளை அறிவிக்க வேண்டும்.

- அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கோவிட் நோய் சிகிச்சை குறித்த நிலையான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

- கோவிட் சிறப்பு மையங்கள் சிறப்பாக செயல்படுகின்றன. அம்மையங்கள் பொதுமக்களுக்கு மேலும் சிறப்பான சேவைகளை வழங்க உணவு, குடிநீர், கழிப்பிட வசதிகளை அவ்வப்போது மாவட்ட ஆட்சியர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

- தமிழ்நாடு குறைவான இறப்பு விகிதத்தை கொண்டு இருந்த போதிலும், இறப்பு விகிதத்தை மேலும் குறைக்கும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சுகாதாரத் துறை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும்.

- மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் வாழும் அடித்தட்டு மக்களுக்கு இலவசமாக மறுமுறை உபயோகிக்க தக்க முகக் கவசங்கள் ஆகஸ்ட் 5ஆம் தேதி முதல் நியாய விலைக்கடைகள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதுவரை, 46 இலட்சம் மறுமுறை உபயோகிக்கத்தக்க முகக்கவசங்களை சென்னையில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. பிற மாவட்டங்களில், இதுவரை 2.51 கோடி முகக்கவசங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

- வேளாண் தொழிலுக்கு மட்டும் விலக்களித்து, முதலில் அமல்படுத்தப்பட்ட ஊரடங்கினால், ஏழைகள், சிறு தொழில் செய்வோர், சிறு வணிகம் செய்வோர் போன்றோரின் பொருளாதார நிலை பாதிக்கப்படும் என்பதை அறிந்து, அவர்களை பாதுகாக்க தமிழ்நாட்டில், உணவுப் பொருட்களை விலையின்றி வழங்குதல், ரொக்க நிவாரணம் வழங்குதல் போன்ற பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை தமிழ்நாடு முழுவதும் மாண்புமிகு அம்மாவின் அரசு, மிகுந்த அக்கறையுடன் செயல்படுத்தியது. பின்னர், படிப்படியாக தளர்வுகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

- அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேலும் மேம்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. கொரோனா காலத்தில் கூட, இதுவரை 42 புதிய தொழில் திட்டங்கள் தமிழ்நாட்டில் துவங்குவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இதன் மூலம், சுமார் ரூ.31,464 கோடி முதலீடும், சுமார் 69,712 புதிய வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட உள்ளன.

- இந்நடவடிக்கைகளால், ஏப்ரல் முதல் ஜூன் 2020 காலங்களில் அதிக புதிய முதலீடுகளை ஈர்த்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கியதில், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது என்பதை ஒரு தனியார் நிறுவன ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கீழ், ஊரகத் தொழில்களை மேம்படுத்தவும், வருமானத்தைப் பெருக்கவும், ரூ.300 கோடி மதிப்பீட்டில் கொரோனா சிறப்பு நிதி உதவி தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை சுமார் 1,63,000 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

- இக்கொரோனா காலகட்டத்தில் ஏப்ரல் முதல் இதுவரை, 2,37,090 சுய உதவிக் குழுக்களுக்கு, ரூ.8,557 கோடி வங்கி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் தனியே கொரோனா நோய்த் தொற்று காலத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 87,327 சுய உதவிக் குழுக்களுக்கு சுமார் ரூ.954.80 கோடி அளவிலான பொருளாதாரத்தை மேம்படுத்தவும், வருமானத்தை பெருக்கவும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஊரடங்கால் ஏற்பட்ட பாதிப்புகளை களைய ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கோவிட் நிவாரணம் மற்றும் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- எனது தலைமையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் கூட்டங்கள் நடத்தி, உடனுக்கு உடன் தொழில் நிறுவனங்களுக்கு

கடன்களை வழங்க அறிவுறுத்தியதினால், மத்திய அரசின் கடன் திட்டத்தில் மிக அதிக அளவில், அதாவது சுமார் ரூ.8,585 கோடிக்கான ஒப்புதலினை பெற்று இந்தியாவில், தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

- மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த சிறப்பான நடவடிக்கைகளால், அரசின் நலத்திட்டங்கள் மக்களை பெருமளவில் சென்று சேர்ந்து, மக்களை பொருளாதார பாதிப்பில் இருந்து பாதுகாத்தன எனவும், வேலைவாய்ப்பின்மை இரண்டே மாதங்களில், ஆறில் ஒரு பங்காக சரிந்துள்ளது எனவும், தனி நபர் வருவாய் படிப்படியாய் உயர்ந்து கொரோனா சூழலால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பிலிருந்து தமிழ்நாடு விரைந்து மீண்டு வருகிறது எனவும் ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

- தற்போது, பருவமழை காலம் தொடங்க உள்ளது. பருவ காலம் ஆரம்பிக்கும் முன்னதாகவே நகர்ப்புர/ஊரக பகுதிகளில் குடிநீர், சாலை வசதி, திடக்கழிவு மேலாண்மை போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்தி, பருவ கால சவால்களை திறம்பட கையாள மாவட்ட நிருவாகம் தயார் நிலையில் இருக்க வேண்டும். நாம் முன்னரே திட்டமிட்டு நீர்நிலைகளை தூர் வாரியது, ஆழப்படுத்தியது, வாய்க்கால்களை சீரமைத்தது போன்ற பணிகளினால், முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்தாண்டு 4 இலட்சத்து 12 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவை வேளாண் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- கடந்த நான்கு ஆண்டுகளில் குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக ரூ.1,433 கோடி மதிப்பீட்டில் 6,278 நீர்நிலைகள் புனரமைக்க எடுத்துக் கொள்ளப்பட்டு, பெரும்பான்மை பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. போதிய அளவில் வேளாண் இடுபொருட்கள் இருப்பில் உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கூறியுள்ளார்கள். எனவே, வேளாண் மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து, வரலாறு காணாத அளவிற்கு இந்த ஆண்டு வேளாண் உற்பத்தியை பெருக்க வேண்டும் என உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

- ஆகஸ்ட் மாத ஆய்வுக் கூட்டத்தில் நான் கூறியதுபோல பருவ மழைக்கு முன்னதாகவே நீர்நிலை உட்கட்டமைப்புகளான கால்வாய்கள், அணைக்கட்டுகளின் கதவுகள் மற்றும் கரைகளை கண்காணித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

- வரலாற்று சாதனையாக மாண்புமிகு அம்மாவின் அரசு 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு மத்திய அரசின் ஒப்புதலை பெற்று மிகக் குறுகிய காலத்திலேயே அவற்றிற்கான கட்டுமானப் பணிகளை துவக்கி உள்ளது. நான் ஏற்கெனவே கடந்த கூட்டத்தில் அறிவுறுத்தியது போல அப்பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் கள ஆய்வு செய்து, பணியினை மேலும் துரிதப்படுத்த வேண்டும்.

- அதேபோல, தமிழகத்தில் 6 புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு, இப்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அதோடு, மக்களுடைய கோரிக்கையை ஏற்று பொதுப் போக்குவரத்தையும் அனுமதிக்கப்பட்டு மக்கள் தமிழ்நாடு முழுவதும் பொதுப் போக்குவரத்தின் மூலமாக பயணம் செய்வதற்கும் தளர்வுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இதனால், பொதுமக்கள் தமிழகத்தில் எல்லா பகுதிகளுக்கும் சென்று வருவதற்கும் மாண்புமிகு அம்மாவின் அரசால் தளர்வுகள் அளிக்கப்பட்டன. அதனால், வேலைக்கு செல்பவர்களுக்கும், மருத்துவமனைகளுக்கு செல்பவர்களுக்கும் எளிதாக்கப்பட்டு இருக்கிறது என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். அதோடு, பல்வேறு இரயில்கள் இயக்குவதற்கும் தளர்வுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. விமானப் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஏற்கெனவே இருந்த தடைகளெல்லாம் படிப்படியாக குறைக்கப்பட்டு, தளர்வுகள் அளிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் படிப்படியாக இயல்புநிலை வருவதற்கு அரசால் முழுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

- அரசின் கோவிட் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து முழு ஒத்துழைப்பு வழங்கி வரும் பொதுமக்களுக்கும், செம்மையான முறையில் பணியாற்றி வருகின்ற அனைத்து அரசு அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

- பொதுமக்களின் நலன் கருதி, உங்கள் அரசு எடுத்து வரும் கோவிட் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்திற்கும் பொதுமக்கள் தொடர்ந்து முழு ஒத்துழைப்பினை நல்குமாறு அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அறிவார்ந்த முயற்சிக்கு வெற்றி நிச்சயம்

முன்னொரு காலத்தில் ரோமாபுரி என்னும் நாட்டில் ஒரு பெரிய வியாபாரி இருந்தார். அவருக்கு மூன்று மகன்கள் இருந்தனர். தனக்குப் பின் வியாபாரத்தை தன் மூன்று மகன்களில் யாரிடம் ஒப்படைப்பது என தீர்மானிக்க வியாபாரி, போட்டி ஒன்று தன் மகன்களுக்கு வைத்தார். "யார் அதிக அளவு சீப்புகளை புத்த மடாலயத்தில் விற்கிறார்களோ அவர்கள் தான் வியாபாரத்தை நிர்வகிக்கத் தகுதியானவன்" என்று மகன்களிடம் கூறினார். அவர்களுக்கு தங்கள் திறமையை வெளிப்படுத்த சில நாட்கள் அவகாசம் கொடுத்தார். ஆனால், மொட்டை அடித்துள்ள புத்த பிக்குகளிடம் சீப்பு வியாபாரமா ? என்று மூன்று மகன்களும் ஆரம்பத்தில் திகைத்தனர்.

ஆனால், மூவரும் முயற்சி எடுப்பது என்று முடிவு செய்தனர். அவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த சில நாட்கள் அவகாசம் கொடுத்த அந்த வியாபாரி, அவகாசம் முடிந்தவுடன் மகன்களை அழைத்து அவர்கள் எந்த அளவு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று கேட்டார். அதில், முதல் மகன் "இரண்டு சீப்புகள் புத்த மடாலயத்திற்குள் விற்றேன்" என்றான். எப்படி விற்றாய் ? என்று அவனது தந்தை கேட்டார். "சீடர்களிடம், இந்த சீப்பை முதுகு சொறிய உபயோகிக்கலாம் என்று கூறினேன். இரண்டு புத்த சீடர்களுக்கு அது சரியென தோன்றி இருவரும் இரண்டு சீப்புகள் வாங்கினார்கள்" என்றான்.

இரண்டாவது மகன், பத்து சீப்புகள் விற்பனை செய்ததாக கூறினான். ஆச்சரியத்துடன் எப்படி ? என அவனது தந்தை கேட்டார். "வழியெல்லாம் காற்று அதிகமாக உள்ளதால் மலை மேல் உள்ள புத்த மடாலயத்திற்கு செல்பவர்கள் தலைமுடி கலைந்து விடுகிறது. அப்படி கலைந்த தலைமுடியுடன் புத்தரை தரிசிக்க பக்தர்கள் செல்வது, புத்தருக்குச் செய்யும் அவமரியாதையாகத் தோன்றுகிறது என்றும், ஒரு பெரிய கண்ணாடியும் சில சீப்புகளும் வைத்தால் அவர்கள் தங்கள் தலைமுடியைச் சரி செய்து கொண்டு புத்தரை தரிசிக்க செல்வது நன்றாக இருக்கும் என்றும், ஆலோசனை கூறியதால் அச்சீடர்கள் ஒத்துக்கொண்டு பத்து சீப்புகள் வாங்கினார்கள்" என்றான். இதைக்கேட்ட வியாபாரி அவனைப் பாராட்டினார்.

பின், மூன்றாவது மகன், ஆயிரம் சீப்புகள் விற்பனை செய்ததாக கூறினான். எப்படி ? என ஆச்சரியத்துடன் கேட்டார். "புத்த மடாலயத்திற்கு ஏராளமானோர் பொருளுதவி செய்கிறார்கள். அவர்கள் உதவியை பாராட்டி புத்தரின் ஆசிகள் அவர்களை வழி நடத்தும் வண்ணம் அவர்களுக்கு ஏதாவது ஒரு நினைவுப்பரிசு வழங்கினால், மேலும் பலரும் புத்த மடாலயத்திற்கு உதவி செய்யத் தூண்டுவதற்கு உதவும் என்றேன்.

பின் நான் புத்தரின் வாசகங்களைப் பதித்து வைத்திருந்த சில சீப்புகளை நீட்டினேன். அந்த சீப்புகளை தினமும் உபயோகிக்கும் பக்தர்களுக்கு அந்த வாசகத்தை தினமும் காணும் வாய்ப்பும் கிடைக்கும், அந்த உபதேசங்கள் அவர்களைத் தினமும் வழி நடத்துபவையாகவும் இருக்கும் என்று தெரிவித்தேன்" அது நல்ல யோசனை என்று நினைத்து மடாலயத் தலைவர் ஆயிரம் சீப்புகளை வாங்க ஒப்புக்கொண்டார் என்றான்.

இப்போது அந்த வியாபாரி எந்த மகனிடம் தன் வியாபாரத்தை ஒப்படைத்தார் என்று தெரிகிறதா ?

மொட்டை அடித்துள்ள புத்த பிக்குகளிடம் சீப்பு விற்கப்போவது கண்டிப்பாக ஆகாத வேலை என்று நினைப்பது தான் பொதுவாக நாம் காணக்கூடிய மனோபாவம். விதி சில சமயங்களில் நம்மைக் கொண்டு சேர்க்கும் சூழ்நிலையும் கிட்டத்தட்ட இதே போலத் தான் இருக்கும். அதிலிருந்து மீள்வதற்கு வழியே இல்லை என்று முதலில் தோன்றும். ஆனால், நாம் இருக்கும் அந்த மோசமான சூழ்நிலைக்குத் தீர்வே இல்லை என்று ஆரம்பத்தில் தோன்றினாலும் ஏதாவது செய்து நல்ல தீர்வைக் காண வேண்டும் என்று தீர்மானிப்பதே அறிவு.

முயற்சிகளிலும் பல வகை உண்டு என்பதற்கு வியாபாரியின் மூன்று மகன்களின் முயற்சிகளே உதாரணம்.

நீதி : எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும் மனம் துவண்டுவிடாமல், முடியாது என்று தோன்றும் எண்ணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து பல்வேறு கோணங்களில் சிந்தியுங்கள். பொறுமையுடனும், நம்பிக்கையுடனும், துடிப்புடனும் செயல்பட்டால் அந்தக் கடினமான சூழ்நிலையே நீங்கள் அடையப் போகும் வெற்றிகளுக்கு ஊன்றுகோலாய் அமையும்.

ஈரோடு மாவட்டம்

மலைக் கிராமங்களில் உள்ள முதியோர்கள், அவர்கள் வசிக்கும் பகுதியிலேயே உள்ள நியாயவிலைக் கடைகள் மூலம் முதியோர் உதவித்தொகை வழங்கும் திட்டம்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஆதரவற்ற, உணவுக்கு வழியின்றி தவித்த முதியோர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு உதவிடும் வகையில் வழங்கப்பட்டு வந்த முதியோர் உதவித்தொகையினை ரூ.500/–இல் இருந்து ரூ.1,000/–ஆக உயர்த்தி வழங்க ஆணையிட்டார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் 2011 முதல் நாளது வரை 60 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற முதியோருக்கான சமூகப் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 8 சட்டமன்ற தொகுதிகளிலும் 51,394 பயனாளிகளுக்கு தலா ரூ.1,000/– வீதம் ரூ.5,13,94,000/– மாதாந்திர உதவித்தொகை வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

அதனைத் தொடர்ந்து, கூட்டுறவு வங்கிகளை மேம்படுத்தும் வகையில், முதியோர்களுக்கு சிறப்பான சேவையை அளிக்கும் விதமாக, முதியோர் உதவித்தொகையானது கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படுகிறது. இந்த சேவையினை ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் வழங்கும் சேவை 07.09.2020 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

முதியோர் ஒய்வூதியத் தொகையானது தமிழ்நாடு அரசிடமிருந்து மாவட்ட நிருவாகம் மூலம் பெறப்பட்டு, மத்திய கூட்டுறவு வங்கிக்கு வழங்கப்படுகிறது. மத்திய கூட்டுறவு வங்கியில் பெறப்பட்ட தொகை இணைப்பு சங்கங்களின் பொது விநியோக திட்ட விற்பனையாளர்கள் மூலமாக அப்பகுதி பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும், மத்திய கூட்டுறவு வங்கி – இணைப்பு சங்கம் பொது விநியோக அங்காடிகள் மூலம் ஓய்வூதிய தொகை வழங்கும் நடைமுறை ஈரோடு மாவட்டத்தில் துவக்கி வைக்கபட்டதைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த வயதினர்களுக்கும் அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று ஒய்வூதிய தொகை உடனுக்குடன் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவு வங்கிகளின் சார்பில் நியாயவிலைக் கடைகள் மூலம் முதியோர் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

நியாயவிலைக் கடைகள் மூலம் முதியோர் உதவித்தொகை பெறும் மலைக்கிராமத்தைச் சேர்ந்த பயனாளிகள் புகழாரம்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, அந்தியூர் கிளையில் முதியோர் உதவித்தொகை பெறும், ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், பர்கூர் மலைப்பகுதியைச் சேர்ந்த திருமதி பொம்மி, (வயது 70) என்பவர் தெரிவித்ததாவது,

பொம்மி

“நான் சிறுவயது முதலே மலை கிராமத்தில் தான் வசித்து வருகிறேன். என் கணவர் இறந்து 10 வருஷம் ஆகுது. நான் 10 வருஷமாக முதியோர் உதவித்தொகை வாங்குகிறேன். எனக்கு 2 மகள்கள்தான். இருவருக்குமே கல்யாணம் ஆகிவிட்டது. நான் மாதாந்திர உதவித்தொகையை வாங்குவதற்கு மலையிலிருந்து கீழே வரவேண்டி இருந்தது. மேலும் வங்கிகளில் கூட்டம் இருப்பதால் வெகுநேரம் காத்திருந்து, அன்றைக்கு முழுவதும் பேங்குலேயே நேரம் செலவாகிடும். வயது ஆகிடுச்சி அதனால் பேங்குக்கு வருவதற்கு வேறு ஒருவர் துணை தேவைப்படுது.

இப்பொழுது எங்களை போல மலைக்கிராமத்தில் வசிக்கும் ஆதரவற்ற முதியோர் கிராமப்புற கூட்டுறவு வங்கியின் சார்பில் நியாய விலைக் கடைகளில் முதியோர் உதவித்தொகை பெறும் வகையில் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. எனக்கு கூட்டுறவு வங்கி மூலம், உதவித்தொகை வாங்குவதற்கு ஏற்றார் போல, முதலில் வங்கியில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது இந்த மாதம் எங்கள் பகுதியில் உள்ள நியாய விலைக்கடையில் ரூ.1,000/– முதியோர் உதவித்தொகை தந்தார்கள்.

மலைப்பகுதியில் வசிக்கும் என்னை போன்ற முதியோர்களுக்கு நாங்கள் இருக்கும் பகுதிக்கு அருகிலேயே நியாயவிலைக் கடைகளில் முதியோர் உதவித்தொகை பெறும் விதமாக, வழிவகை செய்து கொடுத்துள்ள முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்” என தெரிவித்தார்.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, அந்தியூர் கிளையில் முதியோர் உதவித்தொகை பெறும், ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், தாமரைக்கரை மலைப்பகுதியைச் சேர்ந்த திரு.கு. மாதையன், (வயது 67) என்பவர் தெரிவித்ததாவது,

“நான் தாமரைக்கரை மலைப்பகுதியில் விவசாய கூலி வேலை செய்து வரேன். எனக்கு வயசானதால் விவசாய நிலங்களில் உழைக்க முடியவில்லை. எனக்கு ஒரே மகள் தான், அவருக்கும் கல்யாணம் ஆகிவிட்டது. வயதான காலத்தில் யாரோட உதவியை நாடாமல் சுயமாக வாழ முதலமைச்சர் அவர்கள் தர உதவித்தொகை ரூ.1,000/– பெற்று வரேன்.

நான் 5 வருடங்களாக தேசிய வங்கி மூலமாக உதவித்தொகை பெற்று வருகிறேன். மாதந்தோறும் உதவித்தொகை கிடைத்தாலும், வங்கி மலைக்கு கீழே உள்ளதால் அதனை வாங்குவது மிகவும் சிரமமாக இருந்தது. தற்பொழுது கொரோனா நோய்த் தொற்று காலமாக இருப்பதாலும், வயதாகிவிட்டதாலும் வெளியிடங்களுக்கு செல்வது அச்சமாக இருக்கிறது.

இச்சூழ்நிலையில், மலைக் கிராமத்தில் முதியோர் உதவித்தொகை பெறுபவர்கள், இனி வரும் காலங்களில் கூட்டுறவு வங்கிகள் மூலமாக பெற்றுக்கொள்ளலாம் என அதிகாரிகள் தெரிவித்தார்கள். நானும் கடிதம் வழங்கி, கூட்டுறவு வங்கியில் கணக்கு துவங்கினேன். இந்த மாதம் அமைச்சர் அவர்களால் அந்தியூர் கிளை கூட்டுறவு வங்கியின் மூலம் முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டது.

மாதையன்

மேலும், இனிவரும் காலங்களில் எங்களது கிராமத்திற்கு அருகில் உள்ள நியாயவிலைக் கடையிலேயே முதியோர் உதவித்தொகையினை பெற்றுக் கொள்ளலாம் என கூறினார்கள். இது எனக்கு மிகுந்த சந்தோஷமாக இருந்தது. எங்களை போன்ற வயதானவர்கள் எங்கும் அலையாமல், எங்கள் பகுதியில் உள்ள நியாயவிலைக் கடையிலேயே முதியோர் உதவித்தொகை பெற்றுக் கொள்ளும் வகையில் இச்சிறப்பான திட்டத்தினை வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் மலைப்பகுதி மக்களின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.”

– செ.கு.சதீஸ்குமார்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு மாவட்டம்.

தமிழ்நாட்டை, புதிய கண்டுபிடிப்புகளுக்கான மையம் மற்றும் அறிவுக்கான தலைநகரமாக உருவாக்குவோம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பால் காணொலிக் காட்சி வாயிலாக நடத்தப்பட்ட "CONNECT 2020" மாநாட்டில் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

அரசுக்கு கொள்கைகளை வகுத்தளிப்பதிலும், பல்வேறு சிறந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தமிழகத்தில் உருவாக்குவதிலும் 'சி.ஐ.ஐ. கனெக்ட்' தளமாக பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

கொரோனா பரவல் காரணமாக உலகம் முழுவதிலும் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. கொரோனாவை எதிர்த்து தமிழ்நாடு அரசு கடுமையாக போராடுகிறது என்பதற்கு, கொரோனா தொற்று மற்றும் அதனால் ஏற்படும் இறப்பு எண்ணிக்கை குறைவதுமே சாட்சியாக உள்ளன.

பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள், பரிசோதனைகளை கூட்டியது போன்றவற்றால் இது சாத்தியமாகியுள்ளது. இதுவரை 25 மாவட்டங்களுக்கு பயணித்து அங்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்துள்ளேன்.

தமிழகத்தில் பொருளாதார நடவடிக்கைகளை படிப்படியாக அனுமதித்து வருகிறோம். விரைவில் தமிழகம் இயல்பு நிலைக்கு திரும்பும் என்பது உறுதி.

கடந்த 2019ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், ஒப்பந்தம் செய்த 81 திட்டங்கள், வணிகரீதியாக உற்பத்தியை தொடங்கிவிட்டன. இதர 191 நிறுவனங்களின் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. இதுதவிர, எனது அமெரிக்க, ஐக்கிய அரபு அமீரக பயணங்களின்போது ரூ.19,000 கோடி மதிப்பிலான 63 திட்டங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன்மூலம் புதிதாக 83,300 வேலைவாய்ப்புகள் உருவாகும். கொரோனா ஊரடங்கு காலத்திலும் ரூ.31,464 கோடி மதிப்பிலான 42 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அதன்மூலம் 69,712 வேலைவாய்ப்புகள் உருவாகும்.

தமிழ்நாட்டில் எளிதாக தொழில் தொடங்கும் வகையில், ஆன்லைன் ஒற்றை சாளர அனுமதி முறை உள்ளிட்ட வசதிகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. இதனால், சிறந்த நிருவாகம், ஏற்றுமதி மற்றும் முதலீட்டுக்கான ஆற்றல் குறியீடுகளில் தமிழ்நாடு முதல் நிலையில் உள்ளது. தகவல் தொழில்நுட்பம், அது சார்ந்த சேவைகள் பிரிவில் தமிழ்நாடு முன்னணி மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. தகவல் தொழில்நுட்ப பிரிவில் முதலீட்டுக்கான தேர்வு செய்யும் இடமாக தமிழகம் உள்ளது. இதுதவிர, தமிழகத்தில் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பை தொடர்ந்து மேம்படுத்தி, பல்வேறு சேவைகள் மக்களுக்கு கிடைக்க அரசு வழிவகை செய்து வருகிறது.

பல்வேறு துறைகளில் உலகத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களை நிறுவுதல், மாநிலத்தில் உள்ள திறமை வாய்ந்த மனிதவளத்தின் மூலம் 'புதுமை கண்டுபிடிப்புக்கான

மையம் மற்றும் அறிவுக்கான தலைநகரமாக' தமிழ்நாட்டை உருவாக்குவதே அரசின் இலக்காகும். இந்த நிலையை அடைய, திறன்வாய்ந்த பணியாளர்கள் தேவையை பூர்த்தி செய்ய தகவல்தொழில்நுட்ப திறன் கொண்ட மனித வளத்தை உருவாக்குவோம்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவைகள் பிரிவில் அதிக அளவில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், 8 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் சென்னையிலும், இரண்டாம் நிலை நகரங்களிலும் எல்காட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையில் பின்டெக் சிறப்பு மையம், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் பிரிவில் சிறப்பு மையம் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன.

அரசு சேவைகளில் புரட்சி ஏற்படுத்தும் விதமாக, மக்களைத் தேடி அரசு சேவைகள் செல்லும் வகையில், மாநில குடும்ப தரவு தொகுப்பு மற்றும் நம்பிக்கை இணைய கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, அறிவு ஆதார அடையாள அடிப்படையிலான சேவை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஐ.நா. சபையின் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடையும் வகையில், பாரத்நெட் மற்றும் தமிழ்நெட் திட்டங்கள் மூலம் 12,524 கிராம பஞ்சாயத்துகளையும் குறைந்தபட்சம் ஒரு ஜி.பி.பி.எஸ் அதிவேக இணைய இணைப்பு மூலம் இணைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்ற நடவடிக்கைகளால் சர்வதேச அளவில் தகவல் தொழில்நுட்ப கேந்திரமாக தமிழ்நாடு வலிமையான நிலையை எட்டும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த பயணத்தில் சி.ஐ.ஐ.யின் பங்களிப்பை எதிர்பார்க்கிறேன். பொருளாதாரம் மற்றும் தொழில் முன்னேற்றத்தில் தாக்கம் ஏற்படுத்திய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தொழில் அமைப்புகளுடன் இணைந்திருப்போம்.



உத்தமர் காந்தி

– நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்

உள்ளம் உருகுது கள்ளம் கருகுது
உத்தமன் காந்தியை நினைத்து விட்டால்
வெள்ளம் பெருகிடக் கண்ணீர் வருகுது
வேர்க்குது இன்பம் தேக்குதடா

சித்தம் குளிர்ந்துள பித்தம் தெளிந்திடும்
சீரியன் காந்தியின் பேர் சொன்னால்
புத்தம் புதியன முற்றும் இனியன
பொங்கிடும் உணர்ச்சிகள் எங்கிருந்தோ!

கிளர்ச்சிகொண் டான்மா பளிச்சென மின்னுது
கிழவன் காந்தியின் பழமை சொன்னால்
தளர்ச்சிகள் நீங்கிய வளர்ச்சியில் ஓங்கிய
தாட்டிகம் உடலில் கூட்டுதடா

சோற்றையும் வெறுக்குது காற்றையும் மறக்குது
சுத்தனக் காந்தியின் சக்தி சொன்னால்
கூற்றையும் வெருட்டிடும் ஆற்றலைத் திரட்டிடக்
கூடுதடா மனம் தேடுதடா

தூக்கமும் கலைந்தது ஏக்கமும் குலைந்தது
துன்பக் கனவுகள் தொலைந்ததடா
வாழ்க்கையும் திருந்திட நோக்கமும் விரிந்தது
வள்ளலக் காந்தியின் நினைப்பாலே

வஞ்சனை நடுங்கிடும் வெஞ்சினம் அடங்கிடும்
வாய்மையன் காந்தியின் தூய்மை சொன்னால்
அஞ்சின மனிதரும் கெஞ்சுதல் இனியில்லை
ஆண்மையும் அன்பும் அருளுமடா

ஜீவர்கள் உலகுள யாவரும் சமமென
செய்கையில் காட்டிய காந்தியடா
பாவமும் பழிகளும் தீவினை வழிகளும்
பதுங்குமடா கண்டு ஒதுங்குமடா

எழுபதும் ஐந்தும் குழகுழ வயசினில்
என்னே! காந்தியின் இளமையடா!
முழுவதும் அதிசயப் பழுதறு வாழ்க்கையின்
முத்தனடா பெரும் சித்தனடா

காந்தியின் தவக்கனல் சூழ்ந்தது உலகினைக்
காம தகனமென எரிக்குது பார்
தீய்ந்தன சூதுகள் ஒய்ந்தன வாதுகள்
திக்குத் திசையெல்லாம் திகைத்திடவே

ஏழைகள் எளியரின் தோழன்அக் காந்தியை
எப்படிப் புகழினும் போதாதே
வாழிய அவன்பெயர் ஊழியின் காலமும்
வையகம் முழுவதும் வாழ்ந்திடவே.

(கவிஞர் பதிப்பகம் வெளியிட்டுள்ள
'கவிதாஞ்சலி' எனும் நூலிலிருந்து)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் CONNECT 2020 மாநாட்டில்

- **தமிழ்நாடு இணையம் பாதுகாப்புக் கொள்கை 2020**
- **தமிழ்நாடு நம்பிக்கை இணையக் கொள்கை 2020**
- **தமிழ்நாடு பாதுகாப்பு மற்றும் நெறிமுறை சார்ந்த செயற்கை நுண்ணறிவு கொள்கை 2020**

வெளியிட்டார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 19.09.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பால் செப்டம்பர் 15 முதல் 19ஆம் தேதி வரை காணொலிக் காட்சி வாயிலாக நடத்தப்பட்டு வரும் 'CONNECT 2020' மாநாட்டில் பங்கேற்று, தமிழ்நாடு இணையப் பாதுகாப்புக் கொள்கை 2020 (Tamil Nadu Cyber Security Policy 2020), தமிழ்நாடு நம்பிக்கை இணையக் கொள்கை 2020 (Tamil Nadu Blockchain Policy 2020) மற்றும் தமிழ்நாடு பாதுகாப்பு மற்றும் நெறிமுறை சார்ந்த செயற்கை நுண்ணறிவு கொள்கை 2020 (Tamil Nadu Safe and Ethical Artificial Intelligence Policy 2020) ஆகியவற்றை வெளியிட்டார்கள்.

தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் நுட்பம் சார்ந்த தொழில் துறைகளில் தமிழ்நாடு முன்னிலை வகித்து வருகிறது. அரசுத் துறைகள் மக்களுக்கான அரசின் சேவைகளை இணையவழியில் அளித்து வரும் நிலையில், அச்சேவைகள் மற்றும் அவை சார்ந்த தகவல் உட்கட்டமைப்புகளை இணையவழி ஊடுருவல் மற்றும் தாக்குதல்களிலிருந்து திறம்படப் பாதுகாத்திட, மாநிலத்திற்கான இணையப் பாதுகாப்பு கொள்கையை வரையறுப்பது இன்றியமையாததாகிறது. அதன்படி, தகவல் தொழில்நுட்பவியல் துறையினால் உருவாக்கப்பட்ட **"தமிழ்நாடு இணையப் பாதுகாப்புக் கொள்கை 2020"** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். இக்கொள்கை, மாநிலத்தில்

இணையப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன், பாதுகாப்பு மீறல்களை தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் வழிவகுக்கும்.

தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த பல்வேறு இனங்களில் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களைப் புகுத்தி அதன்மூலம் உற்பத்தியைப் பெருக்கிடவும், மனித வளத்தை மேம்படுத்திடவும் தமிழ்நாடு அரசு உறுதி கொண்டுள்ளது. அதன்படி, அரசின் சமூக மற்றும் பொருளாதார நலத்திட்டங்களை இணையவழியில் நம்பகத்தன்மையுடன் கூடிய வெளிப்படையான முறையில் செயல்படுத்திட, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் ஒன்றான பிளாக்செயின் (Blockchain) எனப்படும் '**நம்பிக்கை இணையத்**' தொழில்நுட்பத்தைப் தமிழ்நாடு அரசுத் துறைகள் பயன்படுத்திடும் வகையில் தகவல் தொழில்நுட்பவியல் துறையினால் உருவாக்கப்பட்ட **"தமிழ்நாடு நம்பிக்கை இணையக் கொள்கை 2020"** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். இதன்மூலம், அரசின் மின்னாளுமைக்காக நம்பிக்கை இணையக் கொள்கை ஒன்றை அறிமுகப்படுத்திய முதல் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கிடும்.

அதுபோலவே, வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் ஒன்றான செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், பல்வேறு வகையிலான தரவுகளை அவற்றின் வகை, செயல்பாடு மற்றும் பரவல் போன்ற வகைகளில் கூராய்ந்து, அதன்மூலம் அவை தொடர்பான எதிர்காலத் தேவைகளை முன்கூட்டியே கணித்து, அதற்கான விரைவான தீர்வுகளையும் பரிந்துரை செய்யவல்லது. தற்சமயம், செயற்கை நுண்ணறிவுப் (Artificial Intelligence) பயன்பாடுகள் உலகளவில் மருத்துவ நோயறிதல், மருந்துப்பொருள் கண்டுபிடிப்புகள், சட்ட அமலாக்கம், இராணுவம், விண்வெளி, கல்வி, ஆளுமை, முதியோர் பராமரிப்பு போன்ற பல துறைகளில் மனித வாழ்க்கையோடு இணைந்து இயங்குகின்றது.

இத்தொழில்நுட்பத்தினை தமிழ்நாடு அரசுத் துறைகள் மக்களுக்கான இணையவழி சேவைகளை வழங்குவதில் பயன்படுத்திக் கொள்வதற்கான உத்திகளை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்பவியல் துறையினால் உருவாக்கப்பட்ட **"தமிழ்நாடு பாதுகாப்பு மற்றும் நெறிமுறை சார்ந்த செயற்கை நுண்ணறிவு கொள்கை 2020 (Tamil Nadu Safe and Ethical Artificial Intelligence Policy 2020)"** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். இதன்மூலம் வெளிப்படையான ஆளுமை மற்றும் வளர்ச்சி சார்ந்த இலக்குகளை தமிழ்நாடு எளிதாக எய்திட இயலும்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக நடத்தப்பட்டு வரும் **'CONNECT 2020'** மாநாட்டில், இந்த ஆண்டிற்கான சிறந்த தொழில்முனைவோருக்கான விருதினை சென்னை – கான்ஸ்யூமெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.கே.எல்.என்.சாய் பிரசாந்த் அவர்களுக்கும்; தனியார் துறையில் சிறந்த வகையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியதற்கான விருதினை லார்சன் அண்டு ட்யூப்ரோ லிமிடெட் – ஸ்மார்ட் வேர்ல்ட் அண்டு கம்யூனிகேசன் பிசினஸ் நிறுவனத்தின் நிருவாகத் துணைத் தலைவர் திரு.ஆர். சீனிவாசன் அவர்களுக்கும்; பொதுத் துறையில் சிறந்த வகையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியதற்கான விருதினை பதிவுத்துறைத் தலைவர் திருமதி ஜோதி நிர்மலா, இ.ஆ.ப., அவர்களுக்கும்; உலகளாவிய செல்வாக்கு பெற்ற நபருக்கான விருதினை ப்ரஷ் ஒர்க்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திரு.கிரீஷ் மாத்ருபூதம் அவர்களுக்கும்; சமூகத் தொழில்முனைவோருக்கான விருதினை கோவை – பர்பிள் அயர்னிங் நிறுவனத்தின் இயக்குநர் திரு.அமானுல்லா அவர்களுக்கும்; ஊக்குவித்திடும் வகையிலான முன்மாதிரி நபருக்கான விருதினை இந்திரி ஆக்சஸ் சர்வீஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு.இராமநாதன் அவர்களுக்கும்; கோவிட் சாதனையாளருக்கான விருதினை ஹெலிக்சான் நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் திரு.விஜய் சங்கர் ராஜா அவர்களுக்கும்; சகிப்புத் தன்மைக்கான விருதினை கோவை – சி.ஜி.வேக் நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் திரு.சுரேஷ் அவர்களுக்கும்; வழிகாட்டியாளர் விருதினை ப்யூச்சர் போக்கஸ் இன்போடெக் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு.எம்.வி. சுப்பிரமணியன் அவர்களுக்கும் வழங்கி கௌரவித்தார்கள்.

தமிழ் மொழியை தமிழர்கள் கற்கும் வகையில் கருநாடகாவில் மூடப்பட்ட தமிழ் பள்ளிகளை திறக்க வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
மாண்புமிகு கருநாடக முதலமைச்சர் திரு. **B.S. எடியூரப்பா** அவர்களுக்கு
எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் – 08.10.2020.

கருநாடகாவில் உள்ள தமிழர்கள் தங்களின் தாய்மொழியை கற்றுக்கொள்வதற்காக அங்குள்ள பல்வேறு மாவட்டங்களில் பல தமிழ்ப் பள்ளிகளை மாநில அரசு தொடங்கி இருக்கிறது. அங்குள்ள தனியார் தமிழ் பள்ளிகளுக்கு கருநாடக அரசு அங்கீகாரம் மட்டுமல்லாமல், மானியமும் வழங்கி வருகிறது.

இந்தநிலையில் கருநாடகா தமிழ் பள்ளிகள் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்திடம் இருந்து எங்களுக்கு கடிதம் வந்தது. அதில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பல தமிழ் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும், புதிய தனியார் தமிழ் பள்ளிகளை தொடங்குவதற்கு கருநாடக அரசு அங்கீகாரம் தருவதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பான கடிதத்தின் நகலை தங்களுக்கு இந்த கடிதத்துடன் இணைத்து அனுப்பி இருக்கிறேன். கருநாடக மாநிலத்தில் அனைத்து அம்சங்களிலும் பொருளாதார மேம்பாட்டுக்கு தமிழர்கள் குறிப்பிட்ட அளவில் பங்களிப்பை செய்து வருகின்றனர். கோலார் தங்கச் சுரங்கம், ஹட்டி தங்கச் சுரங்கம், சந்தூர் மங்கனீஸ் சுரங்கம், சிக்மங்களூர், மங்களூரில் உள்ள காபி தோட்டங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிகளுக்காக தமிழர்கள் அளித்துள்ள பங்களிப்பு அதிகமாகும். கருநாடகாவில் கட்டுமானத் தொழில், வேளாண்மைப் பிரிவுகளில் அவர்கள் மிகப் பெரிய அளவில் பங்களித்து வருகின்றனர்.

எனவே, கருநாடகாவில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்கள் பணியிடங்களை நிரப்ப வேண்டும், சமீபத்தில் மூடப்பட்ட தமிழ் பள்ளிகளை மீண்டும் திறக்க வேண்டும்.

தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு திறக்கப்படும் புதிய தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் அல்லது அனுமதியை அளிக்க வேண்டும், வேறு மொழிப் பள்ளிகளாக மாற்றப்படும் பள்ளிகளை மீண்டும் தமிழ் பள்ளிகளாக மீட்டெடுக்க வேண்டும். இதற்கான உடனடி நடவடிக்கைகளின் மூலம் தமிழ் மொழி பேசும் மக்களின் நலனை காப்பாற்ற வேண்டும்.

அரியலூர் மாவட்டம்

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று காலத்தில் சத்துணவுத் திட்டத்தில் உணவு அருந்தும் மாணாக்கர்களுக்கு உலர் உணவு வழங்கிய முதல்வர் அவர்களுக்கு பெற்றோர்களின் நன்றி பெருக்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வித்துறைக்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், கொரோனா வைரஸ் நோய்த் தொற்று காரணமாக ஊடரங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளதால், ஏழை, எளிய பள்ளி மாணவ, மாணவியர்களின் குடும்பத்தினர் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவியர்களின் துயர் துடைக்கும் வகையில் பசியின்றி உணவு அருந்த அரிசி, பருப்பு போன்ற உலர் உணவு பொருட்கள் மே 2020 முதல் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் பயன்பெற்று வரும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஜுன் 2020 முதல் பள்ளி நாட்களில் பள்ளி தொடங்கும் வரை நாளொன்றுக்கு 100 கிராம் அரிசி, 40 கிராம் பருப்பு ஆகியவைகளும், மற்றும் உயர் தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 150 கிராம் அரிசி, 56 கிராம் பருப்பு ஆகியவைகளும் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டு, அரியலூர் மாவட்டத்தில், சத்துணவுத் திட்டத்தின் கீழ், பயன்பெற்று வரும் மாணவ, மாணவியருக்கு மே 2020 மாதம் முதல் உலர் உணவுப் பொருள்களான அரிசி மற்றும் பருப்பு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், செப்டம்பர் 2020 மாதம் முதல் முட்டைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் ஜுன் 2020 முதல் ஆகஸ்ட் 2020 மாதம் முடிய உள்ள காலத்திற்குரிய உணவுப்பொருளாக தொடக்கப்பள்ளி பயிலும் ஒரு நபருக்கு 6.500 கி.கி. அரிசியும், 2.600 கி.கி பருப்பும், உயர் தொடக்கப்பள்ளி பயிலும் ஒருவருக்கு 9.750 கி.கி. அரிசியும், 3.640 கி.கி. பருப்பும், 65 பள்ளி வேலை நாட்களுக்கு வழங்கப்பட்டது. இச்சீரிய திட்டத்தின் கீழ், அரியலூர் மாவட்டத்தில் 31,549 தொடக்கப்பள்ளி மாணாக்கர்களும், 20,111 உயர் தொடக்கப்பள்ளி மாணாக்கர்களும் என 51,660 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1.79 கோடி மதிப்பீட்டில் 686.61 மெ.டன் உலர் உணவு பொருட்கள் மற்றும் 5,16,600 முட்டைகள் வழங்கப்பட்டு, பயனடைந்து வருகின்றனர்.

அதன் அடிப்படையில் அரியலூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட தவுத்தாய்குளம் ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளின் பெற்றோர்களுக்கு உலர் உணவு பொருட்களை பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தனர்.

அரியலூர் மாவட்டம், தவுத்தாய்குளத்தைச் சேர்ந்த மாணவி கிருத்திகா என்பவரின் தாயார் திருமதி மலர்கொடி என்பவர் கூறியதாவது,

“நான் தவுத்தாய்குளத்தில் கிராமத்தில் வசித்து வருகிறோம். எனது கணவர் சுப்ரமணியன் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வருகிறார். மேலும், இக்கொரோனா பேரிடர் காலத்தில் கூலி வேலை சரியான முறையில் கிடைக்காத காரணத்தினால், குடும்பத்தை நடத்துவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கு. மேலும், எங்கள் குழந்தை கிருத்திகா தவுத்தாய்குளம் தொடக்க பள்ளியில் 5ஆம் வகுப்பு படித்து வருகிறாள். அவள் பள்ளிக்கூடத்திற்கு செல்லும்போது, அங்கு சத்துணவு

மாணவி கிருத்திகா என்பவரின் தாயார் திருமதி மலர்கொடி

சாப்பிடுவாள். அவளுக்குத் தேவையான ஊட்டச்சத்து நிறைந்த உணவு முட்டை, பயிறு வகைகள் சாப்பிட்டு நன்றாக ஆரோக்கியமாக இருந்தாள். கொரோனா பேரிடர் காலத்தில் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதால், சத்துணவு சாப்பிடவும் வழியின்றி போனதால், அவளுக்கு தேவைப்படும் ஊட்டச்சத்து நிறைந்த உணவு எங்களால் வழங்குவது ரொம்ப கஷ்டமாக இருந்தது. இந்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சத்துணவு சாப்பிடும் அனைத்து குழந்தைகளுக்கும் சமைத்த உணவுக்கு பதில் உலர் உணவு பொருட்களாக அவர்களின் பெற்றோர்களிடத்தில் வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதன் அடிப்படையில், எங்களுடைய குழந்தைக்கும் மே மாதம் முதல் உலர் உணவு பொருட்களை பள்ளியின் மூலமாக பெற்று எங்கள் குழந்தைக்கு சத்தான ஆரோக்கியமான உணவுகளை வழங்கி வருகின்றோம். மேலும், செப்டம்பர் மாதம் முதல் ஒவ்வொரு குழந்தைக்கும் தலா 10 முட்டைகளும் தருகிறார்கள். இதன் மூலம் எங்கள் குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தி கூடுவதுடன், ஆரோக்கியமுடனும் இருக்கிறாள். கொரோனா பேரிடர் காலத்தில் கூலி வேலை சரியாக கிடைக்காத சூழ்நிலையிலும் எங்களது குழந்தைக்கு சரியான ஊட்டச்சத்து மிக்க உணவு பொருட்கள் கிடைப்பதற்கு வழிவகை செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்''.

அரியலூர் மாவட்டம், தவுத்தாய்குளத்தைச் சேர்ந்த மாணவன் சபரிவாசன் என்பவரின் தாயார் திருமதி பானுமதி என்பவர் கூறியதாவது,

நானும் எனது கணவர் சுரேஷ்குமாருடன் தவுத்தாய்குளம் கிராமத்தில் வசித்து வருகிறோம். எங்கள் குடும்பத்தின் பொருளாதாரம் எனது கணவர் மேற்கொண்டு வரும் விவசாயப்பணி சார்ந்தே அமைந்துள்ளது. மேலும், கொரோனா பேரிடர் காலத்தில் போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கு வெளியில் செல்ல இயலாத காரணத்தினால், விவசாயத்தை சிறப்பான முறையில் மேற்கொள்ள முடியவில்லை. எனவே, எங்கள் உணவு உள்ளிட்ட தேவைகளுக்காக பிறரை சார்ந்து வாழும் சூழ்நிலை ஏற்பட்டது. இச்சூழ்நிலையில் 4ஆம் வகுப்பு பயிலும் எங்களது மகன் சபரிவாசனுக்கு ஆரோக்கியமான உணவு பொருட்களை வாங்கி தர முடியாத நிலை இருந்தது. இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு

மாணவர் சபரிவாசன் என்பவரின் தாயார் திருமதி பானுமதி

முதலமைச்சர் அவர்கள் சத்துணவு சாப்பிடும் அனைத்து குழந்தைகளுக்கும் உலர் உணவு பொருட்கள் வழங்கப்படும் என அறிவித்தது, மிகவும் சந்தோஷமாக இருந்தது. பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் எங்களது குழந்தைக்கு சரியான ஊட்டச்சத்து மிக்க உணவு பொருட்கள் கிடைப்பதற்கு வழிவகை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்''.

– க.சரவணன்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
அரியலூர் மாவட்டம்.

ஆகஸ்ட் 1972 "தமிழரசு" இதழிலிருந்து...



களத்தில் உயிர் நீத்த கன்னர் ஆறுமுகம்

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/18-20
& WPP No. TN/PMG (CCR) 518/18-20

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

அண்ணல் காந்தியடிகளின் 152ஆவது பிறந்த நாளையொட்டி

தமிழ்நாடு அரசின் சார்பில் 02.10.2020 அன்று சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **பன்வாரிலால் புரோகித்** அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

Published by Dr. P. SANKAR, IAS, on behalf of Information and Public Relations Department Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr. P. SANKAR, IAS